இரண்டாம் பதிப்பு
விலை - 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 249
ஆடி 17ஆம் நாள்
புதன்கிழமை
02 ஓகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

கேப்பாபிலவு காணி விவகாரம்

## சம்பந்தருக்கு மைத்திரி மழுப்பல் பதில்

### விடப்படும் ஆனால் காலம் தெரியாது

யாழ்ப்பாணம், ஓக. 2
கேப்பாபிலவு காணி விடுவிப்பு எப்போது எனத் திட்டவட்டமாகக் கூறுவதைத் தவிர்த்துவிட்டார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. ஜூன் மாதம் 30ஆம் திகதிக்குள் மக்களின் காணிகளை விடுவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அவர் உறுதியளித்திருந்தார். அதனை ஞாபகப்படுத்தி கடந்த மாத இறுதியில் சம்பந்தர் அரச தலைவருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதற்கு அரச தலைவரின் செயலர் மழுப்பலான ஒரு பதில் கடிதம் எழுதியுள்ளார். அரச தலைவரின் செயலாளரிடம் இருந்து அந்தக் கடிதம் அனுப்பி >> 25

அன்னப்பட்சியில் நல்லூர்க் கந்தன்



நல்லூர்க் கந்தனின் வருடாந்தத் திருவிழாவில் நேற்று 5ஆம் நாளில் வேலவன் அன்னப்பட்சிவாகனத்தில் அடியவர்களுக்கு காட்சியளித்தார்.

# நொண்டி குதிரைக்கு சறுக்கினது சாட்டு

### பொலிஸார் மீதான தாக்குதலால்தான் படையினரை அகற்ற முடியவில்லையாம்

கொழும்பு, ஓக. 2
பொலிஸார் மீதான தாக்குதல்களால்தான் வடக்கிலிருந்து படைமுகாம்களை எங்களால் அகற்ற முடியாதிருக்கின்றது என்பதை மேற்குலகம் புரிந்துகொள்ளவேண்டும்.
இவ்வாறு கூட்டு அரசின் பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றுத் தெரிவித்தது.
முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு உரியவாறு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை இவ்வாறான சம்பவங்களால் எழுந்துள்ளதாகவும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.
கட்சியின் செய்தியாளர் சந்திப்புஅதன் தலைமையகத்தில் நடைபெற்றது. கட்சியின் மையக் குழு உறுப்பினரும் மூத்த அமைச்சருமான மகிந்த சமரசிங்க கேள்விகளுக்குப் பதிலளித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணத்தில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் அரசு சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளது. பொலிஸார் ஊடாகக் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது.
இவ்வாறான சம்பவங்களால்தான், வடக்கிலிருந்து படைமுகாம்களை அகற்ற முடியாதுள்ளது. மேற்குலகமும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். 30 வருடங்களாக நாட்டில் போர் நடைபெற்றது. தற்போது ஐக்கியம் பற்றிப் பேசப்பட்டுவருகின்றது. எடுத்த எடுப்பில் முகாம்களை அகற்றிவிடமுடியாது.
12 ஆயிரம் வரையான போராளிகள் மறுவாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உரிய வகையில் மறுவாழ்வளிக்கப்பட்டதா என்பது பற்றி ஆராயவேண்டும். பாதுகாப்பின் நிமித்தம் வடக்கில் முகாம்கள் இருக்க வேண்டும் என்றார். (உ-5)

## மைத்திரி கேட்ட கேள்வி

கொழும்பு, ஓக. 2
"கைப்பற்றுகின்ற போதைப் பொருள்களை என்ன செய்கின்றீர்கள்?" இவ்வாறு அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்றுத் திடீரெனக் கேட்டார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க விடமே அவர் இந்தக் கேள்வியைக் கேட்டார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. போதைப் பொருள் பாவனை அதிகரிப்புத் தொடர்பான விடயம் >> 25

## பொலிஸார் மீது வாள்வெட்டு: இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 2
கோப்பாய் பொலிஸாரை வாளால் வெட்டிய சந்தேகத்தில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய அறிக்கைக்கு அமைவாகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். >> 25

இலங்கை படகால் தமிழகத்தில் பரபரப்பு
விரிவு பக். 11

மகேஸ்வரி நிதிய மோசடி விசாரணை அவசியம்
விரிவு பக். 03

போராட்டங்கள் இனி இல்லை: பெற்றோலிய சங்கம்
விரிவு பக். 04

சைட்டம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இன்று
விரிவு பக். 09

இப்படிச் சொல்கிறார் அமைச்சர் றிசாத்
விரிவு பக். 07

பொலிஸார் மீதான தாக்குதலை அடுத்து பாதுகாப்பு என்ற பெயரில்

## யாழ்ப்பாணத்தில் முப்படைகளையும் களமிறக்குவதை ஏற்கவே முடியாது

### தமிழ் அரசுக் கட்சி திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 2
பொலிஸார் மீதான வாள் வெட்டுச்சம்பவத்தைக் காரணம் காட்டி முப் படைகளையும் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் களமிறக்குவதை ஒருபோதும் ஏற்க முடியாது.'
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா திட்டவட்டமாகத் தெரிவித்தார்.
கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் கடந்த வார இறுதியில் கொக்குவிலில் வாள்வெட்டுக்கு இலக்காகினர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வந்திருந்த பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பொலிஸார் சிறப்பு அதிரடிப்படையினருக்கு மேலதிகமாக முப்படையினரும் களமிறக்கப்படுவர் என்று அறிவித்தார். >> 25

## மைத்திரி, ரணில் மீது சீறிச் சினந்த கலா

### மருதங்கேணியில் காரசாரமான பேச்சு அதிர்ந்து போயினர் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஓக. 2
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும் அவர்களது அலுவலக அதிகாரிகளையும் இராஜாங்க அமைச்சர் >> 25

## வறட்சியை எதிர்கொள்ள படையினர் பணியில்

### மைத்திரி பணிப்பு

கொழும்பு, ஓக. 2
வறட்சியைச் சமாளிக்க இராணுவ அதிகாரிகளைப் பணிக்கமர்த்துமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டார்.
பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக ஒவ்வொரு பிரதேச செயலக அலகுகளிலும் இராணுவ அலுவலர்களை நியமிக்குமாறு >> 25

## புளொட்டின் உறுமலையும் மீறி ஜெயசேகரன் இன்று பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஓக. 2
வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நியமன ஆசனத்தை சுழற்சி முறையில் யாழ். வணிகர் சங்கத் தலைவர் ஆர். ஜெயசேகரனுக்கு வழங்க புளொட் அமைப்பின் தலைவர் எதிர்ப்புத் >> 25

சுமந்திரன் கொலை முயற்சி

## ஆஸி. விரைகிறது பொலிஸ் குழு

யாழ்ப்பாணம், ஓக. 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற >> 25

அரச தலைவர் செயலக இழுபறியால்

## பாதிக்கப்படும் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 2
கரவெட்டிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்ட மாகாண >> 25




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறட்சிப் பாதிப்புகளை உடன் அறியப் பணிப்பு

கொழும்பு, ஒக. 2
வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனடியாக ஆராய்ந்து, மக்களுக்குத்தேவையானஉதவிகளை வழங்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அரச தலைவர் பணித்துள்ளார்.

அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுற்பகல்நடைபெற்றசிறப்புக் கலந்துரையாடலின் போதே இந்தப் பணிப்புரை விடுவிக்கப்பட்டது.

அண்மையில்ஏற்பட்டவெள்ளம், மண்சரிவு என்பவற்றால் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. அந்த மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட இடர் முகாமைத்துவச் செயற்பாடுகளின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம்தொடர்பாகக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

"வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களுக்கான நலன்புரிச் செயற்பாடுகளை ஆராய வேண்டும். அதற்கு பிரதேசசெயலக மட்டத்தில் படையினரை நியமிக்க வேண்டும். மக்கள் பலர் அன்றாடவாழ்க்கைப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். அவர்களுக்கு உடன் உதவுவதற்கு படையினரின் உதவிகளைப் பெற முடியும்." என்று அரச தலைவர் குறிப்பிட்டார். (ற-ஜ-10)



## நிலக்சனின் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக. 2
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவரும் (2004 உயர்தரம்) யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவனும்ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சனின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நடைபெற்றது. அதற்கு முன்னதாக ஊடகவியலாளர்பொதுநினைவுத்தூபியில் (பிரதான வீதியில், யாழ் நீதிமன்ற வளாகத்துக்கு அருகில்) மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (ற-37)

## நெவில் பெர்னான்டோவில் இலவச மருத்துவம் ஆரம்பம்

கொழும்பு, ஒக.2
அரசிடம் கையளிக்கப்பட்ட நெவில் பெர்னான்டோ மருத்துவமனையில் நேற்று முதல் இலவச மருத்துவ சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. மருத்துவமனையின் தலைவர் மருத்துவர் அஜீத் மெண்டிஸ் முதலாவது நோயாளியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

இந்தமருத்துவமனைசுகாதாரஅமைச்சின் கீழ் இயங்கும் போதனா மருத்துவமனையாக இனிச் செயற்படும். அனைத்து நோய்களுக்கான சிகிச்சைகளும் இங்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனையில் நேற்று மதியம் வரை சுமார் 100 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. 600 படுக்கைகள் மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ளன. சகல நோய்களுக்குரிய மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனையின் அத்தியாவசிய தேவைகளுக்காக அமைச்சரவை ஊடாக 20 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. சிறப்பு மருத்துவநிபுணர்கள், மருத்துவர்கள் அங்கு சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என்று கூறப்பட்டது.

"இந்த மருத்துவமனையின் மனித வலுப் பிரச்சினைக்குத்தீர்வுபெற்றுக்கொடுக்கப்படும். எதிர்காலத்தில் கொழும்பின் போதனா மருத்துவமனையாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கைஎடுக்கப்படும்" என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (ஜ-10)

# 7 வயதுச் சிறுமி வன்கொடுமை: 27 ஆண்டுகள் கடுழியச் சிறை

வவுனியா, ஒக. 2
வவுனியா போகஸ்வேவ பிரதேசத்தை சேர்ந்த 7 வயது சிறுமியை கடத்திவன்கொடுமைக்குஉள்ளாக்கியவருக்கு 27 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது வவுனியா மேல் நீதிமன்று.

2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி வவுனியா போகஸ்வேவ பகுதியைச் சேர்ந்த 7 வயது சிறுமி கடத்தப்பட்டு வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டார். அது தொடர்பில் முத்துபண்டாகே செனரத் அனுர சாந்த சரத்குமார (வயது 56) என்பவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் நடைபெற்றது.

கடந்த மார்ச் மாம் 16 ஆம் திகதி 7 வயது சிறுமியை கடத்தியமை மற்றும் பாரதூரமான பாலியல் துர்நடத்தை புரிந்தமை என்ற 2 குற்றச்சாட்டுக்கள்எதிரிமீதுசுமத்தப்பட்டன. வழக்கு விசாரணை இடம்பெற்று தீர்ப்பு நியமிக்கப்பட்டிருந்தது. நேற்று இந்த வழக்கு விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிக்கு எதிரான இரண்டு குற்றச்சாட்டுக்களும், வழக்குத் தொடுநர் தரப்பால் சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில் எதிரியைக் காண்பதாக வவுனியா மேல்நீதிமன்றநீதிபதிபாலேந்திரன் சசிமகேந்திரன் தெரிவித்தார். தண்டனை தீர்ப்பு வழங்கும் போது சிறப்புக்காரணத்தைச்சுட்டிக்காட்டினார்.

"நான்மிகவும்கஷ்டநிலையிலேயே எனதுபிள்ளைகளைவளர்ந்துவருகின்றேன். சமூகத்திலேசிறுபிள்ளைகளுக்குஎனதுமகளுக்குஏற்பட்டது போன்று பல்வேறு அநியாயங்கள் இடம்பெற்று வருகின்றன. எதிர்காலத்தில் இவ்வாறு அநியாயங்கள் இடம்பெறாமல் நீதிபதி ஐயா தடுக்க வேண்டும்" என கண்ணீர் மல்க பாதிக்கப்பட்டசிறுமியுடையதாயார் சாட்சியமளித்தார்.

அதை மன்றில் சுட்டிக்காட்டிய வவுனியா மேல் நீதிமன்று நீதிபதி பாலேந்திரன்சசிமகேந்திரன், இந்த எதிரிக்குஎதிரானமுதலாவதுகுற்றச்சாட்டான 16 வயதிலும் குறைந்த பெண் பிள்ளையை சட்ட ரீதியான பாதுகாவலரிடமிருந்துகடத்தியகுற்றச்சாட்டுக்காக அதிகபட்ச தண்டனையாக 7 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்தார்.

எதிரிக்கு எதிரான இரண்டாவது குற்றச்சாட்டான 7 வயது சிறுமியை பாரதூரமான பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டுக்கு அதிக பட்ச தண்டனையாக 20 வருடகடூழியசிறைத் தண்டனை விதித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 இலட்சம் ரூபா நட்டஈட்டை செலுத்த வேண்டும். செலுத்தத்தவறும்பட்சத்தில் 2 வருட கடூழிய சிறைத்தண்டனையும், தண்டப்பணமாக பத்தாயிரம் ரூபாவும் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (ற-ஜ-10)

## சிறப்புக் குழுக்கள் மூலம் அமைதி ஏற்படுத்தப்படும்

### பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஒக. 2
சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வடமாகாணத்தில் அமைதியான நிலை ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்

நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்ற பொலிஸ்மா அதிபர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்பு அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
நாம் அனைவரும் ஏதோ ஒருவகையில் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக உள்ளோம். வடக்கில் நடக்கும் சட்டவிரோதமான செயற்பாடுகளை கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும். அது எமது கடமையாகும்.

யாழ்ப்பாணத்தில்இடம்பெற்றவாள் வெட்டுச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வடக்குமாகாணத்தில் இடம்பெறுகின்ற சட்ட விரோத செயற்பாடுகளைகட்டுப்படுத்தசந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு முப்படையினரின் உதவிகளும் பெறப்படும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெறுகின்ற குற்றச்செயல்கள் தொடர்பாக எமக்குத் தெரிகின்ற தகவலை விட கிராம மக்களுக்கு அதிகளவு தகவல்கள் கிடைக்கும். அவற்றை எமக்கு வழங்கினால்நாம்விரைந்துசெயற்பட்டு குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் – என்றார்.

கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் உள்ள நெலும்பியசவில் (தாமரைதடாகத்தில்) இந்தச்சந்திப்பு நடந்தது. பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மாஅதிபர் மகேஸ்வெலிக்கன்ன, கிளிநொச்சி உதவிபொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ச, முல்லைத்தீவு மாவட்ட உதவி பொலிஸ்அத்தியட்சகர், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலையபொறுப்பதிகாரிகள், அதிகாரிகள், முல்லைத்தீவுமாவட்டச்செயலர் ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி உதவி பிரதேச செயலாளர், சட்ட வைத்தியஅதிகாரிசிவரூபன், கிராம சேவகர்கள், சிவில் அமைப்புக்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர். (ற-6)

## பாகிஸ்தான் தலைமை அமைச்சர் சாகித் அப்பாஸி



இஸலாமபாத், ஒக. 2
பாகிஸ்தான்தலைமை அமைச்சரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிலையில் புதிய தலைமை அமைச்சராக சாகித் ககான் அப்பாஸி தெரிவுசெய்யப்பட்டார்.

பாகிஸ்தானின்தலைமைஅமைச்சராக இருந்த நவாஸ் ஷெரிப், பனாமா ஊழல் குற்றச்சாட்டில் அந்த நாட்டின் உச்சநீதிமன்றத்தால் கடந்த வெள்ளிக்கிழமை பதவிநீக்கப்பட்டார். இதையடுத்தே அடுத்த தலைமை அமைச்சருக்கானதேர்தல்பாகிஸ்தான்நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. தலைமை அமைச்சருக்கான வேட்பாளர்களில் நவாஷ் ஷெரிப்பின் தம்பி ஷபாஸ் ஷெரிப், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் முக்கியஸ்தரான சாகித் ககான் அப்பாஸி இருவருக்கும் இடையில் கடும்போட்டிநிலவியது. 342 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டநாடாளுமன்றத்தில் 221 சட்டமன்றஉறுப்பினர்களின் ஆதரவைப்பெற்று தலைமை அமைச்சரானார் அப்பாஸி. (ம)

## குற்றங்களைத் தடுக்க ரோந்துப் பணி தீவிரம்

யாழ்ப்பாணம், ஒக. 2
யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முதற்கட்டமாக ரோந்துகளைத் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களுக்கிடையிலானசிறப்புக்கலந்துரையாடல் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தலைமையில் யாழ் பிராந்திய பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பொலிஸார்எவ்வாறுசெயற்பட்டுவருகின்றனர், பொதுமக்கள் இதுதொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பனபோன்றவிடயங்கள் அதில் ஆராயப்பட்டன.

அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தத் தேவை ஏற்படும் பட்சத்தில் இராணுவத்தினர், கடற்படையினர், வான்படையினர் மற்றும்விசேடஅதிரடிப்படையினர் இணைந்து செயற்படுவர் என்று பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

குற்றச்செயல்கள்மற்றும்சந்தேகநபர்களின் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து தாம் அறிந்த தகவல்களை பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் பாலித பெர்னாண்டோ, யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி, முப்படைகளின் அதிகாரிகள், மாவட்ட சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள் உட்படப்பலர்கலந்துகொண்டனர். (ற-8)

## உறவுகளைத் தேடும் போராட்டம் தொடர்கிறது

### நேரில் சென்று சந்தித்தார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், ஒக. 2
காணாமல்ஆக்கப்பட்டவர்களைவெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி மருதங்கேணியில் நடத்தப்படும் தொடர் போராட்டம் நேற்று 140 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

போராட்டத்தில் ஈடுபடடுள்ள மக்களை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றுச் சந்தித்தார்.

"காணாமல் ஆக்கப்பட்டவர்சம்பந்தமாக தீர்வைப் பெற்றுத்தருவதற்குத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அதிககவனம்செலுத்திவருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நடத்தப்படும் போராட்டம் தொடர்பில் அரசதலைவருடன் விரைவில் கதைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்" என்று அவர் தெரிவித்தார்.

காணாமல்ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும் விடுவிக்கவும்வலியுறுத்தி வடக்கு, கிழக்கின் 5 மாவட்டங்களில் தொடர் போராட்டங்கள் மூன்று மாதங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்படுகின்றது. (ற-ஜ-10,109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியா விபத்தில் இருவர் படுகாயம்

வவுனியா, ஓக. 2
வவுனியாவில் நேற்றுக் காலை நடந்த விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர். ஹைஏஸ் மற்றும் ஹன்ரர் வாகனங்களே விபத்துக்குள்ளாகின. மூன்று முறிப்பு, ஏ 9 வீதியில் காலை 6 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது.
கொழும்பில் இருந்து சுண்ணாம்புப் பைக்கற்றுக்களுடன் சென்ற ஹன்ரர் வாகனம் மூன்று முறிப்பு பகுதியில் பழுதடைந்து நின்றது. வாகனத்தின் சாரதி வாகனத்தைத் திருத்தம் செய்து கொண்டிருந்தார். கொழும்பில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற ஹைஏஸ் வாகனம், ஹன்ரர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.
காயமடைந்தவர்கள் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ற-ஜ-10)

## சைட்டத்துக்கு எதிராக நேற்றும் ஊர்வலம்

கொழும்பு, ஓக. 2
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் தொடர் பேரணி நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.
பேராதெனிய கலஹா சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி, மாவனெல்ல நகரில் நேற்று முன்தினம் நிறைவடைந்தது. தொடர்ந்து மாவனெல்லையில் இருந்து நேற்று ஆரம்பிக்கப்பட்ட பேரணி நெலும்தெனிய வரை நடந்தது. அனைத்துப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் ஆரம்பித்துள்ள எதிர்ப்புப் பேரணி இன்னும் 3 தினங்களில் கொழும்பை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-10)

# மகேஸ்வரி நிதிய மோசடி: விசாரணை அவசியம்

## சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

வடமராட்சி, ஓக.1
மகேஸ்வரி நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட மணல் அகழ்வு மாவட்டச் செயலகத்தின் ஊடாக நடத்தப்பட்டுள்ளதால் அங்கிருக்கும் பதிவுகளைக் கொண்டு மாவட்டச் செயலக ரீதியாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
வடமராட்சி, மருதங்கேணி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட மண் அகழ்வில் சம்பாதிக்கப்பட்ட பணம் யார் கைகளில் சென்றது என்பத தொடர்பில் பரந்துபட்ட விசாரணை நடத்த வேண்டும் என்று அரசிடம் கோருகின்றோம். இது சாதாரண விடயமல்ல. இந்தப் பிரதேசம் மூலம் பெறப்பட்ட பணம் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படவில்லை. தனிப்பட்ட சிலரின் கைகளுக்குச் சென்றுள்ளது.
மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக எம்மால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வெற்றி பெற்றது. மகேஸ்வரி நிதியத்தின் மண் பெறுதல் முறைமை தவறானது என்று நீதிமன்று தீர்ப்பளித்தது. ஆனால் சட்டத்துக்கு முரணான வகையில் மகேஸ்வரி நிதியம் செயற்பட்டு பெற்ற பணத்தை மீள ஒப்படைக்குமாறு தீர்ப்பில் குறிப்பிடவில்லை.
இந்த நிதி பிரதேச மக்களின் அபிவிருத்திக்குப் பயன்படும் வகையில் குடியியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்ய முடியும். பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சஞ்சீவனும், நானும் இணைந்து நிதிக்குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்திருக்கின்றோம். அண்மையில் கூட சஞ்சீவன் வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டிருந்தார். குற்றவியல் ரீதியில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
பிரதேச சபை குடியியல் வழக்கொன்றைத் தாக்கல் செய்ய முடியும். என்றார்.
பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பிரதேசம் மூலம் பெறப்படும் நிதி போதாதுள்ளது. அபிவிருத்திகள் தடைப்படுகின்றன என்று பிரதேச சபைச் செயலாளர் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார். பல்வேறு ஈட்டுகைகள் மூலம் கடந்த காலங்களில் 30 மில்லியன் ரூபாவைப் பிரதேச சபை பெற்றுக் கொண்டது. மண் அகழ்வின் மூலம் அந்த நிதி பெற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-109)

# துரோகம் இழைத்தவர் கருணா

### கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, ஓக. 2
தமிழ், முஸ்லிம் மக்களை நம்ப வைத்து அவர்களுக்குத் துரோகம் இழைத்தவர் கருணா. அவ்வாறானவர் தமிழர்களை முஸ்லிம்களிடம் இருந்து மீட்பதற்கான போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறார். இது அவரது இனத்துவேசத்தையும், சுயநல அரசியல் நோக்கத்தையும் எடுத்துக் காட்டுகிறது.
இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமானயு.எல்.எம்.என். முபீன் தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
தனது சுயநல அரசியலுக்காக தமிழ் முஸ்லிம் மக்களின் உறவைச் சீர்குலைத்து அதில் குளிர்காய்வதற்கு கருணா முயற்சிப்பது அருவருக்கத்தக்கது. கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டளைத் தளபதியாக இருந்தவர் கருணா. கிழக்கு மாகாணத்தில் இனத்துவேச இனவாத நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி வந்தவர். இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து செயற்பட்டபோதும், மீள் குடியேற்றத்துக்கான முன்னாள் பிரதியமைச்சராக இருந்த போதும் இந்த மனநிலையுடனே செயற்பட்டு வந்தார். அதற்கு அவரது அறிக்கை போதுமானது. கிழக்கில் முஸ்லிம்களின் படுகொலை, வடக்கில் முஸ்லிம்களின் வெளியேற்றம் என தமிழ் முஸ்லிம் உறவைச் சீர்குலைத்து அழிவு நாசங்களைப் புரிந்தவர் கருணா.
தற்போது மீண்டும் களத்துக்கு வந்து தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்று நீலிக் கண்ணீர் வடிக்கிறார். மீண்டும் அதிகாரத்துக்கு வந்து சுகபோகங்களை அனுபவிப்பதற்காக கருணா வகுக்கும் கபடத்தனமான திட்டங்களை தமிழ் சமூகம் நிராகரிக்கும் என்பது உறுதி. வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழும் சிறுபான்மையினர் ஒற்றுமைப்படுதலின் ஊடாகத்தான் தமக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.என்றார். (ற-ஜ-10)

## துப்பாக்கி முனையில் வங்கிக் கொள்ளை

பதுளை, ஓக. 2
துப்பாக்கி முனையில் பணம், மற்றும் முகாமையாளர் அணிந்திருந்த சங்கிலி என்பன கொள்ளையடிக்கப்பட்டன. இந்த ச் சம்பவம் புத்தளம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஹொரபொக்க பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தின் வங்கி ஒன்றில் நேற்று நடந்துள்ளது.
கொள்ளையில் ஈடுபட்டவர்கள் முகத்தை மூடி துணி கட்டியிருந்தனர். கைகளில் துப்பாக்கிகள் வைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வங்கி முகாமையாளரான பெண் கழுத்தில் அணிந்திருந்த 2 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை கொள்ளையர்கள் அறுத்துள்ளனர். வங்கிப் பெட்டகத்திலிருந்த ஒரு இலட்சம் ரூபா பணத்தையும் எடுத்துக் கொண்டு அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ற-ஜ-10, 41)

## வல்லப்பட்டை கடத்த முயன்றவர் கைது

கொழும்பு, ஓக.2
6 இலட்சம் ரூபா பெறுமதியான வல்லப்பட்டைகளைக் கடத்த முயற்சித்தவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். சுமார் 8 கிலோ கிராம் வல்லப்பட்டைகள் அவரது பயணப் பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். அவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-10)

# வடமராட்சி கிழக்கில் கடலட்டை வாடி அமைக்கத் தடை

வடமராட்சி, ஓக.1
வடமராட்சி கிழக்கில் கடலட்டைத் தொழில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு வாடி அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கை ஒருங்கிணைப்புக் குழுவால் நிராகரிக்கப்பட்டது.
வடமராட்சி, மருதங்கேணி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. வாடிக்கான அனுமதியை வழங்கக் கோரி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரைக்காக வைக்கப்பட்ட வாடி வழங்குவது தொடர்பான தீர்மானத்தை ஒருங்கிணைப்புக் குழு நிராகரித்தது.
வடமராட்சி கிழக்கில் கடலட்டை தொழில் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட அனுமதியைக் கொண்டு தென்பகுதி மீனவர்கள் உட்படப் பல தரப்பினர் கடலட்டை தொழிலில் ஈடுபடுகின்றனர்.
இதனால் தமது கரைவலைத் தொழில் பாதிக்கப்படுகின்றது. இது தொடர்பாகத் தெரியப்படுத்தியும் அதிகாரிகள் பாராமுகமாக இருக்கின்றனர் என்று பிரதேச மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.
5 கிலோமீற்றருக்கு அப்பாலே கடலட்டை தொழில் செய்ய முடியும். ஆனால் இந்த விடயத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று பிரதேச செயலர் அந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார். குடாரப்பு கார்மேல் மாதா கூட்டுறவுச் சங்கம், நாகர் கிழக்கு கூட்டுறவுச் சங்கம் என்பன இது தொடர்பில் கடிதம் அனுப்பியுள்ளன என்று கடிதங்களை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.
அந்தச் சங்கங்களின் உறுப்பினர்கள் கூட்டத்துக்கு வராததால் அந்தக் கடிதங்களை வலுவற்றதாக அறிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.
இந்த விடயங்கள் தொடர்பில் பிராந்திய கடற்படைத் தளபதிக்கு அறிக்க வேண்டும். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைத் தெரியப்படுத்த வேண்டும். சட்டரீதியற்ற நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். (ற - 109)

> “வடமராட்சி கிழக்கில் கடலட்டை தொழில் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் தமது கரைவலைத் தொழில் பாதிக்கப்படுகின்றது என்று பிரதேச மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## வட மேல் மாகாண சபையில் குழப்பம்

அம்பாந்தோட்டை, ஓக. 2
அம்பாந்தோட்டை துறைமுக விவகாரத்தால் வடமேல் மாகாண சபையில் நேற்று கடும் வாக்குவாதம் நிலவியது. அம்பாந்தோட்டைதுறைமுகத்தைச் சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதற்குப் பல எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன.

இந்த விவகாரம் நேற்றைய சபை அமர்வில் விவாதிக்க ப்பட்டது. அமைச்சர்கள் தவிர ஏனைய ஆளும்தரப்பு உறுப்பினர்கள் கையில் கறுப்புப் பட்டியணிந்து சபைக்கு வந்தனர். அதற்கு எதிர்த்தரப்பினர் தமதுஎதிர்ப்பைவெளிப்படுத்தினர். ஒப்பந்தம் தொடர்பில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. இரு தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ஜ-10)

## ஆயிரத்து 856 பாடசாலைகளில் சிரமதானம்

மட்டக்களப்பு, ஓக. 2
கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயிரத்து 856 ஆரம்பப் பாடசாலைகளிலும் ஒரே தினத்தில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

சிரமதானத்தில் 4 ஆயிரத்து 62 ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர், பொலிஸார், முப்படையினர் ஈடுபட்டனர். நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பாடசாலைகளின் சுற்றுச்சூழல், நீர்நிலைகள் சுத்தப்படுத்தப்பட்டன. அரச தலைவரின் ஆலோசனையின் கீழ் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஜ-10)

## நடந்து சென்றவரிடம் தாலிக்கொடி அபகரிப்பு

தென்மராட்சி, ஓக. 2
வீதியால்நடந்துசென்றபெண்ணின் தாலிக்கொடியை, மோட்டார் சைக்கிளில் வந்தவர் அறுத்துக்கொண்டுதப்பிச் சென்றார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்றுநண்பகல்12.30மணியளவில் நடந்தது.

பெண் பேருந்தில் இருந்து இறங்கி சாவகச்சேரி இராமலிங்கம் வீதியூடாக தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார். அதை அவதானித்த நபர் ஒருவர் மோட்டார்சைக்கிளில் பின் தொடர்ந்து பெண் அணிந்திருந்த தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது. பெண் கூச்சலிட்ட போதும்மோட்டார்சைக்கிளில் வந்தவர் தப்பிச் சென்றார். சுமார் ஐந்தரைப்பவுண் பெறுமதியான தாலிக் கொடியைப் பெண் பறிகொடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ஜ-9)

# வடக்கில் மீண்டும் பயங்கரவாதம்

### இப்படிச் சொல்கிறார் பொலிஸ் மா அதிபர்



"நாட்டில் இடம்பெற்ற 30 ஆண்டு கால பயங்கரவாதமும் முழுமையாகஒழித்துவிட்டோம்எனக்கூற முடியாது. வடக்கில் ஆங்காங்கே சிறு விதைகளிலிருந்து பயங்கரவாதம் மீளவும் முளைக்கத்தான் செய்கின்றது"

இவ்வாறு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் ஆராய இரண்டு நாள்கள் பயணமாக பொலிஸ்மாஅதிபர்யாழ்ப்பாணத்துக்குவருகைதந்தார். அவர் நேற்றைய தினம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில்அமைதியில்லை. இளைஞர்கள்காணாமல்ஆக்கப்படுகின்றனர், சட்டம் ஒழுங்கு பேணப்படாமல் அச்சநிலையே தற்போது தொடர்கிறது. இலங்கையில்நாம் வாழ முடியாது என வெளிநாடுகளுக்குக் காண்பிக்கும் வகையில் பத்திரிகைகளில் செய்திகளை வரவைக்கவே சிலகும்பல்கள் முயற்சிக்கின்றன.

சட்டத்தையும் ஒழுங்கையும் சரியான முறையில் நடைமுறைப்படுத்தி இவ்வாறான கும்பல்களின் சதிகளை முறியடிக்க வேண்டும். தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்க அந்தக் கும்பல்களுக்கு இடமளிக்க முடியாது. தேசியபாதுகாப்புக்குபொலிஸாருடன்சிறப்புஅதிரடிப்படையினரும் முப்படையினரும் என்றுமே இணைந்து செயற்படுவார்கள்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில்கடந்த சில நாள்களில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் இருவர் இனம் காணப்பட்டுள்ளனர். அவ்வாறு இனம்காணப்பட்ட இருவருமேமறுவாழ்வுக்குட்படாதவிடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த முன்னாள் போராளிகள். இவ்வாறான வன்முறைகளை எதிர்காலத்தில் கட்டுப்படுத்துவதற்குபொலிஸாருக்குஆலோசனை பெறுவதற்காகவே சிவில் பாதுகாப்புக்குழுக்களை இன்றுசந்திக்கின்றேன் - என்றார். (வ-101)

## இனிப்போராட்டங்கள்இல்லை பெற்றோலியசங்கம்அறிவிப்பு

கொழும்பு, ஓக. 2
இனி எந்தவொரு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட மாட்டாது என்றுபெற்றோலிய கூட்டுத்தாபன பணியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அரச தலைவருடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் இணைப்பாளர் டீ.ஜே. ராஜகருணா தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபன பணியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலானசந்திப்புநேற்றுஅரசதலைவர் செயலகத்தில் நடந்தது. இதில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் அரச தலைவரின் வேண்டுகோளுக்கு அமைவாகபோராட்டங்களைஇனி நடத்தமாட்டோம்எனஉறுதிஅளித்தனர்.

அதேவேளை கடந்த 26 ஆம் திகதி நடத்தியஆர்ப்பாட்டம்ஒன்றில்குழப்பத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்க தலைவர் உள்ளிட்ட 16 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களை நேற்றுமுன்தினம்நீதிமன்றில்முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் மன்றில் முன்னிலையாகவில்லை.

அதனையடுத்து, நீதிமன்றம் அவர்களுக்கு எதிராக பிடியாணை பிறப்பித்தது. 16பேரும்நேற்று கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ந-ஜ-10)

## கென்றியரசர்கல்லூரியின் புதிய அதிபர் பதவியேற்பு



யாழ்ப்பாணம், ஒக். 2
இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் 22ஆவது புதிய அதிபராக அருட்பணி இம்மானுவேல் கொட்பிறி ஜோயல் (அ.ம.தி) நேற்றுப் பதவியேற்றார். இதுவரை அதிபராகக் கடமையாற்றிய அருட்பணி யோ. அ. யேசுதாஸ் அடிகள் ஓய்வுபெற்றதையடுத்து இவர் அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார்.

சம்பிரதாயபூர்வமானபதவியேற்புநிகழ்வுபுனித அன்னம்மாள் ஆலயத் திருப்பலிப் பூசையுடன் ஆரம்பித்தது. நிகழ்வில் அமலமரித் தியாகிகள் சபையின்யாழ்மாகாணமுதல்வர்அருட்தந்தை எட்வின் வசந்தராஜா, சண்டிலிப்பாய் கோட்ட கல்வி அதிகாரி எஸ்.சிவானந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-ஜ-37)

## அமைச்சின் செயலாளர் நியமனம்

கொழும்பு, ஓக. 2
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் மலையக மரபுரிமைகள் அமைச்சின் செயலாளராக திருமதி டபிள்யூ ஜே.பீ.எஸ். வீரக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நியமனக் கடிதத்தை அரச தலைவரின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவிடம் இருந்து பெற்றுக் கொண்டார். இவர் முன்னர் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சின் மேலதிகச் செயலாளராகக் கடமையாற்றியிருந்தார். (ந)

# சிறுபான்மை மக்களிடம் இணக்கப்பாடு அவசியம்

### கிழக்கு விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, ஓக. 2
சிறுபான்மையின மக்களிடையே நிரந்தரமான இணக்கப்பாடு அவசியம் இருக்க வேண்டும். அதுவே அரசியல் தீர்வை அர்த்தமுள்ளதாகமாற்றியமைக்கும். இல்லையெனில் அது வெறும்கோசமாக மட்டும் இருக்கும்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமானகிருஸ்ணபிள்ளைதுரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்புதும்பங்கேணியில் மக்கள்சந்திப்புநேற்றுநடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
நாங்கள்கடந்த இரண்டுவருடத்துக்கு முன்புதான் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் சேர்ந்து இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்றோம். முன்பெல்லாம் எங்கெங்குகுறைகள்நடக்கின்றதோ அந்த குறைகளையெல்லாம் எடுத்துக் காட்டினோம். எமது உரிமை சம்பந்தமான விடயங்களையெல்லாம்கூறிவந்தோம். தற்போது கூட்டுப் பொறுப்பு என்கின்றரீதியில்நாங்களும்சேர்ந்து வேலை செய்யும் பொறுப்புடன் இருக்கின்றோம். தலைமைஎன்பது முன்னே செல்பவரை இழுத்துப் பிடிக்க வேண்டும், பின்னே வருபவரையும் இழுத்து எடுக்க வேண்டும். தன்னோடுசமமாகச் செல்பவர்களை தட்டிக் கொடுத்துச்செயற்படவேண்டும். இவ்வாறான ஒரு செயற்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் போது உதைபந்து போன்று எல்லாப் பக்கத்திலும் உதைபட வேண்டி இருக்கின்றது. முகப்புத்தகங்களிலே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை மிகமிகக்கடுமையாகவிமர்சிக்கின்றனர். இவற்றையெல்லாம் மௌனமாக நாங்கள் பொறுத்திருக்கின்றோம். காலம் பதில் சொல்லும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சத்திய சோதனையில் நீந்திக்கொண்டிருக்கின்றது. பலவிதமானமுறைமையற்றசீரற்ற செயற்பாடுகளுக்குள்ளே நாங்களும் குழம்பிப் போய் இருக்கின்றோம். கிழக்கு மாகாணத்தில் இருக்கின்றபங்கீடுகளைப்பார்க்கின்றபோது இவ்வாறானநெருக்குவாரங்கள்எங்களுக்குள்ளேயும் இருக்கின்றது. வடக்கு கிழக்கு இணைப்பைப் பற்றி பேசுவோமாக இருந்தால், தமிழர்களும் முஸ்லிம்களும் அறுபதுகளிலே எவ்வாறு இருந்தார்களோ அவ்வாறு செயற்படக் கூடிய விதத்திலே இருக்க வேண்டும் என்றார். (ந-ஜ-10,46)

## மந்திகை மருத்துவமனைக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.2
புலம்பெயர்ந்தவர்களின் அன்பளிப்புடன் மந்திகை ஆதார மருத்துவமனைக்கு 10 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன. அவைமருத்துவமனையின்சத்திரசிகிச்சைப் பிரிவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

மருத்துவமனை நிர்வாகத்தின் வேண்டுகோளின் பிரகாரம் புலம்பெயர் நாடுகளில் உள்ள பிரதேச வாழ் மக்கள் அதற்கான நிதியுதவியை வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந-ஜ-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் பாதுகாப்புக் குழு தலைவரிடம் வழிப்பறி

*யாழ். நகரில் நேற்றுமாலை சம்பவம்*

யாழ்ப்பாணம், ஓக.2
பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர தலைமையில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்துக்கு சென்று வீடுதிரும்பிய வண்ணார்பண்ணைசிவில்பாதுகாப்புக் குழுத் தலைவரைத் தாக்கிவிட்டு அவரிடமிருந்த 25ஆயிரம்ரூபாபணத்தை கொள்ளையர்கள் பறித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம்,வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவில்சாலையில்நேற்று மாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

"பொலிஸ்மா அதிபர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்பிய போது வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் ஆலய சாலையில் மோட்டார் சைக்கிளில் வந்த 2பேர்வழிமறித்தனர். அவர்களில்ஒருவர்தலைக்கவசத்தால்என்னைத்தாக்கினார். நான் நிலைகுலைந்து கீழே வீழ்ந்தேன். எனக்கு ஒரு கைஇயலாது. அதனால்என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. எனது நீளக்காற்சட்டைப்பைக்குள்ளிலிருந்த 25ஆயிரம்ரூபாபணத்தைப் பறித்துகொண்டுகொள்ளையர்கள் இருவரும் தப்பித்து விட்டனர்"என்றுபாதிக்கப்பட்டவரான இராசரத்தினம் சிறிதரன்,யாழ்ப்பாணம்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (வ-21)

# வீட்டுக்குள் புகுந்து பணம் பறிக்க முயற்சி

*முதியவரின் சாதுரியத்தால் முறியடிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்றிரவு 7.30 மணியளவில் புகுந்த கொள்ளயர்கள் இருவர்அங்குகொள்ளையில்ஈடுபடமுயன்றபோதும்முதியவரின் சாதுரியத்தால் அது முறியடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்றிரவு 7.30 மணியளவில் கொள்ளையர்கள் இருவர் புகுந்தனர். வீட்டுக்குள்ளிலிருந்தமுதியவரின்கழுத்தைபிடித்தவாறுஅவரின்சட்டைப்பையிலிருந்தபணப்பையையெடுக்க கொள்ளையர்கள் முனைந்துள்ளனர்.

நிலமையைஉணர்ந்தமுதியவர்சுதாகரித்துக்கொள்ளையர் ஒருவரை நிலத்தில் வீழ்த்தினார். இதனால் நிலைகுலைந்த கொள்ளையர்கள்அந்தஇடத்திலிருந்துதப்பியோடியுள்ளனர். அவர்கள்இருவரையும்இளைஞர்ஒருவர்துரத்திச்சென்றுள்ளார். அந்தஇளைஞனுக்குகத்தியைக்காட்டிஅச்சுறுத்திவிட்டு கொள்ளையர்கள் தப்பிச் சென்றனர். சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (வ-101)

# ரயர்க் கடையில் திருட்டு: இருவருக்கு மறியல்

தென்மராட்சி, ஓக.2
பொலிஸாரின்வாகனச்சில்லு, உழவு இயந்திரத்தின் ரயர் போன்றவற்றைத் திருடி விற்றார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்ட இருவர் சாவகச்சேரி நீதிவான் மன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அந்த பொருள்களைக் கொள்வனவு செய்தவர், தரகர் மன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள கடையொன்றில் வைக்கப்பட்டிருந்த பொருள்களே திருட்டுப் போயின. கடந்த 24ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கடையின் உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். பொலிஸார் அந்தக் கடையில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவின் பதிவுகளை பார்வையிட்டனர். இதன் போது அதில் திருட்டுச் சம்பவம் பதிவாகியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு மீசாலை வடக்கு தட்டான்குளம் வீதியைச் சேர்ந்த இருவரைக் கைது செய்தனர். அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வேம்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த தரகரையும், சரசாலையைச் சேர்ந்த கொள்வனவு செய்தவரையும் கைது செய்திருந்தனர். நால்வரும் நேற்று முன்தினம் மாலை பொலிஸாரால் சாவகச்சேரி நீதிவானின் வாசஸ்தலத்திற்கு கொண்டு சென்று முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் முதலாம் இரண்டாம் சந்தேக நபர்களை எதிர்வரும் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் மூன்றாம் நான்காம் சந்தேக நபர்களை பிணையில் செல்லவும் அனுமதித்தார். (21. 9)

*வித்தியா படுகொலை:*

# சி.ஐ.டி. அதிகாரியிடம் இன்று தொடர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் தலைமை பொலிஸ் விசாரணை அதிகாரியின் தொடர் விளக்கம் இன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற தீர்ப்பாயம் முன்னிலையில் முன்னெடுக்கப்படுகிறது.

மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன்சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்றநீதிபதிகள்அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர்இளஞ்செழியன்ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தின் இரண்டாவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடுகிறது.

புங்குடுதீவு மாணவியின் படுகொலைதொடர்பில்முழுமையானவிசாரணைகளை முன்னெடுத்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர்நிசாந்தசில்வாவிடம் முதன்மை விளக்கம் கடந்த 24ஆம் திகதி தீர்ப்பாயம்முன்னிலையில்ஆரம்பமானது. எனினும்அதுஇடை நடுவில் அன்றைய தினம் இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத் தீர்ப்பாயம் இன்று மீண்டும் கூடுகிறது. பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவிடம் தொடர் விளக்கம்முன்னெடுக்கப்படவுள்ளது. (வ)

# யாழ். மாவட்ட பொலிஸாருக்கு விடுமுறைகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரினதும் விடுமுறைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும், நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டுமே பொலிஸாரின் விடுமுறைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாண பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் உத்தரவுக்கமையவே பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடு முறைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4,8)

# தென்பகுதிக்குச்சென்று திரும்பிய 68 பேருக்கு டெங்கு நோய்த் தொற்று

*தென்மராட்சி சுகாதாரப் பிரிவு தகவல்*

தென்மராட்சி, ஓக.1
தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 68 பேர் கடந்த மாதம் டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தென்பகுதிக்குச் சென்று திரும்பியவர்கள்என்றுசுகாதாரத் திணைக் களபுள்ளிவிவரங்கள் தெரி விக்கின்றன.

இந்த எண்ணிக்கை கடந்த ஜூன் மாதத் துடன் ஒப்பிடுகையில் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'கடந்த ஜூன் மாதம் தென்மராட்சியைச் சேர்ந்த 26 பேர் டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 80 வீதமானோர் தென் பகுதிக்குக் கட்டடப் பணிகளுக்காகச் சென்று வந்தவர்கள். ஏனைய 20 வீதமானோர் தென் பகுதிக்கு பல்வேறு தேவைகளுக்காகச் சென்ற சுற்றுலாப் பயணிகள், பல்கலைக்கழக மாணவர்களாவர்.

தென் பகுதிக்குச் சென்றவர்கள்டெங்கு நோய்த்தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாக்க பாதுகாப்பான மூடிய உடைகளை அணிந்து கொள்ளவேண்டும். காலை, மாலை வேளைகளில் நுளம்பு கடிக்கும் ஆபத்து உள்ளதால் அந்தநேரங்களில் நுளம்பு விரட்டி மருந்துகளை உடலில் தடவிக் கொள்ளவேண்டும்.

இரண்டு நாள்களுக்கு மேலாகக் காய்ச்சல் காணப்படின் மருத்துவமனையில் அல்லது தனியார் ஆய்வு நிலையங்களில் குருதிப் பரிசோதனை மேற்கொண்டு டெங்கு நோய்த் தொற்றுத் தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு குணமாகிய பின்னர் குறைந்தது இரண்டு வாரங்கள் பூரண ஓய்வில் இருக்கவேண்டும்' என சாவகச்சேரி மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது. (21,9)







*மிருசுவில்உசன்இராமநாதன்மகாவித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு நேற்று வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ந. சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.* (9)

# உதவிப் பொருள்கள் கையளிப்பு

வரமராட்சி, ஓக.2
நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தினால் உதவிப்பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. நெல்லியடி அம்பன் கிராமிய அரசினர் மருத்துவ மனை, ஆரம்ப பிரிவு மாணவர்கள், விவசாயி களுக்கு இவ்வாறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்தில் நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தின் 6 ஆவது புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு வைபவம் அண்மையில் இடம்பெற்றது. லயன் சுப்பிரமணியம் கோகிலகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 306 பி I இன் இரண்டாவது உப மாவட்ட ஆளுநர் லயன் பி. மகேந்திரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதனை அடுத்தே உதவிகள் வழங்கப்பட்டன. தம்ப சிட்டி அ.மி.த.க பாடசாலை , தட்டாதெரு அ.மி.த.க பாடசாலைகளைச் சேர்ந்த வறுமைக்குள்ளான தலா பத்து மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், அம்பன் மருத்துவமனைக்கு சக்கரநாற்காலியும், விவசாயிகள் பத்து பேருக்கு தலா50முருங்கை மரக்கன்றுகளும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன. (21)

# வருடாந்த திருவிழா

வடமராட்சி,ஓக.2
அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்தத் திருவிழா கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை 9.05 மணிக்கு கொடியேற்றத்து டன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை 108 சங்காபிசேகத்துடன் தொல்காப்பி யங்கள், வேட்டை, சப்பறத் திருவிழா இடம்பெறும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறு நாள் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சமுத்திரதீர்த்தத் திருவி ழாவும் நடைபெறும. சமுத்திரத் தீர்த்தத்துக்காக அம்பாள் இன்பருட்டி கடற்கரைச் சதுக்கத்துக்கு எழுந்தருளி தீர்த்தம் நிறைவுற்றதும் அங்கு இளைப்பாறி இருப்பிடம் திரும்புவார். என அறி விக்கப்பட்டது. (21,173)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பனம் உற்பத்தி நிலையம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், பனை அபிவிருத்திச் சபையின் பனம் உற்பத்தி நிலையம் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு காரைநகர் வலந்தலைச் சந்தியில் உள்ள கட்டடத்தொகுதியில் திறந்து வைக்கப் படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்தனர்.

சபையின் தலைவர் மருத்துவர் இ.சிவசங்கர் இந்த உற்பத்தி நிலையத்தைத் திறந்து வைப்பார். இதில் பனம் உற்பத்திப் பொருள்கள் அதிகளவில் தயாரிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (21,17)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 300 | 600 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1000 |
| பாரை | 500 | 700 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 1000 | 1000 |
| சீலா | 500 | 200 | 500 | 600 |
| விளை | 600 | 500 | 400 | 800 |
| முரல் | 400 | 500 | 400 | 600 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 400 | 400 | 450 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 300 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 300 | 300 | 300 |
| திருக்கை | 300 | 250 | 400 | – |
| மதனம் | 250 | 200 | 300 | – |
| கொய் | 200 | 60 | 80 | 100 |
| பாலை | 150 | 250 | 500 | 500 |
| வாழை | 250 | – | 400 | 450 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 60 | 60 |
| கத்தரி | 120 | 60 | 160 | 100 | 100 |
| மரவள்ளி | 60 | 80 | 70 | 60 | 80 |
| பயிற்றை | 100 | 60 | 80 | 100 | 120 |
| பாகல் | 200 | 130 | 200 | 160 | 160 |
| க.கிழங்கு | 140 | 120 | 20 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 110 | 90 |
| சி.வெங்காயம் | 120 | 150 | 140 | 160 | 130 |
| பூசணி | 100 | 80 | 100 | 100 | 80 |
| தக்காளி | 150 | 140 | 160 | 140 | 140 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 | 60 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 40 | 30 | 30 |
| ப.மிளகாய் | 350 | 400 | 320 | 400 | 260 |
| புடோல் | 100 | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 120 | 100 | 160 | 140 | 100 |
| வெண்டி | 100 | 60 | 60 | 100 | 80 |
| போஞ்சி | 140 | 160 | 180 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 65 | 70 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 110 | 120 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 160 | 200 | 180 | 260 |
| கரட் | 200 | 200 | 240 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 150 | 100 | 140 |

### தென்மராட்சி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நேற்று

# சுமந்திரன் - அருந்தவபாலன் இடையே கருத்து மோதல்

சாவகச்சேரி, ஓக. 2

தென்மராட்சி பிரதேச சபையை இரண்டாகப் பிரிப்பது தொடர்பாக முன்வைக்கப்பட்ட கருத்தால் தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்கும் தமிழ் அரசுக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் அருந்தவபாலனுக்கும் இடையே கருத்து மோதல் மூண்டது.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் தென்மராட்சிக் கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இணைத் தலைவர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

"தென்மராட்சி மிகப் பரந்த பிரதேசமாகும். சிறிய பிரதேசம் நகர சபையிடமுள்ளது. அதிகளவு பிரதேசம் ஒரு பிரதேச சபையிடமே உள்ளது. அதற்கு குறைந்தளவு வருமானமே உள்ளது. அரசில் அங்கம் வகிக்கும் 2 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள். அரசுடன் மிக நெருக்கமான உறவைப் பேணுகின்ற மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளார். அவ்வாறு இருக்கையில் பிரதேச சபையையும் பிரதேச செயலகத்தையும் ஏன் இரண்டாகப் பிரிக்க முடியாது?" என்று அருந்தவபாலன் கேள்வி எழுப்பினார். அப்போது அவருக்குப் பின்னால் இருந்தவர்கள் கை தட்டினார்கள்.

"இந்த விடயத்தை இங்கு வந்து பேசி நேரத்தை வீணடிக்கிறீர்கள். எம்முடன் பேசாமல் நேரடியாக பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சிடம் வழங்கிய மனுவுக்கு என்ன நடந்தது?" என்று இணைத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன் கேட்டார்.

"நாங்கள் அரசுடன் பேச முடியாது. நீங்கள்தான் அதனைக் கேட்க வேண்டும். அதற்காகத் தான் நாங்கள் உங்களைத் தெரிவு செய்துள்ளோம். இந்த விடயம் தொடர்பில் அரசுடன் பேசுவதற்கான தகுதிநிலை எங்களிடமில்லை" என்று அருந்தவபாலன் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த மற்றொரு இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், "அருந்தவபாலன், கை தட்டுவதற்கு ஆள்களைக் கூட்டி வந்துவிட்டுக் கதைக்க வேண்டாம். பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிப்பது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்டோர் இணைந்து அரசுக்கு மனுக் கொடுத்துவிட்டீங்கள். அதற்கான முன்னெடுப்புகளும் எடுக்கப்படுகின்றன. அந்த மனுவுக்கு என்ன நடந்தது? என்று நீங்கள் கேள்வியெழுப்பலாம். அதற்கு இணைத் தலைவர் பதிலளிப்பார். அரசில் உள்ளவர்கள், அரசுடன் கூட்டோடு உள்ளவர்கள் என்றெல்லாம் கூறி இந்தக் கூட்டத்தை பகிடிக்குரிய சபையாக மாற்றக்கூடாது. இதனை நான் எச்சரிக்கையாகச் சொல்கின்றேன்" என்றார்.

இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்படும் கருத்துக்கு எச்சரிக்கை விடுக்க வேண்டிய தேவையில்லை என்று அருந்தவபாலன் கூறி முடித்தார். (வ-5)

# தென்மராட்சிக்கு மேலும் இரண்டு பிரதேச சபைகள்

*ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்*

சாவகச்சேரி ஓக.2

தென்மராட்சிப் பிரதேசத்தில் இரண்டு பிரதேச சபைகள் உருவாக கப்படல் வேண்டும் என தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு வடக்கு மாகாண சபை மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலரைக் கோருவதென ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் தென்மராட்சிக் கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

"தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரி பிரதேச சபை 49 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இந்த பிரதேச சபைக்கு வழங்கப்படும் நிதி உதவிகள் போதாத நிலை யில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் சிரமங்கள் உள்ளன. குறிப்பாகப் பிரதேசத் துக்குட்பட்ட பகுதிகளில் பெருமளவு சாலைகள் சீரமைக்கப்படாமல் மணல் சாலைகளாகவே காணப்படுகின்றன. பிரதேச செயலகத்தை இரு பிரிவுகளாக மாற்ற அரசால் நடவடிக்கை எடுக்கப்படுவதாகப் பிரதேச, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அறிவிக்கப்படுகின்றபோதிலும் அது இன்னும் சாத்தியமாகவில்லை. இதனால் சாவகச்சேரி நகர சபை தவிர்ந்த சாவகச்சேரிப் பிரதேச சபையை தென்மராட்சி கிழக்குப் பிரதேசசபை, தென்மராட்சி மேற்கு பிரதேச சபை என இரு கூறுகளாகப் பிரிக்கப்படல் வேண்டும்" என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்த்தில் கலந்து கொண்ட மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அனைவரும் ஏகோபித்த குரலில் இந்த வேண்டுகோளை இணைத் தலைவர்களுக்கு முன் வைத்தனர். இதனையடுத்தே தென்மராட்சியில் மேலும் 2 பிரதேச சபைகள் வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. கூட்டத்துக்கு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இணைத் தலைவர்களாகக் கலந்து கொண்டிருந்தனர். மாலை 4 மணியளவில், இராஜாங்க அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கூட்டத்திலிருந்து வெளியேறினர். நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தொடர்ந்து கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். (21,9)

# நடுவர் சபை அமர்வுகள் தற்காலிகமாக இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக.2

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இயங்கும் கரவெட்டி நடுவர் சபை தற்காலிகமாக திரு இருதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது என தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி க.பொ.த. உயர்தரபரீட்சை நிலையமாகவுள்ளதால் எதிர்வரும் 6ஆம்,13ஆம்,20ஆம், 27ஆம் திகதிகளில் இந்த அமர்வுகள் திரு இருதயக் கல்லூரில் இடம்பெறும். என அவர் மேலும் அறிவித்துள்ளார். (21,135)

# வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை

தென்மராட்சி ஓக.2

தென்மராட்சிப் பிரதேசத்தில் வளர்ப்புப் பெண் நாய்களுக்குக்கான கருத்தடைச் சத்திர சிகிச்சை சுகாதாரப் பகுதியினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப் பட்டுள்ளது.

கைதடி, மட்டுவில், மந்துவில், வரணி, கொடிகாமம், எழுதுமட்டுவாழ், சாவகச்சேரிநகரம் போன்ற பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் வளர்ப்புப் பெண் நாய்களை வளர்ப்போர் தத்தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு வளர்ப்புப் பெண் நாய்களுக்கு கருத்தடைச் சத்திர சிகிச்சை செய்து கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (21,9)

# ஏகாதசி தீர்த்தம்

யாழ்ப்பாணம் ஓக. 2

யாழ்ப்பாணம் அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தின் ஏகாதசித் தீர்த்தம் நாளை வியாழக்கிழமை நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்தனர்.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி 9 மணிக்கு சிறப்புச் சமய நிகழ்வுகள் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து காலை 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று தொடர்ந்து இறைவன் அலங்காரத் தண்டிகையில் வீதி உலா வரும் காட்சி இடம்பெறும் . மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (21,ரி,160)

# நூல்கள் வெளியிடும் படைப்பாளிகள் தொடர்பு கொள்ளுங்கள்

தென்மராட்சி ஓக.2

தென்மராட்சிப் பிரதேசத்தில் நூல்களை வெளியிட விரும்பும் படைப்பாளிகள் பிரதேச கலாசாரப் பேரவையுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி தே.பாபு தெரிவித்தார். பிரதேசத்தில் கவிதைகள் கட்டுரைகளைப் புனைந்து அவற்றை நூல் வடிவில் உருவாக்க விரும்பினால் பிரதேச கலாசாரப் பேரவையுடன் தொடர்பு கொள்ளுமாறும் பிரதேசத்தில் மேலும் பல படைப்பாளிகளை உருவாக்கும் நோக்குடன் பேரவையினர் முடிவெடுத் துள்ளதாகவும் அவர் அறிவித்தார். உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் எழுதிய 'ரஞ்சன மஞ்சரி' நூலை பேரவையினர் அண்மையில் நூல் வடிவில் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (21, 9)

# இந்தியா செல்வோர் ஆலோசனைகளை பெற்றுக்கொள்க

யாழ்ப்பாணம், ஓக.2

இலங்கையில் இருந்து பல் வேறு தேவைகளுக்காக விடுமுறை காலத்தில் இந்தியா செல்வோர் தத்தமது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்றுச்செல்லுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். இந்தியாவில் மலேரியா மற்றும் போலியோ போன்ற நோய்கள் எமது நாட்டைப்போன்று முற்றாக ஒழிக்கப்படாததால் அங்கு செல்பவர்கள் அந்த நோயால் பாதிக்கப்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது எனவே இந்தியா செல்வோர் அதற்கு முன்னர் தத்தமது பிரதேசத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஆலோசனை பெற்றுச் செல்லுங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள அனைத்து வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கும் இந்த விடயம் அறிவிக் கப்பட்டுள்ளது. (21. 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பினரைவிட முல்லை.அபிவிருத்திக்கு நானே பாடுபடுகிறேன்

## அமைச்சர் ரிசாத் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 2

"வடக்கு மாகாண முதலமைச்சர் உட்பட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்த் தேசிக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் முல்லைத்தீவு மக்களுக்கு மேற்கொண்ட சேவைகளைவிட, நானும் எனது கூட்டணியும் மிகவும் நேர்மையான முறையில் கனதியான, காத்திரமான பணிகளைச் செய்துள்ளோம்" என்று அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, முள்ளியவளைநீராவிப்பிட்டியில் மீள்குடியேற்றசிறப்புச் செயலணி ஊடாகவீடமைப்புக்கான நிதி உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரை யாற்றுகையில் அமைச்சர் றிஷாட் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும்தெரிவித்ததாவது: போர் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வெளியேறிய சகோதர தமிழ் மக்களை மீள்குடியமரச் செய்வதிலும் இந்தப் பிரதேசத்தில் அழிந்து போயிருந்த அத்தனை கட்டடங்களையும் மீளக் கட்டியெழுப்பிதமிழ்மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு முழுமூச்சுடன் உழைத்திருக்கின்றேன். இங்குள்ள கட்டடங்களும் குளங்களும் அபிவிருத்திப் பணிகளும் இதற்குத் சான்றுகள். வரலாறு எழுதப்படுகின்றபோது இந்தயதார்த்தம் பதியப்படுமென்பதிலும் எனக்கு நம்பிக்கையுள்ளது. ஆனால் சிலர் யதார்த்தங்களை மறந்துபேசுகிறார்கள், பொய்யை உண்மையாக்குகிறார்கள். உண்மையைப்பொய்யாக்குகின்றார்கள். மனிதாபிமானத்தையும் மனச்சாட்சியையும் அடகு வைத்து அவர்கள் அரசியல் நடத்துகின்றார்கள்.

தமிழர்களுக்கு அதியுச்ச அதிகாரம் வேண்டுமென்று கோருபவர்கள், கூட்டாச்சிதான் தீர்வு என்று வலியுறுத்துபவர்கள், வடக்கும் கிழக்கும் இணைய வேண்டுமென்று விடாப்பிடியாகநிற்பவர்கள் இங்குவாழ்ந்த சகோதர முஸ்லிம்களை எட்டி உதைக்கின்றார்கள். இவ்வாறுசெய்வற்கு அவர்களுக்கு வெட்கம் இல்லையா? எனப்பகிரங்கமாகக்கேட்க விரும்புகின்றேன்.

ஆயுததாரிகள் முஸ்லிம்களைவடக்கிலிருந்துதுரத்தியபோதுபேசாமடந்தைகளாகவும் மௌனிகளாகவும் வாய்மூடி இருந்த நீங்கள், அவர்களின் தியாகத்தால் இன்று அரசியல் செய்யும் நீங்கள், புலிகள் செய்தது தவறு என்று அவர்கள் இல்லாத போது இப்போது கூறும் நீங்கள், முஸ்லிம்கள் தங்களது தாயகத்துக்குத் திரும்பி வரும்போது விரட்டுகின்றீர்களே? துரத்தப்பட்ட மக்களை அரவணைப்பதற்குப்பதிலாககொடுமைப்படுத்துகின்றீர்களே.

புலிகள் செய்த தவறை நாங்கள் மறக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டீர்கள். 25 வருடங்களாக துரத்தப்பட்ட மக்கள் தென்னிலங்கையிலிருந்தபோது உங்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலோ உங்களது உரிமைகளை நசுக்கும் வகையிலோ எப்போதாவது நடந்திருக்கிறார்களா? அவர்கள் அகதியாக வாழ்ந்தபோதும் உங்கள் மீது அன்புதான் பாராட்டினார்கள்.

இனவாதத்தையே உங்கள் மூலதனமாகக்கொண்டு உங்கள் அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள நினைக்கும் உங்களைப் போன்றவர்கள் இவ்வாறான பிரச்சினைகளைதீர்க்கவிடாது, பிச்சைக்காரனின் புண்போல அதனை வைத்திருக்க வேண்டுமென்று எண்ணுகின்றீர்கள். தேர்தல் வந்தால் எந்தத் தியாகமும் செய்யாமல் இனவாதக்கருத்துக்களால் மக்களை உசுப்பி, நடந்து முடிந்த துன்பியல் சம்பவங்களை நினைவூட்டி அரசியல் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிடுங்கள்.

முல்லைத்தீவுக்குக் குடியமர வந்த பரம்பரைமுஸ்லிம்களை 'வந்தான் வரத்தான்' எனவும், காடுபிடிக்கவந்தவர்கள் எனவும், காட்டை அழிக்க எண்ணுபவர்கள் எனவும் ஊடகங்களிடம் காட்டி மக்களைத் தவறாக வழிநடத்தும் உங்கள் குரோதஎண்ணங்களைக் கைவிடுங்கள்.

மனிதநேயம்கொண்ட அமரர் அன்டனி ஜெகநாதன் போன்றவர்கள் முஸ்லிம்களின்மீள்குடியேற்றத்தில் அதீதஅக்கறைகாட்டியவர்கள். எங்களை மனதார நேசித்தவர்கள். வடக்கு மாகாண முஸ்லிம்களின் மீள்குடி யேற்றத்தில் நாம் எடுத்த முயற்சிகள் கைகூடாததால், எமது எதிர் பார்ப்புக்கள் எதுவுமே நிறைவேற்றப்பட வில்லை. அரசின் உதவியுடன்மீள்குடியேற்றச்செயலணி உருவாக்கப்பட்டது. இதுயாருக்கும் எதிரானதல்ல. நீண்ட கால அகதிகளுக்குவிமோசனம்பெற்றுக்கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட இந்த செயலணியைஆரம்பத்திலிருந்தே இயங்க விடாமல் ஒருசில அரசியல் வாதிகள் தடுத்தனர்.

அதன் உச்சக்கட்ட வெளிப்பாடே யாழ்ப்பாணத்திலிருந்துபேரூந்துகளில் ஆள்களைமுல்லைத்தீவுக்குக் கூட்டிவந்து இந்த மக்களுக்கும் எனக்கும் எதிராக ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். என்னுடையமுகம்தெரியாதவர்கள் கூட, எனது பெயரைக் கூறிகூழாமுறிப்பில் 'றிஷாட் காட்டை அழிக்கின்றார்' என்று கோஷமிட்டனர். மரக்கூட்டுத்தாபனம் சிலமரங்களை வெட்டி எடுத்துச் சென்றதை என் தலையில் சுமத்தியுள்ளனர்.

எனவே தமிழ் முஸ்லிம் உறவைச் சீர்குலைப்பதற்கு இங்குள்ள இரண்டு சமூக மக்களும் துணை போகக்கூடாதுஎன்பதேஎனது உருக்கமான வேண்டுகோள் - என்றார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், மாகாணசபை உறுப்பினர் யாசீன் ஜவாகிர், மீள் குடியேற்றசெயலணியின்பணிப்பாளர் யாசீன், மீள் குடியேற்றச் செயலணியின் மாவட்ட இணைப்பாளர் றிபாய் உட்பட பலர் கலந்து கொண்டனர். (4,21)

# எரிபொருள் கொடுப்பனவை அதிகரித்து வழங்குங்கள்

## கால்நடைமருத்துவர்கள்கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 2

வடக்குமாகாணத்தில்கடமையாற்றும்கால்நடைமருத்துவ அதிகாரிகளின் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவை அதிகரித்துவழங்குமாறு கால்நடைமருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

"வடக்கு மாகாணத்தில் கால்நடை மருத்துவ அதிகாரிகளாகப் பணியாற்றி எமக்கு மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவு போதுமானதாக இல்லை. எமது மாகாணத்தில் கடமையாற்றும் கால்நடை மருத்துவ அதிகாரிகள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டுப் பணிகளை முன்னெடுக்க வேண்டிய தேவை கள் உள்ளன. பணிநிமித்தம் கொழும்புக்குச் செல்வதற்கான எரிபொருள் செலவீனமும் மாதாந்தம் கிடைக்கின்ற கொடுப்பனவுக்குள் உள்ளடக்கப்பட்டு விடுகிறது.

அதனால் எமக்கான எரிபொருள் கொடுப்பனவுகள் போதியதாக இல்லை. எமது பணிகளை முன்னெடுப்பதில் இதுவும் சிக்கலுக்குரியதாகக் காணப்படுகிறது. எனவே எமக்கான எரிபொருள் கொடுப்பனவைத் தேவைக்குஏற்பஅதிகரித்துவழங்குவற்குநடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கால்நடை மருத்துவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"வடக்கு மாகாண கால்நடை மருத்துவ அதிகாரிகளின் மாதாந்தஎரிபொருள்கொடுப்பனவாகமுன்னர் 4 ஆயிரம்ரூபாவழங்கப்பட்டது. கடந்த வருடம் தொடக்கம் 7 ஆயிரத்து 500 ரூபாவாக அது அதிகரிக்கப்பட்டது. வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகள் தூர இடங்களுக்குச் சென்று பணிசெய்யும் நிலை தவிர்க்கமுடியாதது. அவர்களின் அலுவலகப் பணிகளுக்கான பயணங்களுக்கான செலவுகளும் அதற்குள்ளேயே உள்ளடங்குகின்றன. அதனால்அவர்கள்சிலஅசௌகரியங்களைச் சந்திக்க வேண்டிய நிலமைகள் காணப்படுகின்றன.

கால்நடைவளர்ப்பவர்கள்அனைவரும்மருத்துவர்கள் தத்தமது வீடுகளுக்குத்தான் வருகைதந்து மருத்துவ உதவிகளைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. கால்நடைகளை இயலுமானளவுவைத்தியசாலைகளுக்கு கொண்டு சென்று சிகிச்சை செய்வதற்கு முன்வர வேண்டும். கொழும்பு அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமையவே மருத்துவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அதனை மீறிச்செயற்படமுடியாது" என்று வடக்கு மாகாண கால்நடைப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி, "வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் தத்தமது மாவட்டங்களில் உள்ள கால்நடை வைத்தியசாலைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்க வேண்டும்" என்றும் கோரினார். (4,8)




### நல்லூர் அழகா!

நல்லூரான் பதியில்
வீற்றிருக்கும் கந்தனே
வள்ளி–தெய்வானையுடன்
காட்சிதரும் வேலாயுதனே
உந்தன் திருவடியதனை
போற்றிப்பாடிடவே
பலநூறு ஜென்மங்கள்
பாவங்கள் ஓடிடுமையா!
கந்தா–குகனே–
கதிர்வேலவனே
அழகுமுருகா உன் பாதம்
நாடி வந்தோமையா!

*சுபானுஜன்.*

### குமரனே புறப்படாயோ

வீரவேலதனைக் கையுடைய வெற்றித் திருக்குமரனே
பாலியல் வன்கொடுமை பகலிரவாய் நிகழ்வதை நீ அறியாயோ
கோலமயில் மீதேறிக் கொடிய அரக்கரை அழித்துத் தமிழ்க்
கோதையர் மானங்காக்க குமரனே புறப்படாயோ?

கவிஞர் சரசாலையூரான்

### நெருஞ்சியாய் நிகழ்வுகள்

நஞ்சாகி நடப்பவை நடுக்கத்
தைத் தந்திட
நிம்மதியை வஞ்சகர் தடுத்திட
நெஞ்சில் நெருஞ்சியாய்
நிகழ்வுகள் அமைந்திட
நில்லாது அமைதி நீங்கிட
தஞ்சமென வந்தோம்
திருவருள் பெற்று
தரணியில் நலமே வாழ்ந்திட
மஞ்சத்தில் மலர்சூழ மங்கள
மாய் வலம் வரு
முருகா எம்துயர் தீர்ப்பாயே

*குளப்பிட்டி*
*க. அருமைநாயகம்*

### நல்லைக் கந்தன்

நல்லையிலே எழுந்தருளி நாற்திசையும் அருள்பரப்பும்
தில்லைக் கூத்தனின் திருக்குமரனே சேயோனே
கல்லையும் கனிய வைக்கும் கலியுகத்தின் கடவுளே
வல்லமை தாராயோ தமிழர்தம் தீர்வு பெறவே

கவிஞர் சரசாலையூரான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காலை உணவை தவறாது எடுப்போம்!

★ஊட்டச்சத்து நிறைந்த உணவை நேரத்துடன் உண்பதை வழங்கப்படுத்திக் கொள்வோம். உயரத்துக்கு ஏற்ப உடல் திணிவு சுட்டியைப்பேணிடுவோம்.

★பிரதான உணவு வேளைகளை தவறவிடுவதை தவிர்த்திடுவோம்.

★ஆரோக்கிய வாழ்க்கை முறைமூலம் தொற்றா நோய்களை தூர விரட்டிடுவோம்! தொடர்பாடல், ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்படும் இனிப்பூட்டிய பானங்கள் மற்றும் உணவுகள் பற்றி விவேகத்துடன் முடிவு எடுப்போம்!

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*




யாழ்.நல்லூரிலிருந்து சிவனொளிபாதமலைக்குச் சென்ற

# பாதயாத்திரைக் குழுவுக்கு பொலிஸாரால் இடையூறு

## மைத்திரி, ரணில் உள்ளிட்டோருக்கு இந்து சமயத் தொண்டர் சபை கடிதம்

யாழ்ப்பாணம், ஓக. 2
நல்லூரிலிருந்து சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற பக்தர்களுக்குப் பொலிஸாரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கண்டனம் தெரிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் அரச தலைவர், தலைமை அமைச்சர் உள்ளிட்ட12 தரப்பினருக்கு இந்து சமயத் தொண்டர் சபை கடிதம் அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி 45 சிவனடியார்கள் சிவனொளிபாத மலை நோக்கி மாலை 6 மணிக்கு சின்மயாமிஷன் சுவாமிகளுடன் பாதயாத்திரை ஆரம்பித்தனர்.

இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றிய பொதுச் செயலாளர் சிவஸ்ரீ வேலு சுரேஸ்வரக்குருக்களின் ஒழுங்கமைப்புக்கு அமைய ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி அதிகாலை.3.30 மணிக்கு சிவனொளிபாத மலையில் சிவனின் பாதம் தரிசிக்க ஓம் நமசிவாய என்ற மந்திரம் முழங்க அரோகரா என்ற அருள் முழக்கத்துடன் சிவனின் ஊர்தி நந்தியெம் பெருமானின் உருவம் பொறித்த கொடியை ஏந்தியவாறு யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. இடையிடையே ஓம் நமசிவாய சொல்வதற்கும் நந்திக் கொடி ஏந்திச் செல்வதற்கும் ஒரு சிலரால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன. அதைக் கருத்திற் கொள்ளாது சிவசிந்தையுடன் யாத்திரையை பக்தர்கள் தொடர்ந்தனர்.

சிவனொளிபாத மலையை அடைந்ததும் காலை 8.30 தொடக்கம் 9.30 மணிக்குமிடையில் அங்கு கடமையில் இருந்த பொலிஸாரும் ஒரு மதகுருவும் யாத்திரைக்குச் சென்றவர்களை அழைத்து இங்கு ஓம் நமசிவாய சொல்லக்கூடாது. நந்திக்கொடி பிடிக்கக்கூடாது உடனே சுருக்குங்கள் என்றும் நந்திக் கொடியுடன் எடுத்த படத்தை கைத்தொலைபேசியில் இருந்து உடனே அழிக்குமாறும் கட்டளையிட்டு அழிப்பித்தார்கள்.

யாத்திரைக்குச் சென்றவர்களின் வேட்கைகள் நிறைவு செய்யப்படவில்லை. முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பின்பற்றிய வழிகளை யாத்திரைக்குச் சென்றவர்கள் பின்பற்ற விரும்புகின்றனர்.

சமயம் சார்ந்த அமைச்சுக்கள் குருமார்களுக்கும் இந்த விடயத்தை தெரியப்படுத்துகின்றோம். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறோம் என்று இந்து சமயத் தொண்டர் சபை தெரிவித்தது. (4.ரி)

# புவியியல் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றபின்னரே அடுத்த கட்ட நியமனம்

## வடக்குக் கல்விச் செயலர் கூறுகிறார்

> விண்ணப்பித்தவர்களில் 96 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. அவர்களில் 87 பேர் மட்டுமே கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர். மிகுதியாக 11 வெற்றிடங்கள் காணப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஓக. 2
வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் புவியியல் ஆசிரியர் வெற்றிடங்களை இரண்டாம் கட்டமாக நிரப்பும் வேலைத்திட்டம், ஓய்வு பெறவுள்ள ஆசியர்களின் வெற்றிடங்களை வைத்தே தீர்மானிக்கப்படும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நிலவும் புவியியல் பாட ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக மாகாணத்தின் 50ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாண பாடசாலைகளில் புவியியல் பாடத்துக்கு நிலவும் இலங்கை ஆசிரியர் சேவை 3ஆம் வகுப்பு தரம் 1 (அ) தர பதவிக்கு 98 ஆளணி வெற்றிடங்கள் காணப்பட்டன. விண்ணப்பம் கோரப்பட்டது.

விண்ணப்பித்தவர்க ளில் 96 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. அவர்களில் 87 பேர் மட்டுமே கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர். மிகுதியாக 11 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அந்த வெற்றிடங்களுக்குக் காத்திருப்பு பட்டியலில் உள்ள 11 பேரைத் திறமை மற்றும் புள்ளியின் அடிப்படையில் நியமனம் வழங்குவதற்கு ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. அனுமதியின்படி சிலருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மிகுதிப் பேர் ஒரே புள்ளிக்ளைக் கொண்டுள்ளனர். அதனால் சில வெற்றிடங்களுக்கு அவர்களை நியமிப்பதற்கு என்ன அடிப்படையில் தெரிவு செய்வது என்பது சிக்கலாகவுள்ளது.

அதனால் தற்போது கடமையில் உள்ள புவியியல் பாட ஆசிரியர்கள் சிலர் ஓய்வுபெறும் போதுதான் காத்திருப்புப் பட்டியலில் உள்ளவர்களை நியமிக்க முடியும் - என்றார். (4,ரி)

தென்பகுதிப் படகுகள் அத்துமீறிச் சேவை

# நயினாதீவு - குறிகாட்டுவான் படகுகள் இன்று புறக்கணிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 2
குறிகாட்டுவான் - நயினாதீவு இடையே படகுச் சேவையில் ஈடுபடும் தனியார் படகுகள் அனைத்தும் இன்று புதன்கிழமை சேவைப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கான படகுச் சேவையில் ஈடுபடும் படகுகளின் உரிமையாளர்கள் அனைவரும் இன்று தொடக்கம் சேவைப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். பல வருடங்களாக நாம் பொது மக்களுக்கான படகுச் சேவைகளை வழங்கி வருகிறோம்.

திடீரென யாருடைய அனுமதியையும் பெறாமல் தென்னிலங்கையைச் சேர்ந்த சிலர் படகுடன் வந்து பொதுமக்களை ஏற்றிச் செல்கின்றனர். இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

எனவே தென்னிலங்கையினரின் தான் தோன்றித்தனமான செயற்பாட்டைக் கண்டித்தும் அவர்களுக்கான படகுச்சேவையை உடனடியாக நிறுத்துமாறும்கோரி போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் - என்றுள்ளது.

"குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவு நோக்கிப் படகு சேவையில் ஈடுபட அண்மையில் எவருக்கும் எவ்வித அனுமதியையும் நாம் வழங்கவில்லை. அது தொடர்பில் ஆராயப்படும்" என்று வேலணைப் பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (4,8)

# பெரும்போக செய்கைக்கு விதைநெல் விரைவில்

யாழ்ப்பாணம், ஓக. 2
பெரும் போக நெற்செய்கைக்கான விதை நெல்லை செய்கை யாளர்களுக்கு விநியோகிப்பதற்க ஏற்ற நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகயாழ்ப்பாணக் குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்தது.

அடுத்த மாத நடுப்பகுதியில் இருந்து விதைநெல் சகல கமநல சேவைகள் நிலையங்களில் இருந்தும் விநியோகிக்கப்படவுள்ளன.

3 ஆயிரத்து 500 புசல்வரையிலான விதை நெல் இந்த முறை சங்கத்தால் கொள்வனவு செய்ய முடிந்தது" என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் ரி.ரவிமயூரதன் தெரிவித்தார்.

"5 ஆயிரம் புசல் விதை நெல்லைக் கொள்வனவு செய்வதற்கே தீர்மானிக்கப்பட்டது. சங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து எதிர்பார்த்த விதை நெல்லை இந்த முறை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

கடந்த போகத்தின்போது போதிய மழைவீழ்ச்சி கிடைக்கவில்லை. அதனால் நெற்செய்கை பாதிக்கப்பட்டது.

இந்தமுறை நெற்செய்கைக்கு விதை நெல்லுக்குப் பற்றாக்குறை ஏற்படலாம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (4,17)

# மருத்துவர் வெற்றிடங்களை அறிவிக்க ராஜித பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2
வடக்கு மாகாணத்தில் நிலவும் மருத்துவர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. அந்த எண்ணிக்கை பற்றிய விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவுறுத்தியுள்ளார் என்று வடக்கு மாகாண அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சுடன் தொடர்புடைய அபிவிருத்திகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக கொழும்பில் கடந்த வாரம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கும் கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தினவுக்கும் இடையே கலந்துரையாடல் இடம் பெற்றது. வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்திய சாலைகளில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறை பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டது. வடக்கு மாகாணத்தில் பொதுவான நோய்களுக்கு உரிய மருத்துவர்கள் ஓரளவு போதுமானதாக இருந்தாலும், துறைசார்ந்த நிபு ணர்களுக்கும் மருத்துவ ஆலோசகர்களுக்கும் பற்றாக்குறை நீடிக்கிறது.

நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள் வாரம் ஒரு முறை மருத்துவமனைக்குச் சென்று நோயாளரைப் பார்க்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் மருத்துவர்களின் வெற்றிடங்களை நிரப்ப வேண்டிய தேவை உள்ளது என்று சுட்டி க்காட்டப்பட்டது. இதற்கு பதில் அளித்த அமைச்சர் ராஜித சேனாரத்தின, "வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பயிற்சி முடிந்து வெளியேறும் மருத்துவர்களை வடக்கு மாகாண மருத்துவமனைகளில் நியமிக்க வழிவகைகள் எடுக்கப்படும். ஆகவே இதுபற்றிய தரவுகளை விரைவில் சமர்ப்பியுங்கள்" என்று பணித்தார். (4,ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக ஒப்பந்தம் அமைச்சரவையில் நேற்றுச் சமர்ப்பிப்பு

*கருத்துகளை முன்வைக்க ஒருவாரம் அவகாசம்*

கொழும்பு, ஓக 2

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்கும் வகையில் கைச்சாத்திடப்பட்ட திருத்தங்களுடனான ஒப்பந்தம் நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர்களுக்கு ஒரு வார காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர்களினது கருத்துகள் பெறப்பட்ட பின்னர் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தி தொடர்பில் சீன நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் குறித்து விளக்கமளிக்கையிலேயே துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மகிந்த சமரசிங்க மேற்படி தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தாரைவார்க்கப்பட்டு விட்டதாகவும், இதனால் நாட்டுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் போலிப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய கருத்துகளில் எவ்வித உண்மையும் இல்லை.

இலங்கைக்கு அனைத்து வகையிலும் முன்னுரிமை வழங்கும் வகையிலேயே முகாமைத்துவக் கட்டமைப்பு இருக்கின்றது.

அத்துடன், தேவையேற்படும் பட்சத்தில் திருத்தங்களைக் கொண்டுவரமுடியும் என அரச தலைவரால் முன்வைக்கப்பட்ட திருத்தமும், ஒப்பந்தத்துக்கு இரு தரப்பும் கீழ்படிந்துச் செயற்பட வேண்டுமென நிதி அமைச்சு முன்வைத்த திருத்தமும் இறுதி ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட இரண்டு திருத்தங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

திருத்தப்பட்டுக் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இது பற்றி ஆராய்வதற்கு ஒருவாரகால அவகாசத்தை உறுப்பினர்களுக்கு வழங்குமாறு அரச தலைவர் கூறினார்.

எனவே, அடுத்தவார அமைச்சரவையில் அவர்கள் கருத்துகளை முன்வைத்த பின்னர் உடன்படிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். விவாதிக்கப்பட்ட பின்னர் திருத்த வேண்டிய கட்டாய சூழ்நிலையேற்பட்டால் திருத்துவதற்குரிய வாய்ப்பும் இருக்கின்றது. அரசதலைவர் முன்வைத்த திருத்தத்தாலேயே இந்த வாய்ப்பு கிடைக்கவுள்ளது- என்றார். (த)

# நாடெங்கும் இன்று சைட்டம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

## தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் கறுப்புப்பட்டிகளை அணிந்து போராட்டம்

கொழும்பு, ஓக 2

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான தேசிய எதிர்ப்புப் போராட்டங்கள் நாடெங்கும் இன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக ஜன பௌர இயக்கம் அறிவித்துள்ளது.

நாடெங்கும் தொழில்சார் நிபுணர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள் ஆகியோர் கறுப்புப்பட்டிகளை அணிந்து இந்தப் போராட்டங்களில் ஈடுபடவுள்ளனர்.

அரச நிறுவன ஊழியர்களும் கறுப்புப்பட்டிகளை அணிந்து தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதுடன், அந்த நிறுவனங்களின் முன்னால் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்படும் எனவும் ஜன பௌர இயக்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், வீதிகளில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கவும் ஆங்காங்கே போராட்டங்களை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது எனவும், மருத்துவர்கள் ஆசிரியர்கள், பெற்றோலிய மற்றும் தனியார்துறைகளில் சில மணித்தியாலங்கள் பணிப்புறக்கணிப்பு நடைபெறும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை மருத்துவச் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே, இன்றைய போராட்டங்களில் நாடெங்குமுள்ள 12 மாணவர் ஒன்றியங்களும், 600 பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் கலந்துகொள்வர் என்று தெரிவித்துள்ளனர். (த)



# ரவியை பாதுகாப்போம் ஐ.தே.க. திட்டவட்டம்

கொழும்பு, ஓக 2

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுமாயின் அதனை ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடிக்கும் என்று அமைச்சரும் கட்சியின் பொதுச் செயலாளருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நிரூபணம் இல்லாதவையாகும். குற்றச்சாட்டுகள் நிரூபணமாகும் வரை அல்லது நிராகரிக்கப்படும் வரை ஐ.தே.க. அவருக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிக்கப் பின் நிற்கப்போவதில்லைஎன்றார். (த)

# துறைமுக ஊழியர்களின் உரிமைகளைப் பேணுங்கள்

## தொழில் ஆணையாளருக்கு நாமல் கடிதம்

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுக ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தொழில் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அம்பாந்தோட்டைத் துறைமுகம் கைமாறுவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதமொன்று நடத்தப்படாமலும் துறைமுக ஊழியர்களுடன் கலந்தாலோசிக்காமல் அவசர அவசரமாக ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் தொழில் ஆணையாளரின் தலையீடும் இருந்திருக்கவேண்டும். அவ்வாறு இல்லாதபடியால் துறைமுகத்தில் பணிபுரியும் ஏராளமான ஊழியர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

1950ஆம் ஆண்டின் 43ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவின்படி இத்தகைய பரிமாற்றங்களின்போது தொழில் ஆணையாளரின் சம்மதமும் பெறப்படவேண்டும். ஆனால், துறைமுக ஒப்பந்தப் பரிமாற்றத்தின்போது அவ்வாறு நடக்கவில்லைஎன்றுள்ளது. (த)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.வணிகர் கழகத்தின் தலைவராகக் கடந்த பல வருடங்களாகப் பணியாற்றிவரும்

**திரு.இ.ஜெயசேகரன்**

Best Wishes

வடமாகாண சபை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளமையை அறிந்து யாழ்.வர்த்தக சமூகமாகிய நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம். இன்று மாலை 4.00 மணியளவில் யாழ்.வணிகர் கழகத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்கும் **திரு.இ.ஜெயசேகரன்** அவர்கள் வணிக கழகத்தினை மிகவும் நல்ல முறையில் வழிநடத்தி வர்த்தகர்களுக்கும், பொதுமக்களுக்கும் அரிய பல பணிகளைச் செய்திருப்பதை அனைவரும் அறிவர். அவரது நேர்மை, தற்துணிவு, புத்திக்கூர்மை, வர்த்தகர்கள் மீதானதும் மக்கள் மீதானதுமான கரிசனை என்பனவே அவரை இந்நிலைக்கு உயர்த்தியுள்ளது'. வடமாகாண சபையின் உறுப்பினராக பதவியேற்கும் **திரு.இ.ஜெயசேகரனை** நாம் வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் அனைத்து மக்களுக்கும் வர்த்தகர்களுக்குமான அவரது பணிகள் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**

**யாழ்.வர்த்தக சமூகம்.**

# கண்டி ராணுவ முகாமை அகற்றினால் அச்சுறுத்தல்

*அஸ்கிரிய பீடம் கடும் எதிர்ப்பு*



கண்டி நகரத்தில் உள்ள இராணுவத்தின் சிங்க ரெஜிமென்ட்டின் முகாமை அகற்றுவதற்கு அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கரும், பௌத்த பிக்குகளும் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கரை நேற்று முன் தினம் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சந்தித்துப் பேசியபோதே, கண்டி நகரில் உள்ள இராணுவ முகாமை அகற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யட்டிநுவர வீதியில் உள்ள சிங்க ரெஜிமென்ட் முகாமை அகற்றுவதற்கு அரசு எடுத்துள்ள முடிவுக்கு மகாநாயக்கரும், காரக்க சங்க சபாவின் உறுப்பினர்களான பௌத்த பிக்குகளும் சம்பிக்க ரணவக்கவிடம் எதிர்ப்பை வெளியிட்டனர்.

புனித நகரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த இராணுவ முகாம் அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தமது அமைச்சு இந்த இராணுவ முகாமை அகற்றக் கோரவில்லை என்றும், இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள 20 பேர்ச் காணிகளை ஒப்படைக்குமாறே இராணுவத் தலைமையகத்திடம் கோரியதாகவும் அதற்கு இராணுவத் தலைமையகத்தினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜலட்சுமி கந்தசாமி



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலட்சுமி கந்தசாமி 30.07.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி (ஓய்வுபெற்ற லிகிதர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், கந்தராஜி (பிரான்ஸ்), கந்தராஜ் (Avery), ரூபராஜ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வாசஸ்பதி (பிரான்ஸ்), சிவசொர்ணகௌரி (ஆசிரியை - யாழ். இந்துக்கல்லூரி), சுனிதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோசாந் (பிரான்ஸ்), நிரோசாந் (பிரான்ஸ்), ஆரபி (பிரான்ஸ்), பிரணவி (பிரான்ஸ்), சுரபினி (மாணவி - வேம்படி மகளிர் கல்லூரி), ஆருதி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் வீதி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்:-
க.கந்தராஜ் (மகன்)
077 670 1568

### திருமதி வசந்தி பூபாலசிங்கம்



இணுவில்கிழக்கு, கொக்கன் வளவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தி பூபாலசிங்கம் (29.07.2017) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசுந்தரம் மற்றும் மகேஸ்வரி தம்பதியின் மகளும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - கணேசமணி தம்பதியரின் மருமகளும் பூபாலசிங்கத்தின் அன்புமனைவியும் பிரியந்தி, அபிராமி, கபிலன் ஆகியோரின் அன்புத்தாயும் மகேஸ்வரன், ராணிமலர், வத்சலா, மகேந்திரன், சுதாகரன் ஆகியோரின் சகோதரியும் நாகேஸ்வரி, நாகேந்திரம், சந்திரசேகரம், புஸ்பராணி, ஜோதிமலர் காலஞ்சென்ற சுவர்னா மற்றும் சாந்தரூபி, ஜெகதீசன், இராஜரூபன், நாகவேல் நாயகி, பதுமநிதி, சிவகௌரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2017) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்கன்வளவு,
இணுவில் கிழக்கு.
077 752 1081

தகவல்:
கணவர் மற்றும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சகுந்தலாதேவி பேரின்பராசா



நவாலி கிழக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சம்மந்தப்பிள்ளையார் கோயிலடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி பேரின்பராசா நேற்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாசிலாமணி -பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும், வீரசிங்கம் பேரின்பராசாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - மனோன்மணி தம்பதிகளின் மருமகளும், கார்த்திகாயினி, தர்ஷானந்தன், டிலக் ஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரெமிசேச்சிலின் அன்பு மாமியாரும், ரென்சிகாவின் பேர்த்தியும், கலாரதி (சுவிஸ்), ரவிச்சந்திரன் (சுவிஸ்), சாந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவராசா (ஜேர்மனி), வில்வராசா (சுவிஸ்), காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் பாலாம்பிகை ஜெயலோசினி (சுவிஸ்), யம்புவினாயகராசா, தர்ஷினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி, கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்மந்தப்பிள்ளையார் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

தகவல்
வீ.பேரின்பராசா (கணவர்)

# ராணுவத்தினரை யாழ்ப்பாணத்தில் நிலைநிறுத்த சதி

## கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் பாஸ்கரா சாடல்

கொழும்பு, ஓக. 2

யாழ்ப்பாணம், கொக்குவிலில் இரு பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலைச் சாதாரணமாகக் கருதிவிடமுடியாது. இது குடாநாட்டில் இராணுவப் பிரசன்னத்தை நிலைநிறுத்துவதற்காக இருக்கலாம். இல்லையேல் நீதிபதி மா. இளஞ்செழியன் மீதான தாக்குதல் பின்னணியைத் திசை திருப்புவதற்கான சதித்திட்டமாகவும் இருக்கலாம். எனவே, இது குறித்து தீர்க்கமாக ஆராய வேண்டும்.

இவ்வாறு கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினரான சி. பாஸ்க்கரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைக் காலங்களில் வடபுலத்தில் நடக்கும் குற்றச் செயல்களை நோக்கும் போது பலத்த பின்னணிகளும் ஆழ்ந்த பல தொடர்புகளும் இருப்பது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. இந்தத் தாக்குதலுக்கு பின்னால் பெரும் சூழ்ச்சிகள் மறைந்திருப்பதையும் ஊகிக்க முடிகிறது.

இராணுவப் பிரசன்னத்திற்காகத் தொடர்ந்து பதற்றமான நிலைகள் இருப்பது அவசியமாகின்றது. அதற்குக் குற்றச்செயல்கள் நடைபெற வைப்பது அவசியமாகின்றது. இதனடிப்படையில் இந்தக் குற்றச்செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை புலனாய்வுத் துறையின் உதவியுடன் கண்டறிய வேண்டும். இல்லையேல் பெரும் சிக்கல் நல்லாட்சிக்கு ஏற்படும்- என்றார். (த-ய)

# பொலனறுவை பாடசாலைக்கு புதிதாக மூன்று மாடிக் கட்டடம்

## அரச தலைவரால் திறந்துவைப்பு

கொழும்பு, ஜுலை02

பொலனறுவை ரோயல் ஆரம்பப் பாடசாலையில் புதிய மூன்று மாடிக் கட்டடம் மற்றும் நடன மண்டபம் ஆகியன நேற்றுமுன்தினம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டன.

ரஜரட்ட நவோதய எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனைத்து வசதிகளுடனும் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மண்டபத்திற்கு 50 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. கல்லூரியின் புதிய கணினிப் பிரிவு மற்றும் நீர்சுத்திகரிப்பு நிலையம் என்பனவும் மாணவர்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டன. வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (த)

# நாட்டை விற்கும் ஆட்சியாளருக்கு தண்டனை உறுதி

## கூறுகின்றார் சரத் வீரசேகர

கொழும்பு, ஓக 2

இலங்கையின் வளங்களைப் பன்னாடுகளுக்குக் கூறுபோட்டுக் கொடுக்கும் தற்போதைய ஆட்சியாளர்கள் அமையப்போகும் வேறு ஓர் அரசின் கீழ் தேசத்துரோகிகளாக அடையாளப்படுத்தப்பட்டு கடுமையான தண்டனை வழங்கப்படும்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய நண்பருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா, சீனா உள்ளிட்ட உலகின் பலம் வாய்ந்த நாடுகளுக்கு எமது நாட்டின் அரச வளங்களை விற்பனை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் எமது நாடு வளங்கள் அற்ற நாடாக மாறக்கூடும். அதற்கு முன்னர் இந்த அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளமையால் நீதிபதிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

நாட்டின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும் இவ்வாறான உடன்படிக்கைகளைச் செய்யும் ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் வளங்களைப் பன்னாட்டுக்குக் கூறுபோட்டுக் கொடுக்கும் இவர்கள் தேசத்துரோகிகளாக அடையாளப்படுத்தப்பட்டுக் கடுமையான தண்டனை வழங்கப்படும்- (த)

# இரத்தினபுரியில் மண்சரிவு அபாயம்

## இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை

சப்ரகமுவ மாகாணத்தில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பெய்துள்ளதால் இரத்தினபுரி மாவட்டத்தின் பல பகுதிகளில் மண்சரிவு அபாயம் தோன்றியுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தேசிய கட்ட ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆராய்ச்சிகளின்படி இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த எரத்தன, கடவிகந்த, தெவிபஹல, குருவிட்ட, அதிரியன்வல, சுடகல, லக்ஸகந்த, கீரகல மற்றும் தந்தெனிய கிராமசேவையாளர் பிரிவுகளில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது எனவும், அதனால் அந்தப் பகுதி மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் எனவும், மழை தொடருமானால் அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# புலிகளுக்கெதிரான வழக்கில் இருந்து விலகினார் நீதிபதி

## வேறு ஒருவரை நியமிக்குமாறு நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு கடிதம்

மொறட்டுவை, வீதியில் 2007 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி பயணித்த தனியார் பஸ்ஸொன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டொன்றை வெடிக்க வைத்து 27 பயணிகளைக் கொன்றதுடன், 40 பேருக்குப் படுகாயங்கள் விளைவித்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணையில் இருந்து பாணந்துறை மேல்நீதிமன்ற நீதிபதி திருமதி குசலா வீரவர்தன விலகியுள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தங்கவேலு நிமலன் அல்லது செல்வம், நடேசன் குகநாதன் ஆகிய இருவருக்கும் எதிராகத் தொடரப்பட்டிருந்த பாரதூரக் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணையிலிருந்தே அவர் விலகினார். இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தத் தான் விருப்பப்படாததால் வேறொரு மேல்நீதிமன்ற நீதிபதியிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்குமாறு அவர் நீதி சேவைகள் ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வழக்கின் ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்ட போது சந்தேகநபர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமொன்றைக் கொடுத்திருந்தனர். அந்த வாக்குமூலத்தை அரச தரப்பில் சாட்சியமாகச் சமர்ப்பிக்கலாம் எனத் தீர்ப்பளித்த திருமதி குசலா வீரவர்தன இந்த வழக்கைத் தான் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்று நீதி சேவைகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ரவிக்கு உடன் தண்டனை வழங்கவேண்டும்

## சு.கவின் அமைச்சர்கள் மைத்திரிக்கு அழுத்தம்

கொழும்பு, ஓக 2
இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி விவகாரத்தில் அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட சிலர் பின்புலமாக உள்ளனர் எனத் தகவல்கள் அம்பலமாகியுள்ள நிலையில் அவர்களுக்கு எதிராக அரச தலைவர் உடனடியாக நடவடிக்கையை எடுக்கவேண்டும் எனச் சுதந்திரக் கட்சியில் உள்ள அமைச்சர்கள் சிலர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

பிணைமுறி மோசடி விவகாரத்தில் அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்டவர்கள் பின்புலமாக இருந்துள்ளனர் என்று குறித்த விடயம் தொடர்பில் விசாரணை செய்துவரும் அரச தலைவர் ஆணைக்குழுவுக்கு ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததை அடுத்து அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, சம்பிக்க ரணவக்க ஆகியோர் ரவி கருணாநாயக்க உடனடியாக பதவி விலகவேண்டும் என்று பகிரங்கக் கோரிக்கையை விடுத்திருந்தனர்.

அத்துடன், ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர சுதந்திரக் கட்சி தயாராகி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், பிணைமுறி விவகாரத்தின் குற்றவாளிகளுக்கு எதிராக அரச தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் சிலர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

இந்த விடயத்தில் மக்கள் பெரும் அதிருப்தியடைந்துள்ளதால் அரச தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுத்தே ஆகவே வேண்டுமென இவர்கள் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளனர் எனவும் அறியமுடிகின்றது. (கு)

# அமைச்சுப் பதவியை உடன் துறக்கட்டும் ரவி

## தயாசிறி பகிரங்கக் கோரிக்கை

அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க உடனடியாகத் தனது அமைச்சுப் பதவியைத் துறக்க வேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர பகிரங்கக் கோரிக்கை விடுத்துள் ளார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி விவகாரம் குறித்து அரச தலைவரால் நியமிக்கபட்டசிறப்புஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த ஆணைக்குழுவில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்குப் பேப்பர்சுவல் நிறுவனத்தின் தலைவர் அர்ஜூன் அலோசியஸ் வாடகைக்கு வீடொன்றைப் பெற்றுக்கொடுத்தாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான ஆதாரங்கள் வலுப்பெற்றுள்ளதால் அரச தரப்பில் இருந்து பல்வேறு எதிர்ப்புகள் வெளியாகியவாறு உள்ளன.

இந்த நிலையில், அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணைகள்முடியும்வரைஅமைச்சர் ரவி கருணாநாயக்க தமது அமைச்சுப் பதவியைத் துறக்கவேண்டும் என்று அமைச்சர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார். (கு)

# பிணைமுறி மோசடி செய்தோர் விவரம் விரைவில் அம்பலம்

## கூறுகின்றது மகிந்த அணி

கொழும்பு, ஓக 2
இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்ற பிணைமுறி மோசடி விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள சகலரின் பெயர் விவரங்களும் விரைவில் வெளிவரும் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிணைமுறி மோசடியின் முதன்மைச் சூத்திரதாரி அர்ஜூன் அலோசியஸ், அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு நன்றிக்கடனாக இரு சொகுசு வீடுகளை வழங்கியிருக்கும் விவகாரம் இப்போது அம்பலமாகியுள்ளது. அவரைப்போலவே இந்த மோசடிக்காக அலோசியஸிடமிருந்து அன்பளிப்புகளைப் பெற்றுக்கொண்டவர்களின் விவரங்கள் விரைவில் அம்பலமாகும்.

இந்த நாட்டின் மிகப்பெரிய மோசடி எனக் கருதப்படும் பிணைமுறி மோசடியில் உதவி ஒத்தாசை வழங்கிய சகலருக்கும் அலோசியஸ் தாராளமாக அன்பளிப்புகளை அள்ளி வீசியிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?" என்ற தோரணையில் தன்னை உத்தமனாகச் சித்திரித்துக் கொண்டிருந்த ரவியின் குட்டு ஆணைக்குழுவின் முன்னிலையில் வெட்டவெளிச்சமாகி விட்டதைப்போலவே ஏனைய மோசடியாளர்களின் முகத்திரைகளும் வெகுவிரைவில் கிழிக்கப் பட்டுவிடும் -என்றார். (கு)

# ஆளில்லாது ஒதுங்கிய இலங்கைப் படகால் தமிழகத்தில் பரபரப்பு

கொழும்பு, ஓக 2
இந்தியாவில் புதுக்கோட்டை மாவட்டம், ஆர்.புதுப்பட்டினம் கடலோரத்தில் கரை ஒதுங்கிய ஆளில்லாத இலங்கைப் படகு குறித்து இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோட்டைப்பட்டினம் அருகில் உள்ள ஆர். புதுப்பட்டி னம் கடல் பகுதியில் நேற்று முன் தினம் அதிகாலை ஒரு நவீன பைபர் படகு கரை ஒதுங்கியதை அந்தப் பகுதி மீனவர்கள் கண்டு இந்தியக் கடலோரக் காவல் படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதையடுத்து, கடலோரக் காவல் படையினர் குறித்த இடத்துக்குச் சென்று பார்த்துள்ளனர். அந்த படகு இலங்கையைச் சேர்ந்த நவீன இயந்திரம் பொருத்தப்பட்ட பைபர் படகு என அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் குறித்த படகு மீன்பிடிப் படகு என்பதற்கு எந்த தடயமும் இல்லை எனவும், துடுப்புகளும் டீசல் கொள்கலனும் மட்டுமே இருந்ததாகவும் இந்தியக் கடலோரக் காவல் படையினர் கூறினர்.

ஆளில்லாமல் மர்மமான முறையில் இலங்கைப் படகு ஒன்று கரை ஒதுங்கிய தகவல் அறிந்ததும் வந்த புதுக்கோட்டை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் செல்வராஜ், பட்டுக்கோட்டை கடலோரக் காவல் படை அத்தியட்சகர் ரவிச்சந்திரன் ஆகியோர் படகைப் பார்வையிட்டதுடன் விசாரணை செய்து வருகின்றனர்.

இதனால் புதுக்கைக் கடலோரப் பகுதியில் சற்றுப் பரபரப்பு ஏற்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (கு)



கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும். தமிழ் இலக்கிய விழா கல்முனை வெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நடைபெற்று வருகிறது. விழாவின் முதல்நாள் மாலை நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம உட்பட விருந்தினர்கள் அழைத்துவரப்படுகின்றனர். (கு 30)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்லையா நடராசா
மலர்வு
07.02.1929
உதிர்வு
28.07.2012
திதி:- பூர்வபக்க தசமி
(02.08.2017)

உயிருக்கு உயிராக இருந்து எமைக்காத்த எமது ஐயாவே!
ஐந்து ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் ஐயா....
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நாகலிங்கம் சுவாமிகள் வீதி,
சங்கானை.

குடும்பத்தினர்.
076 624 2951

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
வேலுப்பிள்ளை
பூபாலப்பிள்ளை



தோற்றம்
10.07.1930
மறைவு
02.08.2016
திதி:- அமாவாசை
(23.07.2017)



தந்தைக்கு இலக்கணமாய் ஆடி அமாவாசை
திதிதனிலே இறையடி சேர்ந்திட்ட - அப்பாவே!
எற்றமிகு வாழ்வுதனை எமக்களித்தீர்
மரிவுற்று ஓராண்டு ஆனாலும் - எம்
வாழ்நாளில் என்றென்றும் உங்கள்
வழிகாட்டல் நிலைத்திருக்கும்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீங்கா நினைவுகளுடன்...
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
மங்கையர்க்கரசி
ராஜாராம்



(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் – விஞ்ஞானம், முன்னாள் விரிவுரையாளர் – தேசிய கல்வி நிறுவகம்– மகரகம தொண்டமானாறு வெளிக்கள நிலைய உப தலைவர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர், யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞானபீட சபையின் முன்னாள் உறுப்பினர், முன்னாள் தலைவர் – வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்)

மலர்வு
21.01.1943
உதிர்வு
05.08.2014
திதி: தசமி (02.08.2017)

அன்பு, நேர்மை, இறைபக்தி, கடமையுணர்வு எமது குடும்ப முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட எனது அன்புத் துணைவியின் மூன்றாண்டு நினைவு தினமாகிய இன்று (02.08.2017) புதன்கிழமை ஆடிவளர்பிறை தசமி திதியில் நினைவு கூர்ந்து எல்லாம் வல்ல கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வர பெருமானதும் சாவகச்சேரி கற்குழி அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் பெருமானதும் பாதாரவிந்தங்களை அடைய மனதாரப் பிரார்த்திக்கும்

இல.06, கற்குழி,
முதலாம் ஒழுங்கை,
[illegible], சாவகச்சேரி.
077 723 8528

பாசமிகு கணவர்,
அன்பு அண்ணா, அன்புத் தம்பிமார்,
அன்புத் தங்கை, அன்பு மாமி,
மைத்துனி, மைத்துனர் மற்றும் மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 [illegible]
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## மக்களின் தவறல்ல இது

கொக்குவிலில் பொலிஸார் மீது பட்டப் பகலில் துரத்தித் துரத்தி வாள்வெட்டு. அதில் இருவர் படுகாயம். தாக்குதல் நடத்தியவர்கள் மோட்டார்சைக்கிள்களில் தப்பிச்சென்றுவிட்டனர். வடக்கில் பொலிஸார் மீது இரண்டு வாரங்களுக்குள் நிகழ்த்தப்பட்ட மூன்றாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். இதையடுத்து பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் பரபரப்பாகியிருக்கின்றனர். பொலிஸ் மா அதிபர் நேரடியாக யாழ்ப்பாணம் வந்து நிலமைகளை அவதானித்தார்.

பொலிஸார் பொறுமையின் எல்லையை அடைந்துவிட்டனர், எத்தகையை விலை கொடுத்தாயினும் பாதுகாப்பை, அமைதியை நிலைநாட்டுவோம் என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பொதுமக்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகத்தான் நாம் சோதனைகள், தேடுதல்கள், இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தவிர்த்திருந்தோம், அதுதான் இத்தகைய சம்பவங்களுக்குக் காரணம், இனியும் அதனை அனுமதிக்க முடியாது என்கிறார் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர.

அவர் சொல்ல முயற்சிப்பது எல்லாம் இதுதான், போர்க்காலத்தில் இருந்த கெடுபிடிகளை நெருக்கடிகளை நாங்கள் தளர்த்தியதும் நீங்கள் தலைக்குமேல் ஏறி நின்று ஆடுகின்றீர்கள், அதற்காக அனுபவிக்கப்போகிறீர்கள், அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு நீங்கள்தான் காரணம்; நாங்கள் அல்லர் என்கிறார்.

அதாவது, இருந்தால் ஒழுங்காக இருங்கள் குழப்படி செய்தால் அடித்து முறித்துவிடுவேன் என்று எச்சரிப்பதைப் போல் இருக்கிறது அவரது கருத்து. தமிழர்கள் அடங்கி ஒடுங்கி இருப்பதானால் இருக்கவேண்டும். இல்லையேல் சோதனை, தேடல், பாதுகாப்புக் கெடுபிடி என்று உங்களைச் சிப்பிலியாட்டி விடுவோம் என்று கூறுகின்ற எச்சரிக்கை இது.

போர்க்கால மனநிலையில் இருந்து பொலிஸாரும் படையினரும் விடுபடவில்லை என்பதற்கான ஆகப் பிந்திய மிகச் சிறந்த உதாரணம் இது. பொலிஸ் மா அதிபர் ஒன்றைச் சரிவரப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டார். பொலிஸாரைத் தாக்கியவர்கள் சில தனி மனிதர்களே. பொதுவில் இத்தகையவர்களைக் குற்றவாளிகள் என்று விளிப்பதே வழமை. பொலிஸாரை அவர்கள் தாக்கியதன் பின்னணியில் தமிழ் மக்களுக்கான போராட்டம் ஒன்றும் கிடையாது. அப்படியிருக்கும்போது, யாரோ சில குற்றவாளிகள் செய்த குற்றங்களுக்காக, ஒட்டுமொத்தச் சமூகமும் எப்படி தண்டனையைச் சுமக்க முடியும். இது எதேச்சாதிகாரம் அல்லவா?

எல்லாச் சமூகங்களிலும் குற்றவாளிகள் இருக்கிறார்கள். அந்தக் குற்றவாளிகள் செய்யும் தவறுகளுக்கு ஒட்டுமொத்த மக்களும் எப்படிப் பொறுப்பாளிகளாக முடியும்? இப்போது பொலிஸாருக்கு எதிராகக் குற்றங்கள் நிகழ்ந்ததும் கொதித்தெழுந்து கோபப்படும் பொலிஸ் அதிகாரிகள், பொது மக்களுக்கு எதிராகக் குற்றங்கள் நிகழ்ந்தபோது இப்போது போன்று ஒழுங்காகச் செயற்பட்டு அந்தக் குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தியிருந்தால் பொலிஸாரில் கை வைக்கும் துணிவை அவர்கள் பெற்றிருக்க மாட்டார்களே? அப்போது நீங்கள் ஏன் வாளாவிருந்தீர்கள்? அந்தக் குற் றங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டன என்பதாலா?

மற்றொரு கேள்வியும் பொலிஸ் மா அதிபரிடம் கேட்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரைப் பொலிஸார் கேட்டுக் கேள்வியின்றிச் சுட்டுக் கொன்றனர். சுன்னாகத்தில் கைது செய்த இளைஞனைச் சித்திரவதை செய்து பொலிஸார் கொன்றனர். அண்மையில் வடமராட்சியில் இளைஞன் ஒருவர் விசாரணை ஏதுமின்றிச் சுட்டுக்கொல்லப்பட்டார். உடனே, இவையெல்லாம் தமிழ் மக்களுக்கு எதிரான பொலிஸாரின் திட்டமிட்ட செயல்கள் என்று நீங்கள் ஏன் எடுத்துக்கொள்ளவில்லை? பொலிஸாரிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை? இன்று பொலிஸார் என்ன செய்யவேண்டும், எப்படி நடந்துகொள்ளவேண்டும், கடைநிலைப் பொலிஸ் பணியாளர்களுக்குத் துணிவூட்டக்கூடிய வகையில் எப்படி உயரதிகாரிகள் செயற்படவேண்டும் என்று அறிவுரை வழங்கும் நீங்கள், ஏன் அன்று அப்படிப்பட்ட அறிவுரைகளை வழங்கவில்லை? பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதாலா?

வார்த்தைக்கு வார்த்தை இன, மத, கட்சி பேதங்களுக்கு அப்பால் சட்டம் எல்லோருக்கும் சமம் என்று நீங்கள் கூறினாலும், கடந்த காலங்களில் பொலிஸார் அப்படி நடந்துகொள்ளாததன் விளைவே இன்றைய வன்முறைகள். இதனை பெரும் சமூகக் குழப்பமாக பொலிஸ் மா அதிபரும் மற்றோரும் சித்தரிக்க முயற்சிக்கின்றமை மோசமான அணுகுமுறை.

குற்றவாளிகளுக்கு எதிராகப் பொலிஸார் கடந்த காலங்களிலேயே இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருக்கவே மாட்டாது. இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. இந்தத்தாக்குதல்களைக்காரணமாகவைத்து பொதுமக்களுக்குத் துன்பம் விளைவிப்பதைவிட்டு குற்றவாளிகளுக்கு [illegible] நடவடிக்கையை எடுங்கள். எல்லாமே [illegible] வரும்.



# இலட்சங்களில் புரள்கின்ற மாகாணசபை உறுப்பினர்கள்

■ இந்துமதி

வடக்கு மாகாண சபை என்பது, அதன் உறுப்பினர்கள் பல அணிகளாகப் பிளவுபட்டு தமக்குள் மோதிக் கொள்ளுமொரு இடம் என்பதற்கு அப்பால், அதன் உறுப்பினர்களுக்குத் தாரளமாக பணத்தை வாரி வழங்கும் ஒன்று என்ப தும் தற்போது தெரியவந்துள்ளது.

தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரத்தின்மூலமாக வடக்குமாகாண சபை உறுப்பினர்கள் பல இலட்சம் ரூபாய்களைச் சம்பாதித்துள்ளனர். இதேவேளை கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டமை போன்று சமமான சலுகையை வழங்குமாறு நிதியமைச்சரிடம் அவர்கள் மனுவொன்றையும் கொடுத்துள்ளனர். இவற்றையெல்லாம் பார்க்கும்போது, அடுத்த மகாணசபைத்தேர்தலில் வேட்பாளர் நியமனம் பெற்றுக் கொள்வதில் கடுமை யான போட்டி நிலவு மென்பதை இப்போதே கூறிக்கொள்ள முடியும். ஏனென்றால் பெரும் தொகைப் பணத்தை இலேசா கச் சம்பாதிப்பதற்கு எவருக்குத்தான் மனம் இல்லாமல் இருக்கும்?

தமிழ் அரசுக் கட்சியை நிறுவிய தலைவரான தந்தை செல்வா பொது வாழ்வில் இறங்கித் தமது சொத்துக்களையெல்லாம் இழந்து இறுதிக் காலத்தில் பெரும் நிதி நெருக்கடியை எதிர் கொண்டார். அவரிடம் சொந்த வாகனம் கூட இருக்கவில்லை. வாடகைக்கு அமர்த்திய வாகனங்களில் சென்று மக்கள் பணிகளை ஆற்றி வந்தார். அவர் விரும்பியிருந்தால் அரசிடமிருந்து சலுகை விலையில் வாகனமொன்றைப் பெற்றுக் கொண்டிருக்க முடியும். ஆனால் அவர் தமது தன்மானத்தை இழப்பதற்கு ஒருபோதுமே விரும்பியதில்லை. மக்கள் கஷ்டப்படும்போது தாம் மட்டும் சொகுசு வாகனத்தைப் பயன்படுத்துவது நியாயமல்ல என்பதே செல்வாவின் கொள்கையாக அமைந்திருந்தது. செல்வாவின் எளிமைக்கும் நேர்மைக்கும் ஓர் உதாரணத்தைக் குறிப்பிடுவார்கள். செல்லையா குமாரசூரியர் தபால் அமைச்சராக இருந்தபோது இடம்பெற்ற சம்பவம் அது. ஒரு நாள் தபால் அமைச்சின் அலுவலகப் படிகளில் தந்தை செல்வா ஏறி வந்து கொண்டிருப்பதை அமைச்சர் குமாரசூரியர் மேல் மாடியிலிருந்து கண்டுவிட்டார். அவர் உடனடியாகப் படிகளில் இறங்கிச் சென்று "சேர், நீங்கள் சிரமப்பட்டு ஏன் இங்கு வந்தீர்கள்? எனக்கு ஓர் தொலைபேசி அழைப்பை விடுத்திருந்தால், நானே வந்து உங்களைச் சந்தித்திருப்பேன்" எனக்கூறினார். அதற்குச் செல்வா "இல்லை… இல்லை… தாங்கள் ஓர் அமைச்சராக உள்ளீர்கள். நானோ ஒரு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர். அதனால் நான் உங்களைநாடிவருவதேநியாயமானது" என்றார். செல்வா ஏதோ தமது சொந்த விடயமாகத்தான் தம்மைக் காண வந்துள்ளார் என நினைத்த குமாரசூரியர் "சேர்…. நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டும்?" எனக்கேட்டார். "அமைச்சரே, தாங்கள் எனக்கு ஒன்றுமே செய்ய வேண்டாம். மக்களுக்குத் தேவையான ஓர் உதவியைத் தங்களிடமிருந்து பெறவே இங்கு வந்துள்ளேன்" எனப்பதிலளித்த செல்வா, தமது தொகுதியில் உள்ள மிகவும் பின்தங்கிய ஓர் இடத்தைக் குறிப்பிட்டு அங்கு வசிக்கின்ற மக்கள் தமது அஞ்சல் தேவைகளைப் பெறுவதில் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே அங்கு ஓர் உப அஞ்சல் அலுவலகத்தை அமைப்பதற்குத் தாங்கள் உதவ வேண்டும் எனவும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். அமைச்சர் தந்தையின் பெருந்தன்மை கண்டுதிகைத்து நின்றார்.

ஆனால் இன்று தந்தை செல்வாவின் வழியில் செல்வதாகக் கூறிக் கொள்பவர்களும், ஏனையவர்களும் தமது தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்தின் கொள்வனவுத்தொகை மட்டம் மற்றும் வரிச் சலுகை என்பவற்றை அதிகரிக்குமாறு கேட்டுக் கொழும்பில் உள்ள நிதியமைச்சின் அலுவலகப்படிகளில் காத்து நிற்கின்றனர்.

### தமக்குள் முட்டி மோதிக் கொள்ளும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள்

போரால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியாக வடக்கு மாகாணம் காணப்படுகின்றது. வடக்கில் வாழ்கின்ற மக்கள் போர் ஓய்ந்து எட்டு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும், தமது பிரச்சினைகளுககுத் தீர்வு கிடைக்காத நிலையில் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கடந்த 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபையாலும் இந்த மக்களின் பிரச்சினைக ளுக்குத் தீர்வு காணமுடியவில்லை. மக்களின் பிரச்சினைக ளுக்குத் தீர்வு காணவேண்டிய மாகாணசபை உறுப்பினர்கள் சிறிய கருத்து வேறுபாடுகளுக்கும் தமக்குள் மோதிக் கொண்டு மக்களையும் பிளவுபடுத்தி வருகின்றனர்.

### தமது வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ளும் நோக்கில் செயற்படுகின்றனர் உறுப்பினர்கள்

முதலமைச்சருக்கு ஆதரவானவர்கள் ஒரு புறமும், எதிரானவர்கள் மறுபுறமும் நின்று கொண்டு போட்டி போட்டுச் செயற்படுகின்றனர். இவர்கள் மக்களைப் பற்றிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. ஆனால் தத்தமது சொந்த நலன்கள் பற்றி நன்றாகவே சிந்திக்கின்றனர். தமக்கு வழங் கப்படுகின்ற வேதனம் போதாதெனக் குறைப்பட்டுக் கொள்கின்றனர். மாகாணசபை அமர்வுகளின் போது தமக்கு வழங்கப்படுகின்ற உணவு மற்றும் சிற்றுண்டிகள் தொடர்பாக முறைப்பாடு தெரிவிக்கின்றனர். தாமும் அமைச்சர் பதவி யொன்றைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கி நிற்கின்றனர். தற்போது தீர்வை குறைந்த அனுமதிப் பத்திரங்களை விற்று இலட்சக்கணக்கில் பணத்தைச் சுருட்டிக் கொண்ட போதிலும், அதில் திருப்தியடை யாது மேலதிக நிதியை வழங்குமாறு கோரி நிற்கின்றனர். உண்மையில் இவர்கள் அதிர்ஷ்டசாலிகள்தான். எதுவுமே செய்யாது, உடம்மை வருத்தாமல் பல இலட்சம் ரூபாய்களைச் சம்பாதிப்பது என்பது சாதாரண விடயமல்ல.

அடுத்த ஆண்டு மாகாணசபைத்தேர்தல் இடம்பெறும் போது மக்களிடம் வாக்குக் கேட்டு இவர்கள் தான் வந்து நிற்கப் போகின்றார்கள். மேடைகளில் நின்று முழங்கப் போகின்றார்கள். மணலைக் கயிறாகத்திரிப்போம், மலைகளைப் புரட்டிப் போடுவோம் என்றெல்லாம் வீர வசனங்கள் பேசப்போகின்றார்கள். ஆனால் மக்கள் இனியும் இவர் களை நம்புவார்களென்பது சந்தேகமே. மக்களின் வரிப்பணத்தை வீணாக்கி வருகின்ற மாகாண சபையில் உறுப்பினர்களாக இருப்பவர்கள். இனியாவது மக்களைப் பற்றிச் சிந்திப்பார்களா? தமது மனச்சாட்சிக்கு இடம்கொடுப்பார்களா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


> கடந்த காலங்களிலும்கூட, தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் தமிழ்த் தலைவர்களால் எதுவும் முடியாது போனதை நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று நாட்டை நிர்வகித்த பெரும்பான்மையினத் தலைவர்கள் தமிழர்களுக்கு எதையுமே வழங்கி விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். தமிழர்கள் தம்மை மிஞ்சி விட்டால் தம்மால் எதுவுமே செய்ய முடியாமல் போய்விடும் என்ற அச்சமே இதற்கான முக்கிய காரணமாகும்.

# என்ன செய்ய போகின்றார் கூட்டமைப்பின் தலைவர்?

சேரலாதன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதிகம் பேசாதவர். இதனால் அவர் மௌனம் காப்பவர், ஓர் இயங்காத தலைவர் என்றெல்லாம் விமர்சனங்கள் எழுந்துள்ளன. மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணி தரப்பிடமிருந்து இந்த விமர்சனம் எழுந்துள்ளமைதான் பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராக மட்டுமல்லாது எதிர்க்கட்சித் தலைவராகவும் விளங்குகின்றார். அவரை அந்தப் பதவியில் இருந்து அகற்றி விடுவதற்கு மகிந்த அணியினர் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்காததால், சம்பந்தன் மீது அவர்கள் காழ்ப்புணர்வில் உள்ளனர். ஏதாவது குறைகளைக் கூறி அவரை அந்தப் பதவியிலிருந்து தூக்கி வீசி விடுவதே அவர்களது முக்கிய நோக்கமாகும். தமது நோக்கம் நிறைவேறுமானால் தம்முள் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமர்ந்து விடலாமென்பது அவர்களது திட்டமாகும்.



இதேவேளை, அரசைக் கவிழ்ப்பதற்கு மகிந்த அணியுடன் கூட்டுச் சேரப் போவதில்லையெனச் சம்பந்தன் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். இதுவும் சம்பந்தன் மீது கூட்டு எதிரணியினருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது.

நல்லாட்சி அரசு கவிழ்ந்து, மகிந்த தலைமையில் ஓர் அரசு பதவியேற்பதைக் கூட்டமைப்பு ஒருபோதுமே விரும்ப மாட்டாது மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் அனுபவித்த கொடுமைகளைக் கூட்டமைப்பினால் எளிதில் மறந்துவிட முடியாது. பாதிக்கப்பட்ட தமிழர்களும் ஒருபோதிலும் மறக்க மாட்டார்கள்.

கூட்டமைப்பின் தலைமை, இப்போது உள்ளதைவிட வலுவானதாக இருந்திருக்கலாமென வடக்கு மாகாண முதலமைச்சர் அண்மையில் கூறியிருந்தார். இதன் மூலமாக இவருக்கும் சம்பந்தன் மீது திருப்தியில்லை என்பது தெளிவாகின்றது. தமிழ் மக்களில் ஒரு பிரிவினரும் இத்தகையதொரு அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் சம்பந்தன் தவறிவிட்டார் எனவும் இவர்கள் கருதுகின்றனர். கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் சிலவும் இதே கருத்தைக் கொண்டுள்ளன.

## முன்னாள் ஆட்சியாளர்கள் கடுங்கோட்பாட்டு நிலைப்பாட்டையே கைக்கொண்டனர்

கடந்த காலங்களிலும்கூட, தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் தமிழ்த் தலைவர்களால் எதுவும் முடியாது. கடந்து போனவற்றை நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று நாட்டை நிர்வகித்த பெரும்பான்மையினத் தலைவர்கள் தமிழர்களுக்கு எதையுமே வழங்கி விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். தமிழர்கள் தம்மை மிஞ்சி விட்டால் தம்மால் எதுவுமே செய்ய முடியாமல் போய்விடும் என்ற அச்சமே இதற்கான முக்கிய காரணமாகும்.

சிங்களவர்களுக்கென இந்த நாடு மட்டுமே உள்ளது. இதனை இழந்துவிட்டால் அவர்கள் கடலுக்குள் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டியது தான் என்ற தவறான பாலபாடம் சிங்கள மக்கள் மத்தியில் சிறு வயதில் இருந்தே போதிக்கப்பட்டு வருகின்றது. இளவயதில் ஒருநாள் துட்டகைமுனு தனது உடலைச் சுருட்டியவாறு படுத்திருந்தான். இதனைக் கண்ட அவனது தாயார் அதற்கான காரணத்தை அவனிடம் கேட்டார். அதற்குத் துட்டகைமுனு வழங்கிய பதில் வேடிக்கையானது. ஒரு புறத்தில் கடலும் மறுபுறத்தில் தமிழர்களும் இருக்கும்போது என்னால் எவ்வாறு உடலை நீட்டிப் படுக்க முடியுமென அவன் வழங்கிய பதிலில் தமிழர்களுக்கு எதிரான குரோதம் தெளிவாகப் புலப்பட்டது. இன்றுவரை அது தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தமிழர்களுக்கு உரிமை கிடைக்கு மென இனியும் நம்பிக்கொண்டிருப்பதில் அர்த்தமே கிடையாது. சம்பந்தனைக் குறை கூறிக் கொண்டிருப்பவர்கள் இதை ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## அரசின் நியாயமான செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் கூட்டமைப்பு

தற்போதைய அரச தலைவரைப் பதவியில் அமர்த்தியதில் சம்பந்தனுக்குப் பெரும் பங்கு உள்ளது. அவரது கோரிக்கையை ஏற்றுத் தமிழர்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து அவரை வெற்றிபெறச் செய்தனர். அவ்வாறு நடந்திருக்காது விட்டால் மகிந்தவின் ஆட்சியே இன்றும் தொடர்ந்திருக்கும். இதைவிட ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அரசை அமைத்துக் கொண்ட நிலையில் கூட்டமைப்பு எதிர்க் கட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. ஆனால், நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியாக அது செயற்படவில்லை. அரசின் நியாயமான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதையே தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. கடந்த வரவு செயலுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பின்போது அரசுக்கு ஆதரவாக கூட்டமைப்பு வாக்களித்தமை இதற்கொரு உதாரணமாகும். இவை யாவும் அரச தலைவருக்கும், அரசுக்கும் இன்றும் கூடப் புரிவதாக இல்லை. ஆனால் இனவாதிகளின் நெருக்கடிகளை மீறிச்செயற்படுவதற்கு [illegible] வில்லை. [illegible]

காலம் காலமாக இந்த நாட்டில் இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. இதில் கூட்டமைப்பின் தலைவர் எதுவுமே செய்யவில்லையென நொந்து கொள்வதில் எவ்வித நியாயமும் இல்லை. ஆனால் வடக்கு மாகாணசபை விடயத்தில் சம்பந்தன் அசண்டையீனமாக இருந்ததை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இது முழுக்க முழுக்கத் தமிழர் சார்ந்த பிரச்சினையாகும். இதற்குத் தீர்வுகாண வேண்டியதும் தமிழர் தான். ஆனால் தமக்குள் மோதிக் கொள்ளவே அவர்களால் முடிகின்றது. இந்த நிலையில் சிங்களவர்கள் தீர்வைத் தருவார்களெனத் தமிழர்கள் எவ்வாறு எதிர்பார்த்திருக்க முடியும்?

## கட்சிகளிடையே கருத்து முரண்பாடுகளை வளரவிட்டார் சம்பந்தன்

வடக்கு மாகாணசபையில் பிரச்சினைகள் ஆரம்பித்தபோதே கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளின் தலைவர்களுடன் ஒன்றாய் அமர்ந்து சம்பந்தன் பேசியிருக்க வேண்டும். முரண்பாடான விடயங்களுக்கும் உடனுக்குடன் தீர்வு கண்டிருக்க வேண்டும். முதலமைச்சரையும் இதில் கலந்துகொள்ளச் செய்திருக்கலாம். ஆனால் இங்கு நடந்தது என்ன? கூட்டமைப்பில் இருந்து கொண்டே அதன் தலைமையை மதிக்காத வகையில் சி.வி விக்னேஸ்வரன் நடந்து கொண்டார். கூட்டமைப்புக்கு எதிரானவர்களின் ஆதரவையும் வேண்டிநின்றார். இவற்றையெல்லாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவே சம்பந்தனால் முடிந்துள்ளது. ஒரு மிகப் பெரிய அமைப்பின் தலைவராக அவரால் நடந்து கொள்ள முடியவில்லை.

சம்பந்தன் செயற்படாது இருக்கின்றார் எனக் காரணம் கூறியே சிலர் மாற்றுத் தலைமை தொடர்பாகப் பேசுகின்றனர். இதைத் தொடர விடுவது கூட்டமைப்பின் தலைமைக்கு அழகாக இருக்காது. அது கூட்டமைப்பின் எதிர்காலத்துக்கும் நல்லதல்ல.

## ஆசிரியருக்கான கடிதம்

### கட்டைவேலி நூலகத்தில் வாசகர் நலன் பேணப்படுமா?

நூலகங்கள் மக்களின் அறிவுத் தேடலுக்குப் பெரிதும் உதவுகின்றன. அனைத்துத் தினசரிப் பத்திரிகைகளும் நூலகங்களில் வாசகர்களது பயன்பாட்டுக்கு வைக்கப்படுவதால் மக்கள் அவற்றை வாசித்து உலக நடப்புக்களை அறிந்து கொள்கின்றனர். வாசிப்பதால் மனிதன் முழுமை பெறுகின்றான். இதற்கு நூலகங்கள் பெரிதும் உதவுகின்றன.

வாசகர்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் நூலகங்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். ஆனால் சில நூலகங்களில் அவ்வாறானதொரு நிலையைக் காண முடியவில்லை.

கரவெட்டிப் பிரதேசசபையின் கீழ் இயங்கும் உப அலுவலகங்களால் பொது நூலகங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கட்டைவேலி உப அலுவலகத்தின் கீழும் நூலகம் ஒன்று இயங்கி வருகின்றது. இந்த நூலகத்தைத் தினமும் ஏராளமானவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். சனி, ஞாயிறு தினங்களில் பல்வேறு தரத்திலும் உள்ள மாணவர்கள் இந்த நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் வாசகர்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் சில செயற்பாடுகள் இங்கு இடம்பெற்று வருகின்றமை கவலைக்குரியது.

கிழமை நாள்களில் சில வகையான கிளினிக்குகள், நூலகம் அமைந்துள்ள கட்டடத் தொகுதியில் இடம்பெறுவதால் அந்த வேளைகளில், வாசகர்கள் பத்திரிகைகளை வாசிப்பதில் இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். தமது வாசிப்புத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது அவலப்படுகின்றனர். இதை விட சில நிறுவனங்களின் கூட்டங்களும் அடிக்கடி நூலகத்தில் இடம்பெறுவதால், வாசகர்கள் அனைவருமே பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பாகப் பிரதேசசபைச் செயலாளரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டபோதிலும், அவர் அதைக் கருத்தில் கொள்ள வில்லையெனப் பொது மக்களால் குற்றம் சுமத்தப்படுகின்றது. பிரதேச சபைச் செயலாளர் இனியாவது இந்த நூலகத்தில் வாசகர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலான செயற்பாடுகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்பதே இந்தப் பகுதி மக்களின் கோரிக்கையாகும்.

மா.தர்மலிங்கம், அல்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கொரியா விடயத்தில் ஒருபோதும் சமரசமில்லை

## ட்ரம்ப் முழக்கம்




“ அந்த நாடு கொரியத் தீபகற்பத்துக்கும், ஒட்டு மொத்த உலகத்துக்கும் தொடர்ந்தும் சத்துருவாக உள்ளது. அந்த நாட்டுக்கான வாய்ப்புக்கள் ஏராளமாக வழங்கப்பட்டு விட்டன.

வொஷிங்டன், ஓக. 2
“வடகொரியா விவகாரத்தில் அந்த நாட்டுடன் இனி ஒருபோதும் பேச்சு நடத்தப்போவதில்லை” என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.
அமெரிக்காவின்மூலைமுடுக்கு வரை சென்று தாக்கும் திறன் கொண்ட ஏவுகணையை கடந்த சனிக்கிழமை வடகொரியா சோதித்தது. கண்டம் விட்டுக்கண்டம்பாயும்ஏவுகணைகளில் இது அதி மேம்பட்ட ரகம் என்று சொல்லப்படுகிறது. இதனால் கொரியத் தீபகற்பத்தில் தற்போது மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே அந்த நாட்டுடன் இனி சாமாதானப் பேச்சுக்கு இடமில்லை என்று தெரிவித்தார் ட்ரம்ப். அமெரிக்க ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம்வழங்கிய செவ்வியிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.
“வடகொரியா அமெரிக்காவுக்கும், அதன்நட்புநாடுகளுக்கும் எதிரான கொள்கைகளைக் கைவிடவில்லை. அந்த நாடு கொரியத் தீபகற்பத்துக்கும், ஒட்டு மொத்த உலகத்துக்கும் தொடர்ந்தும் சத்துருவாக உள்ளது. அந்தநாட்டுக்கானவாய்ப்புக்கள்ஏராளமாகவழங்கப்பட்டு விட்டன. இனிமேலும்சந்தர்ப்பம் வழங்க முடியாது” என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம)



அமெரிக்காவின் எப்பாகத்தையும் தாக்கவல்ல கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை கடந்த சனிக்கிழமை வட கொரியா வெற்றிகரமாகச் சோதித்தது. இதையடுத்து அந்த நாட்டின் தலைநகர் பியாங்யாங் உள்ளிட்ட பல்வேறு நகர்களில்வாணவேடிக்கைகளுடன்பெரும்கொண்டாட்டங்கள்நடத்தப்பட்டுவருகின்றன. (ம)

# உலகின் மிக நீள தொங்கு பாலம் சுவிஸில் திறப்பு



சுவிற்சர்லாந்தில் மலைகளை இணைக்கும் வகையில் ஆயிரத்து 620 அடிநீளமுடைய உலகின் மிக நீளமான தொங்கு பாலம் 10 வாரங்களில் கட்டப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.
சுவிற்சர்லாந்து நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள மெட்டர்கான் மலைகளை இணைக்கும் உலகின் மிக நீளமான இந்த நடை பாலம் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. இந்தப்பாலம் சுவிற்சர்லாந்தின் கிராச்சென் மற்றும் சொமட் நகரங்களை இணைக்கும் வகையில்கட்டப்பட்டுள்ளது. இதற்கு முன் சொமட் பள்ளத்தாக்கை கடப்பதற்கு 4 மணி நேரம் ஆகும். பாலம் கட்டியதன் மூலம் இந்த நேரம் வெறும் 10 நிமிடமாகக் குறைந்துள்ளது. இதன் அகலம் 65 சென்ரி மீற்றராகும். இது கடல் மட்டத்திலிருந்து 7 ஆயிரத்து 218 அடி உயரத்தில் உள்ளது. (ம)

## அமைதிப் படை மீது சோமாலியாவில் கடும் தாக்குதல் 39 பேர் இறப்பு

மொகடிசு, ஓக. 2
சோமாலியாவில் அமைதிப் படையைச் சேர்ந்த ஆஸ்திரேலிய இராணுவச் சிப்பாய்கள் சென்ற வாகனங்களை இலக்குவைத்து அல் சபாப் ஆயுததாரிகள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 39 சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
சோமாலியாவில்அல்கொய்தா ஆயுததாரிகளின் ஆதரவுடன் இயங்கும் அல் சபாப் ஆயுதக் குழுவின் ஆதிக்கம் உள்ளது. அவர்களை ஒடுக்க சோமாலிய இராணுவத்துடன் இணைந்து ஆபிரிக்க ஒன்றியமும் போராடி வருகிறது.
ஆப்பிரிக்க ஒன்றியம் இராணுவத்தில் 22 ஆயிரம் ஆஸ்திரேலியச் சிப்பாய்கள் உள்ளனர். புலாமரீர் மாவட்டத்தில் தமது முகாம்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சிப்பாய் களை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இந்த அசம்பாவிதம் நடைபெற்றது. (ம)

# வெனிசுலாவில் வெடித்தது பெரும் கலவரம்



கரஸ்கஸ், ஒகஸ்ட் 1
வெனிசுலா அதிபர் நடத்திய அரசியல் நிர்ணய சபைத் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டில் நடத்தப்பட்ட பல்வேறு கலவரங்களில் நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 15 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று தகவல் வந்துள்ளது.
வெனிசூலாவில்1999ஆம்ஆண்டு ஐக்கிய சோசலிஸ்ட் கட்சி ஆட்சியைப் பிடித்தது. சுமார் 14 ஆண்டுகள் அதிபராக நீடித்த அந்தக் கட்சியின்தலைவர் சாவேஸ் 2013ஆம் ஆண்டில் உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து நிக்கோலஸ் மதுரோ புதிய அதிபராகப் பொறுப்பேற்றார்.
மதுரோவின் மூன்று வருட ஆட்சியில்வெனிசுலா வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகள் அட்டைப் பெட்டியில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றன.
உணவு, உலர் உணவு என்பன கிடைப்பதென்பது அரிதிலும் அரிது. உணவகங்கள், நட்சத்திர விடுதிகள் ஆகியவற்றால் கொட்டப்படும் கழிவு உணவை தெரிந்து எடுத்து பசியாற்றுவதற்கும் அங்கு வரிசையில் நிற்க வேண்டிய நிலமை. இவ்வாறு சென்றால் அந்த நாடு இன்னும் சில மாதங்களில் 700 சதவீதம் பணவீக்கத்தை எதிர் கொள்ளும் என்று உலக நாணய நிதியம் எச்சரித்துள்ளது.
இத்தகைய பின்னணியிலேயே ஆட்சிமாற்றத்துக்கான போராட்டம் ஆரம்பித்தது. தனது எதிர்ப்புக்கு எதிரான வியூகமாக அரசியல் நிர்ணயசபையைபயன்படுத்த முடிவு செய்துள்ளார் மதுரோ. அந்த நாட்டின் தேர்தல் களையும், தேர்தல் வெற்றிகளையும் நிர்ணயிக்கும் நிர்ணய சபைக்கான தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. எதிர்கட்சியின் எதிர்ப்பையும் மீறி நடைபெற்ற இந்தத் தேர்தலில், தான் வெற்றிபெற்றேன் என்று மதுரோ அறிவித்தார். இதனால் அவரின் ஆட்சி தக்கவைக்கப்படும் நிலை அங்கு தோன்றியது. இதனால் வெனிசுலாவில் கடந்த நான்கு மாதங்களாக நடைபெற்றுவந்த கலவரங்கள் தற்போது மேலும் தீவிரமடைந்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் மொழி
நல்லொழுக்கமும் நல்லறி...
உடையவராய்த் தீமைகளை...
நீக்கிய அறிஞர் கிடைப்பார...
அவரிடம் அன்புடனும் அக்க...
யுடனும் நட்புக்கொண்டு பழகு...

கௌதம...



# புதன் பொய்கை

அம்பலவாணர் இராஜர...ம்

இந்தப் பரந்த உலகம் முழுவது...சுமார்... 765 கோடி மக்கள் வாழ்கி...றன... இவர்கள் பேசிய மொழிகள் ஏழாயி...ரத்துக்கும் மேற்பட்டவை. கட...ந்த 300 வருடங்களில் பல மொழிகள் அழிந்து... போய்விட்டன. ஐரோப்பாவில் 12 மொழிகள் வழக்கிழந்து போய்விட்டன. ஆஸ்திரேலியாவில் வழக்கிலிருந்த 250 மொழிகளில் 20 மொழிகள்தான் தற்போது பேசப்பட்டு வருகின்றன. பிரேஸில் நாட்டில் வழக்கிலிருந்த 540 மொழிகளில் 135 மொழிகள்தான் தற்போது பேசப்பட்டு வருகின்றன. இந்தியாவில் 880 மொழிகள் பேசப்பட்டு வந்தனவென்றும் அது சுதந்திரம் அடைந்த பின் 220 மொழிகள் அழிந்துவிட்டன என்றும் ஆய்வுகளில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றன. வருடாவருடம் ஏறக்குறைய 10 மொழிகள் அழிந்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய காலகட்டத்தில் பேசப்படும் ஏறக்குறைய 6ஆயிரம் மொழிகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவை ஒவ்வொன்றும்10ஆயிரத்துக்கும்குறைவான மக்களால் பேசப்பட்டு வருகின்றன என்று ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கல்விக்கான அமைப்பு அறிக்கை வெளியிட்டிருக்கிறது.



# தமிழ் மொழியை பாதுகாப்போம்

உலகில் கூடுதலான மக்களால் பேசப்படும் மொழிகளில் மன்டறின் என்ற சீனமொழி, ஸ்பானிய மொழி, ஆங்கில மொழி. அரபு மொழி, ஹிந்தி மொழி, ரஸ்யன் மொழி, பிரெஞ்சு மொழி என்பன அடங்கும். உலகில் 2ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த மொழிகளில் சீனம். இலத்தீன், கிரேக்கம். எகிப்து. சமஸ்கிருதம், ஹீபுறா, பஸ்கியூ போன்ற மொழிகளோடு தமிழும் ஒன்றாகக் கருதப்பட்டு வருவது தமிழ் மொழியின் பெருமைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

இனிவரும் 100 வருடங்களில் ஏறக்குறைய 5 ஆயிரம் மொழிகள்தான் புழக்கத்தில் இருக்கும் என்றும் 1,000 மொழிகள் அழியும் வாய்ப்புகள் உண்டென்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

**ஒரு மொழி அழிவதற்கான காரணங்கள் பல உண்டு.**

01. பிள்ளைகள் வீடுகளில் தாய்மொழியில் பேசுவதைப் புறக்கணித்தல்
02. மாணவர்களால் விரும்பிக் கற்கப்படாமை
03. வேற்றுமொழி மோகம் உதாரணம் ஆங்கிலம்
04. தாய்மொழிக்குப் பதிலாகத் தேசிய மொழியை உபயேகித்தல்
05. சுனாமிபோன்ற இயற்கை அழிவுகளால் இனப் பேரிழிவு ஏற்பட்டு அவர்கள் பேசிய மொழி யும் குன்றிப் போதல்
06. இரு நாடுகளுக்கிடையிலோ அல்லது இரு இனங்களுகிடையிலோ போர் ஏற்படுமாயின் ஓர் இனமோ அல்லது இரு இனங்களுமோ அழிந்து போவதால் மொழியோ அல்லது மொழிகளோ அழிந்து போகச் சாத்தியம் உண்டு.
07. நாட்டுப்புறத்திலிருந்து நகர்ப்புறத்துக்குச் செல்பவர்கள் சூழலுக்கு ஏற்பமொழியை மாற்றும்பொழுது பிறப்பு மொழியை மறந்துவிடல்.
08. இன அழிப்பு
09. இனங்களுக்கிடையேதிருமணம். இதனால் குடும்பத்தில் ஒரு மொழியையே பேசவேண்டும் என்று நிர்ப்பந்தித்தல். அவர்களின் பிள்ளைகளும் அதே மொழியைப் பேசுதல். இதனால் மற்ற மொழி புறக்கணிக்கப்பட்டு அந்த மொழி அழிவுக்கு வித்திடப்படுகிறது.
10. ஒரு மொழி பேசுகின்ற மக்கள் வாழுகின்ற நிலப்பரப்பும், வேறு மொழிபேசுகின்ற மக்கள் வாழுகின்ற நிலப்பரப்பும் இணையும் போது ஒரு மொழியானது அழிந்து போவதற்கு அத்திபாரம் இடப்படுகிறது என்றும் கொள்ளலாம்.

இன்று தமிழ் மொழியும் இத்தகைய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதால் எதிர்காலத்தில் எப்படியான ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது என்பது கண்கூடு.


தமிழ் மொழி 10 கோடி மக்களால் பேசப்படுவதால் அது ஒருக்காலும் அழியாது என்று கூறி விட முடியாது. ஒரு பெரிய அலுமாரி சிறிய சிறிய கறையான்கள் அரித்து அது இருந்த இடமே தெரியாமல் செய்யலாம். அதைக் கறையான் அரிப்பதற்கு முன் அந்த அரிப்பைத் தடுப்பதற்கு சில வழிமுறைகளைக் கையாளலாம். இதை மனதில் வைத்துக் கொண்டு தமிழ்மொழி அழிவின் விழிம்புக்குப் போகமுன் நாம் அதைத் தடுக்க எம்மாலான முழுமுயற்சிகளையும் செய்யவேண்டும்.

**ஒரு மொழியை அழிவிலிருந்து காப்பதற்கான வழிகள் பலவுண்டு**

01. பிள்ளைகள் வீடுகளில் தாய்மொழியில் பேசுவதை ஊக்குவித்தல்.
02. தாய் மொழியில் பாடங்களைக் கற்பிக்கும் பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்தல்.
03. தாய்மொழியின் சிறப்பைப் பிள்ளைகளுக்கும் மாணவர்களுக்கும் அடிக்கடி எடுத்துக்கூறல். இதன் மூலம் அடுத்த தலைமுறைக்கு பொறுப்புணர்வை ஊட்டல்.
04. ஒரு மொழி அழியாமல் பாதுகாப்பதற்கு அந்த மொழி பேசுபவர்களுக்கு சார்பான நிலமைகளை அமைத்தல்
05. மொழியின் முக்கியத்துவத்தை பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுத்தல்
06. தாய் மொழியில் கல்வி கற்கும் முறையை ஊக்குவித்தல்
07. இனங்களுக்கிடையே திருமணம் நடைபெறுவதற்கு முன்னரே இருபாலாரும் தங்கள் இருவரும் தாய்மொழிகளையே பேசுவதென்றும் தம் பிள்ளைகளுக்கும் அவ்விரு மொழிகளிலும் பேசுவதற்கு வாய்ப்புக்களைவழங்குவது என்றும் முடிவெடுத்தல்.
08. மொழிப்பற்றை எம் பிள்ளைகளுக்கு அடிக்கடிதூண்டுவிக்கும்அதே சமயம் எமது பிள்ளைகள் தங்களின் பிள்ளைகளுக்கும் தூண்டுவிக்கும்படி வழிவகுத்தல்.
09. தாய் மொழியை விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடு கொடுக்க கூடியதாக மாற்றல். புதிய கலைச் சொற்களைப் புகுத்தல். கணினிகளில், கைபேசிகளில் இலகுவாகத் தாய்மொழியில் தொடர்புபடுத்தக்கூடியவாறு வசதிகளை மேற்கொள்ளல்.

**தமிழ்மொழி 10 கோடி மக்களால் பேசப்படுவதால் அது ஒருக்காலும் அழியாது: என்று கூறிவிடமுடியாது. ஒரு பெரிய அலுமாரியை சிறிய கறையான்கள் அரித்து அது இருந்த இடமே தெரியாமல் செய்யலாம். அதைக் கறையான் அரிப்பதற்கு முன் அந்த அரிப்பைத் தடுப்பதற்கு சில வழிமுறைகளைக கையாளலாம்.**

தமிழ்மொழி ஏறக்குறைய 10 கோடி மக்களால் பேசப்பட்டுவருகிறது. இந்த மொழியானது செம்மொழி என்ற மதிப்பைப் பெற்றிருப்பது எமக்குப் பெருமை தருகிறதல்லவா! இந்த மதிப்பைத் தக்க வைப்பது நம் தமிழன் ஒவ்வொருவருடையதும் கடமையல்லவா? தமிழனுக்குத் தமிழ்மொழி மேல் ஆர்வம் குன்றிக் கொண்டு போகிறது. தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு வேறுமொழிகள் புகுத்தப்பட்டு, கலக்கப்பட்டு வருவதே ஒரு சிறு உதாரணம். "குமோறோ ஈவினிங் பீச்சில் மீற் பண்ணுவோம்" என்று அனேகர் பேசுவதைக் கண் கூடாகக் காண்கிறோம். இதில் 20 வீதம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழுணர்வை சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு உரமாக விதைக்க வேண்டும். நான் தமிழன் என்று பெருமைப்பட வைக்கவேண்டும். தமிழ்ப் பற்றை வளர்க்கும் விதமாக இன்றைய தலைமுறைக்கு ஏற்றவகையில் இணைய தளங்கள். முகப் புத்தகங்கள், சமூக வலைத்தளங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி தமிழுணர்வை ஊட்டவேண்டும்.**



தமிழும் 80 வீதம் ஆங்கிலமும் கலந்து பேசப்பட்டால் அந்த 20 வீதம் பேசப்படும் மொழி அழிவின் எல்லையை நோக்கிச் செல்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. இப்படிக் கூடுதலான சந்தர்ப்பங்களில் கலப்பு மொழி பேசப்படும்பொழுது குறைந்த வீதத்தில் பேசப்படும் மொழி காலப் போக்கில் முற்றாக அழிந்துவிடும். அழிந்த மொழியைத் திரும்பப் பெற முடியாது. அழிந்தது அழிந்ததுதான்.
இந்த வார்த்தைகளைப் பேசியவரும் கேட்டவரும் தமிழர்கள்தான். இவர்களுக்குத் தமிழ் தெரியாதா? நன்றாகத் தெரியும். தமிழில் பேசுவதற்கு வெட்கம்! தமிழில் பேசினால் மானக் குறைவு என நினைக்கிறார்கள். அவர்களுக்கு ஆங்கிலத்தில் மோகம்! ஆங்கிலத்தில் பேசினால் தங்களுக்குப் பெருமை என நினைக்கிறார்கள். இரு தவறு என்பதை ஒரு காலகட்டத்தில் நினைப்பார்கள். ஆனால் பிரயோசனமிராது. கண் இருக்கும் போதே சூரியநமஸ்காரம் செய்யவேண்டும்.

### தமிழில் பேசுவோம்

இப்படியான காரியங்கள் இனிமேலும் நடைபெறாமல் தடுப்பதற்கு ஒவ்வொரு தமிழர்களும் இயன்றவரை 95 வீதம் தமிழில் பேசவேண்டும். "நாளை மாலை கடற்கரையில் சந்தித்துக் கொள்ளுவோம்" என்று தனித்தமிழில் கூறினால் எவ்வளவு அழகாக இருக்கும் பக்கத்தில் இருக்கின்ற தமிழ்க் குழந்தைகூட விளங்கிக்கொள்ளும். விழியைப் பிரட்டிக் கொள்ளாது.
இறக்கப்போகும் தறுவாயில் உள்ள நோயாளியை வைத்தியர் தன் முயற்சியால் உயிர்ப்பிழைக்க வைப்பது போல் இறக்கும் தறுவாயில் உள்ள தமிழுக்கு நாம் உயிர்கொடுத்துக் காப்பாற்ற வேண்டும்.
இது தனி ஒருவரால் முடியாத காரியம் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும்.
தமிழ் மொழியின் சிறப்பைப்பற்றிக் கூறுவதற்கு இனிமேல் ஒன்றுமில்லை என்றே கூறலாம். காந்தி அடிகள் சிறையில் இருக்கும்போது தமிழ் மொழியின் சிறப்பை உணர்ந்து அதை விரும்பிக் கற்றவர். பன் மொழிப் புலவரான பாரதியாரும் "தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியுள்ளார். தமிழைப் பல ஐரோப்பியர்கள்கூட விரும்பிக்கற்று புலமைத்துவம் அடைந்து பல பல நூல்களை வெளியிட்டுள்ளார்கள். இத்தாலி நாட்டைச் சேர்ந்த குருவான றொபர்ட் டி நொபிலி தமிழகத்தில் வாழ்ந்து தமிழ், சமஸ்கிருதம் கற்றுத் தேர்ந்து பல நூல்களுக்கு உரைநடை எழுதியுள்ளார்.
இதே நாட்டைச் சேர்ந்த பிதா யோசப் பெஸ்கியம் தமிழ் கற்று தமிழில் செய்யுள் பாடவும் உரைநடை எழுதவும் வல்லுனரானார். இவர் தன் பெயரை வீரமாமுனிவர் என மாற்றி நடையுடை பாவனைகளில் தமிழனாகவே காணப்பட்டார். இவர் ஆக்கிய நூல்களில் தேம்பாவணி, திருக்காவ லூர்க் கலம்பகம். அடைக்கலை மாலை, கலிவெண்பா, அன்னை அழுங்கல் அந்தாதி என்பன சிலவாகும்.

### வெளியாரும் போற்றிய தமிழ்

ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த ஸீகன் பால்க் (1682 - 1719) பாய்க்கப்பலில் அடிபட்டு 1706.07.09 திதிகதி தமிழகத்தின் ரங்கம்பாடியை வந்தடைந்தார். தமிழை விரும்பிக் கற்று தமிழ்ச் சொற்களுக்கு இலத்தீன், ஜேர்மனி மொழி பெயர்ப்புக்களைக் கொடுக்கும் அகராதிகளை ஆக்கினார். தமிழர் பண்பாடு இறை வழிபாடு, நீதி வெண்பா, உலக நீதி கொன்றைவேந்தன் போன்ற நூல்களை மேல்நாட்டு மொழிகளில் பெயர்த்து அச்சிட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பிய பெருமை அவருக்குண்டு.
இதே நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவ குருவான றேனியஸ், திருநெல்வேலியில் திருப்பாற்கடனாதன் என்பாரிடம் தமிழ் கற்று விவிலிய நூலுக்கு தமிழ் மொழி பெயர்ப்புச் செய்தார். நன்னூலுக்கு அடுத்ததாக சிறந்த தமிழ் இலக்கண நூலை எழுதி வெளியிட்டார்.




இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜி.யு போப் என்பவர் 42 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்து தமிழ் கற்று திருக்குறள் நாலடியார் திருவாச கம் முதலிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழின் பெருமையை மென்மேலும் உயர்த்தினார்.
இதே நாட்டைச் சேர்ந்த கால்ட் வெல் என்பவரும் ஒரு குருவானவர். தமிழ் மொழி தமிழ்நாடு என்பவைகளின் பெருமைகளை உலகுக்கு உணர்த்தியவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் என்ற ஐந்து மொழிகளையும் ஒப்பிட்டு இவைகள் எல்லாவற்றுக்கும் தாய்மொழி தமிழே என்பதை நிரூபித்த வர்களில் இருவரும் ஒருவராவர்.
இதே நாட்டைச் சேர்ந்த பேர்சிவல் பாதிரியார் யாழ்ப்பாணம் வந்து அனேக கல்வி நிறுவனங்களை நிறுவியவர் ஆறுமுக நாவலருடன் இணைந்து கிறிஸ்தவ விவிலிய நூலுக்கு தமிழ் ஆக்கம் உருவாக்க உதவினார். ஆங்கிலதமிழ் அகராதி ஆக்கினார். எல்லிஸ் என்ற ஆங்கிலேயர் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றத் தேர்ந்து திருக்குறளின் முதல் 13 அதிகாரங்களுக்கும் ஆங்கிலத்தில் அழகாக உரை எழுதியுள்ளார்.
தமிழ்மொழி இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், கனடா, மியன்மார், ஆபிரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ். அமெரிக்கா, மாலைதீவுகள், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் சிறுபான்மை மக்களால் பேசப்பட்டு வரும் ஒரு மொழியாகும். இந்தியாவில் பல வட மானிலங்களில் தமிழும் 2ஆவது அலுவலக மொழியாக உள்ளது. வட மாநிலங்களில் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள். அறிவிப்புக்கள் யாவற்றிலும் தமிழும் இடம்பெறும். மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் முக்கிய பயண இடங்களில் அறிவிப்புக்கள் யாவும் தமிழிலும் இடம்பெறுவது மிகவும் சந்தோஷத்தைத் தருகிறது.

### தமிழின் தனித்துவம்

பிற மொழிகளான சிங்களம் மலையாளம், கிரந்தம், ஹிந்தி, சமஸ்கிருதம் போன்றவைகளில் மெய் எழுத்துக்களும், கூட்டெழுத்துக்களும் அனேகம் உண்டு.
சில சொற்களுக்கு உச்சரிப்பு ஒரே மாதிரியாக இருக்கலாம் ஆனால் எழுத்துக்களில் வித்தியாசம் உண்டு. சில கூட்டெழுத்துக்களின் உச்சரிப்பு தனிச் சொற்களின் உச்சரிப்புக்களுடன் வித்தியாசப்படுகிறது.
பிரெஞ்சு எழுத்துக்களை உச்சரிக்கும் பொழுது கடைசி ஒன்றோ அல்லது இரண்டோ மெய் எழுத்து வருமானால் அவைகளை உச்சரிப்பதில்லை. ஆனால் ஒரு சில சொற்களுக்கு கடைசி மெய் எழுத்துக்களுக்கும் உச்சரிப்பு உண்டு. அடுத்து ஒவ்வொரு பெயர்ச் சொற்களும் ஆண்பால் பெண்பால் எனப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பெண்பாற் சொல்லுக்கு அதன் ஈற்றில் ஒரு எழுத்தைக் கூடுதலாக எழுதி வித்தியாசமாக உச்சரிக்க வேண்டும்.
ஆகவே ஒவ்வொரு பெயர்ச்சொல்லும் ஆண்பாலா? பெண்பாலா? என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். எவ்வளவு கஸ்டம்!!
இவ்வாறு வெவ்வேறுமொழிகளை ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது தமிழ் மொழியானது ஒரு சிறு குழந்தையாலும் உச்சரித்து வாசிக்கக்கூடியது. இது யாவரும் அறிந்த உண்மை இதனாலேதான் தமிழ்மொழிக்கு 'செம்மொழி' என்ற மதிப்பு வழங்கப்பட்டது போலும்!! தமிழ்மொழியின் சிறப்புக் களை அறிந்திருந்தும், அதன் மேன்மைக்கும், வருங்காலத்தில் என்றும் வலுவுடையதாக இருப்பதற்கும் வழிமுறைகள் செய்யாதிருப்பது வெட்கக்கேடு!!

### தமிழைக் காப்போம்

தேனினும் இனிமையான இந்த மொழியை நாம் அழிவில் இருந்து பாதுகாக்கவேண்டும், அது அழிந்து போய்க் கொண்டிருக்கிறது. அதை நாம் தடுக்கவேண்டும். அதற்கு வழியுமுண்டு. முதலாவதாகத் தமிழ் பேசும் பொழுது கலப்பு மொழி சேர்க்காமல் தனித் தமிழில் பேசுங்கள். எம் இனத்தவருடன் பேசும் பொழுது இயன்றவரை தனித்தமிழில் பேசுங்கள் வேறு மொழிகளைக் கலக்காதீர்கள். வீட்டில் பிள்ளைகளுடன் கதைக்கும் பொழுது தனித்தமிழில் கதையுங்கள் பிற இனத்தவரோடு கதைக்கும்பொழுது அதாவது தமிழ் தெரியாதவர்களோடு கதைக்கும் பொழுது அவர்களுக்குத் தெரிந்த மொழியில் கதையுங்கள்.
இரண்டாவதாக தமிழ்மொழியின் சிறப்பை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். பகிரங்கமாக மேடைகளில் பேசுங்கள். தமிழ் மகன் ஒருவன் வேறுமொழியில் கதைத்தால் நீங்கள் அவர் வெட்கித் தலைகுனியும்படி தனித் தமிழில் கதையுங்கள். இப்படி நாம் எல்லோரும் கதைப்போமானால் தமிழ் மொழியை அழிவில் இருந்து காப்பாற்றலாம்.
அருமையிலும் அருமையான எம் தமிழ் மொழியை அழிவில் இருந்து காக்க ஆசிரியர்களுக்கும், பேச்சாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும், ஊடகத்துறையினருக்கும், பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் மிக முக்கிய பங்குண்டு.
தமிழுணர்வை சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு உரமாக விதைக்க வேண்டும். நான் தமிழன் என்று பெருமைப்பட வைக்கவேண்டும். தமிழ்ப் பற்றை வளர்க்கும் விதமாக இன்றைய தலைமுறைக்கு ஏற்றவகையில் இணைய தளங்கள். முகப் புத்தகங்கள், சமுக வலைத்தளங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி தமிழுணர்வை ஊட்டவேண்டும்.
இந்தக் கட்டுரையை வாசித்து முடித்தவுடனேயே நான் இதற்கு என்ன செய்யப் போகிறேன் என்று யோசிக்கத் தொடங்குங்கள். விரைவில் காரியத்தில் இறங்குங்கள். இதை மற்றவர்களுடனும் பகிர்ந்து அனைவரையும் இதில் ஈடுபடச் செய்யுங்கள்.
சிறுதுளி பெருவெள்ளமாகி எம் தமிழை அழியாது காக்கும். அதற்கு இறவா மருந்தான அமிர்தத்தைக் கடைந்தெடுத்துக் கொடுப்போம். அதற்காகத் தளரா மன உறுதியோடு சிறுவர் தமுதல் முதியோர்வரை அனைவரும் ஒன்று திரள்வோம்!

எம் தமிழை நாமே காப்போம்!!
தமிழுக்கு உயிர் கொடுத்த உத்தமர் ஆகுங்கள் அது உங்களை என்றென்றும் வாழ்த்திக் கொண்டேயிருக்கும்.....

*கட்டுரையாளர்:*
*(ஓய்வுபெற்ற அரசஊழியர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ எஸ்.மல்லிகா

# சபையைக் கட்டிய சதங்கை ஒலிகள்!



படங்கள்: ஐ.சிவசாந்தன்

உரும்பிராய் கலைக்கோவில் அதிபர் கலாபூஷணம் திருமதி பத்மினி செல்வேந்திரகுமாரின் புதல்வியும் மாணவியுமான செல்வி ஆரணி செல்வேந்திரகுமாரின் நடன அரங்கேற்ற நிகழ்வு கடந்த 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பாவம், இராகம், தாளம் ஆகிய மூன்றினையும் உள்ளடக்கிய உன்னதமான கலையே பரதம். இவற்றுடன் அழகும் ஆன்மிகமும் ஒன்றிணைந்து, கலைகளின் அரசியாக உயர்ந்து நிற்கிறது பரதம். இந்தக் கலையில் நன்கு தேர்ச்சி பெற்று, கற்றவர் கலாரசிகர்கள் நிறைந்த சபையில் தனது அரங்கேற்றத்தைச் சிறப்புற ஆற்றுகை செய்தார் ஆரணி. இவர், யாழ். பல்கலைக்கழக நடனத் துறையின் மூன்றாம் ஆண்டு மாணவி. பாவம் குன்றாது, இராகம் தவறாது, தாளம் தப்பாது மிக நேர்த்தியாகவும் கவனமாகவும் அவர் அபிநயித்தமை, அவரது ஆளுமைத்திறனையும் உழைப்பையும் கலை மீதான ஈடுபாட்டையும் நன்கு பறைசாற்றுகின்றது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் கலந்துகொண்டார்.

மதிப்புறு விருந்தினாகளாக நடனவாரிதி லீலாம்பிகை செல்வராஜா, கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன், நாட்டியக்கலைமணி யசோதரா விவேகானந்தன், கலாவித்தகர் வசந்தி குஞ்சிதபாதம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்து மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரிகளின் ஓய்வுநிலை அதிபர் அ.பஞ்சலிங்கம், உடுவில் மகளிர் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அணிசேர் கலைஞர்களாக நட்டுவாங்கம் நாட்டியசுரபி திருமதி பத்மினி செல்வேந்திரகுமார், குரலிசை- யாழ். பல்கலைக்கழக இசைத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் தவநா



தன் றொபேட், வயலின் சுருதிவேந்தன் அ.ஜெயராமன், மிருதங்கம் மிருதங்க ஞானவாரிதி சி.துரைராஜா ஆகியோர் செயலாற்றி நிகழ்வை மெருகூட்டினர். இவர்களுடன், நிகழ்வின் தலைவர் சிறப்புறச் செந்தமிழில் நிகழ்வைத் தொகுத்தளித்துச் சபையோரை முழுமையாக நடனக்கலையை இரசிக்க வைத்தார். ஒவ்வொரு உருப்படிகள் பற்றியும் அவர் அறிமுகம் செய்த பாங்கு, திறன் சிறப்பார்ந்தவை.

**விழிக்கும் செவிக்கும் விருந்தளித்த கலை...**

பரதநாட்டிய அரங்கேற்றத்தில் வழமையாக முதலில் நிகழ்த்தப்படும் புஸ்பாஞ்சலியுடன் (விநாயகர்ஸ்துதி அலாரிப்பு), ஜதீஸ்வரம், கௌத்துவம், பதவர்ணம், கீர்த்தனம், பதம் (சாவேரி இராகம் ரூபக தாளம்), பதம் (இராகமாலிகை ரூபக தாளம்) மற்றும் தில்லானா ஆகிய எட்டு உருப்படிகளை ஆரணி ஆற்றுகை செய்தார். இந்த உருப்படிகளில், அம்பாளுக்கு முதன்மையளிக்கப்பட்டிருந்தமையைக் காணமுடிந்தது. ஆற்றுகை செய்யப்பட்ட அத்தனை உருப்படிகளுமே சபையோரின் விழிகளுக்கும் செவிகளுக்கும் இனிய விருந்தாக அமைந்தன.

**விருந்தினர்களின் உரையிலிருந்து...**

அரங்க ஆற்றுகை நிகழ்வுக்கு இடையிடையே விருந்தினர்கள் தமது எண்ணங்களை எடுத்தியம்பி, ஆரணியை வாழ்த்தி ஆசீர்வதித்தமை சபையை மேலும் அழகாக்கியது.

முதன்மை விருந்தினர் - "ஆரணி தனது தாயாரின் ஆற்றுப்படுத்தலில் சிறப்புத் தேர்ச்சி பெற்று, இன்று தன்னுடைய நாட்டியத் திறமையை சபையோர் முன் நிகழ்த்திக் காட்டுகிறார். இவர் தொடர்ந்தும் இக்கலையில் பயிற்சி பெற்று, எமது மண்ணுக்குப் பெருமை சேர்க்கவேண்டும் என்று கேட்டு, அவரை வாழ்த்துகின்றேன்".

சிறப்பு விருந்தினர் - "கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் தாயிடம் பயிற்சி பெற்றுத் தனது அரங்கப் பிரவேசத்தைச் சிறப்பாக ஆற்றுகை செய்கிறார் ஆரணி. இவர் பல அரங்குகள் கண்டவர் என்பதால், சபைக் கூச்சமோ மேடைப்பயமோ இன்றி அழகுற அபிநயிக்கிறார். இங்கே ஆற்றுகை செய்ய அவர் தேர்ந்தெடுத்த உருப்படிகள் அருமையானவை. அம்மா கற்றுக்கொடுத்ததை விட நிறையத் தேடி, அடுத்த சந்ததிக்கான கலைக் கையளிப்பை ஆரணி செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டு, அவரை வாழ்த்துகின்றேன்."

சிறப்புவிருந்தினர் -"நாட்டியக்கலைமணி யசோதா விவேகானந்தன் பாலிலே உயர்ந்த பண்பினையும் பாரம்பரியங்களையும் பேணிக் காப்பன கலைகள். அதில் ஒன்றான பரதக் கலையை ஆரணி இங்கே திறம்பட நிகழ்த்திக்கொண்டிருக்கிறார். ஆற்றுகைகள் அத்தனையுமே மிகச் சிறப்பு வாய்ந்தவை. கலைத்துறையில் அவர் மேலும் பல சாதனைகள் பெற்றுப் பிரகாசிக்க, வாழ்த்துகின்றேன்."

இவர்களுடன் இன்னும் பல விருந்தினர்கள் ஆரணியை ஆசீர்வதித்து உரையாற்றினர்.

கலைக்கோவில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது அரங்கேற்றம் ஆரணியுடையது.

இந்த அரங்கேற்றத்தில், நடனத்துறையுடன் தொடர்புடைய ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் மண்டபம் நிறைந்த சுவைஞர்கள் அத்தனை பேரையும் ஆரணி தனது சதங்கை ஒலிகளால் கட்டிப்போட்டிருந்தார். அவரது கலையுலகம் மலர்ந்து மணம் வீச, இறையாசிகள்... ■

■ சிவம்

# உ கீற்று...



ஒரு புல் நுனி
ஏந்திக் காத்திருக்கும்
பனித்துளிக்குள்
அடகு வைத்த
எத்தனை காலைப்பொழுதுகள்
இன்னமும் மீட்கப்படாமல்
காலம் ஏலத்தில் விட்டாயிற்று.

பூவரசங்குழலில் மடித்துவைத்த
நமது பிஞ்சுக்குரல்கள்
அவிழ்ந்து விழுந்த காற்றுவெளி
நம் இறுதி மூச்சையாவது ஏந்துமா?

கோவில் முகப்பில்
தோரணம் கட்டிய கயிற்றில் தொங்கப்போட்ட
நமது சின்னச்சின்னச்சேட்டைகள்
எந்த வயதானவர்
பொக்கைவாயில் மடிப்போடு
சிக்குண்டிருக்கும்?
அரிச்சந்திர மயான காண்டம்,
சங்கிலியன்,
வெடியரசன்
நாடகங்கள் பார்த்த ஞாபகங்கள்
எத்தனைமுறை தேர் ஓடியபின்னும்
தெற்கு வீதிப் புழுதிக்குள்
அரிதாரம் கலையாமல்
கிடுகுவேலியின் நீச்சல்களுகவடாக
கூனல் விழுந்த பார்வையோடு.
வாகனசாலைக் குதிரைக்கு
கொம்பு முளைத்த
ஒரு இரவுபோல்
வாழ்க்கை.

தீவட்டிக் கரியெடுத்து
இழுத்துவைத்த
மீசையோடு பேசும்
வீரம்.
கோபுர நிழலில்
இளனிக்கோம்பை சிராந்தும்
பசுமாட்டைக் கலைத்து
சுற்றி மதில்கட்டும் ஜீவகாருண்யம்.
எல்லாம் கடந்து பாலத்தடிவரை
என்னோடு நடந்துவந்த
மேகத்துள்ளிருந்து ஒரு கீற்று
புத்தர் வருவாரென என்னை
வெட்டிச்சாய்த்த
[illegible] விருட்சத்தில் வாழ்ந்த அணில்
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழ் இலக்கியத்தில் ஊழ்-7

எஸ்.மல்லிகா

சிலப்பதிகாரத்தின் பாடுபொருளை இளங்கோவடிகள் மூன்று வரிகளில் குறிப்பிட்டுள்ளார். அவை, 'அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்' என்றவாறு அமைந்துள்ளன. இதில் ஊழ்வினையை கானல்வரியிலே அவர் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். அதாவது, 'யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துருத்த தாதலின்' எனக் கோவலன் மாதவி பிரிவுக்கான காரணத்தைக் குறிப்பிடுகிறார் இளங்கோ. கோவலன் மாதவி பிரிவைப் பற்றிப் பலரும் பலவாறாகப் பேசுவார்கள் என்ற காரணத்தினால், அவர்களுடைய பிரிவுக்கு ஊழ்வினைதான் காரணம் என்று ஊழினை முதன்மைப்படுத்தியுள்ளார். அதேநேரம், சிலப்பதிகாரத்தின் உச்சக்கட்டம் என்று கூறப்படும் வழக்குரைகாதையில் இதனைச் சிறப்பாகக் கையாண்டுள்ளார். அதுபோன்று, சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியைப் பேசும் காப்பியமான மணிமேகலையும் ஊழ்வினை பற்றிக் கூறுகின்றது.

**மணிமேகலையில் ஊழ்வினை...**

ஒரு பிறவியில் செய்த தீவினையானது மறுபிறவியில் தொடர்ந்து வந்து துன்பங்களைத் தரும். அதுபோலவே நல்வினையும் உயிரினைத் தொடர்ந்து சென்று மறுமையில் இன்பங்களை நல்கும் என்று கூறுகின்றது மணிமேகலை. மணிமேகலையில் நல்வினை, தீவினை எவை எவை என்று பின்வரும் பாடல்களின் மூலம் அறியலாம்.

*'கொலையே களவே காமத் தீவினை*
*உலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும்*
*பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்*
*சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்*
*வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சி யென்று*
*உள்ளந் தன்னி னுரப்பன மூன்றுமெனப்*
*பத்துவகையாற் பயன்றரி புலவர்' (மணி 125134)(24).*



கொலை, களவு, காமம் ஆகிய தீயவிருப்பங்கள் மூன்றும் தளர்ச்சியுற்ற உடலிலே தோன்றுவன. பொய், புறங்கூறல், கடுஞ்சொல், பயனற்ற சொல் என்று நால்வகைக் குற்றங்கள் சொல்லிலே தோன்றுவன. இந்தவகைகளில், நல்லோர் தீயவற்றில் மனதைச் செலுத்தமாட்டார். தீயவற்றில் மனத்தைச் செலுத்துவாராயின் விலங்கு, பேய், நரகர் என்று பிறப்புக்களை எடுத்துத் துன்ப முற்றுப் பிறவிதோறும் இடர்ப்படுவர் என்று தீவினையைச் சுட்டிக்காட்டு கிறார் சீத்தலைச் சாத்தனர். மேலும்,

*'நல்வினை யென்பதியா தென வினவில்*
*சொல்லிய பத்தின் றொகுதியி னீங்கிச்*
*சீலந் தாங்கித் தானந் தலை நின்று*
*மேலென வகுத்த வொரு மூன்று திறத்து*
*தேவரு மக்களும் பிரம்ரு மாகி*
*தேவரு மக்கரம் பிரம்ரு மாகி*
*மேவிய மகிழ்ச்சி வினைப் பயனுண்குவர்' (மணி.135140) (24).*



நல்வினையென்பது மேற்கூறப்பட்ட பத்துக் குற்றத்தி னின்றும் நீங்கி நல்லொழுக்கத்தினை மேற்கொண்டு தானம் செய்து வாழ்பவர் தேவர், மக்கள், பிரமர் ஆகிய பிறப்பினை எடுத்து நல்வினைப்பயனை அனுவிப்பதாகும் என்று சாத்தனார் கூறுகின்றார்.

**பழவினை பற்றிப் படருதல்**

நல்வினை தீவினை போன்றே முற்பிறப்பில் செய்த வினை பற்றியும் மணிமேகலை கூறுகின்றது. முன் செய்த வினை ஒரு மனிதனைப் பல பிறவியை எடுக்கச் செய்யும் என்கிறது மணிமேகலை. இந்து மதமும் இந்த விடயத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. பின்வரும் மணிமேகலைப் பாடல் வரிகளில் இதனைக் காணலாம்.

*'உம்மை வினைவந் துருத்தலொழி யாதெனும்*
*மெய்ம்மைக் கிளவி விளம்பிய பின்னுஞ்*
*சீற்றங்கொண்டு செருநகர் சிதைத்தேன்'* (மணி. 32 34) (26)

பழவினை வந்து பற்றுதல் நீங்கலாக என்கிற உண்மை மொழிகளை உரைத்த பின்னரும் சினங்கொண்டு அவ்வளநகரத்தினை அழித்தேன் என்று கண்ணகி மணிமேகலைக்குக் கூறுகிறாள்.

> ஒரு பிறவியில் செய்த தீவினையானது மறுபிறவியில் தொடர்ந்து வந்து துன்பங்களைத் தரும். அதுபோலவே நல்வினையும் உயிரினைத் தொடர்ந்து சென்று மறுமையில் இன்பங்களை நல்கும் என்று கூறுகின்றது மணிமேகலை.

கோவலன், பாண்டியன் முதலானோரின் மரணம் மற்றும் மதுரையம்பதி அழிவுகளுக்குப் பழவினையே ஊழ்வினையே, காரணம் என்று கூறப்படுகிறது. மணிமேகலையில், முற்பிறவிகளில் செய்த தீவினையானது அடுத்து எடுக்கும் பிறவிகளில் வந்து சூழும் என்பதைக் கீழ்க்கண்ட பாடல் வரிகளில் காணலாம்.

*'தீவினை யுறுதலும் செத்தோர் பிறத்தலும்*
*வாயயென்று மயக்கொழி மடவாய்' (மணி. 113114) (21)*

*'பிணாங்கு நூன் மார்பன் பேதுகந்தாக*
*ஊழ்வினை வந்திவன் உயிருண்டு கழிந்தது'* (மணி. 150 151) (6)

*'வெளவினை உருப்ப விளிந்துகே யெய்தி*
*மாதவி யாகியுஞ் சுதமதி யாகியுஞ்*
*கோதையஞ் சாயல் நின்னொடுங் கூடினர்' (மணி. 1618) (12)*

மேலும்,

*'தீவினை யுறுப்பச் சென்ற நின்றாதையும்*
*தேவரிற் தோற்றரமுற் செய்தவப் பயத்தால்*
*ஆங்கத் தீவினை யின்னுள் துயத்துப்' (மணி. 138140) (28)*

இவ்வாறு தீவினையானது உறுத்தும் (வந்து சூழும்) என்பதையும், அவற்றினால் என்ன பயன் ஏற்படும் என்பதனையும் அறியமுடிகிறது.

மேலும், மணிமேகலையில் தாரை, வீரை, மணிமேகலை ஆகியோர் மறுபடியும் பிறந்தமையானது முற்செய்த வினையின் பயனாம். மணிமேகலை நல்வினைப் பயனால் முற் பிறப்பையும், அறநெறிகளையும் முன்னை நல்வினையால் அறிந்தாள் என்பதை,

*'பழவினைப் பயன்நீ யரியலென் றெழுந்தேன்' (மணி பா.50) (12)*

*'பிறவியும் அறவியும் பெற்றியின் உணர்ந்த' (மணி பா 55) (12)*

என்ற பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. மேலும், உதயகுமாரன் முற்பிறவியில் செய்த தீவினையால் இப்பிறவியில் அவனுக்குத் துன்பம் ஏற்பட்டது என்பதைக் கீழ்க்கண்ட பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

*'ஊழ்வினை வந்திங்கு உதயகுமாரனை*
*ஆருயிர் உண்டதாயினும்' (மணி 123124) (20)*

உதயகுமாரன் மர்ணத்துக்கு மணிமேகலைதான் காரணம் என்று அவன் இறந்தபோது பலரும் கூறினர். ஆனால், அவன் இறப்புக்கு மணிமேகலை காரணம் அல்ல. ஊழ்வினைதான் காரணம்!

(தொடரும்...)



கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் தமிழ் இலக்கிய விழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமானது. மருதமுனை - கல்முனை பிரதான வீதியில் பண்பாட்டுப் பேரணி இடம்பெறுவதையும், கிழக்குக் கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து [illegible] வதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தென்னவன்

# 'ரஞ்சன மஞ்சரி' நூலுரு

## சமூக வாழ்வியலின் அனுபவப் பகிர்வு

"கற்பனையில் கவிதைகள் தோன்றும் போது அதனை உடனேயே எழுதிவிடு. இல்லையேல் கவிதையின் கவிதையின் நயமும் அதன் இயல்பும் நேர அதீதங்களிடை மாறிக்கொள்ளும்" என கவிஞர் கண்ணதாசன் ஒரு நூலில் எடுத்தியம்பிய வாசகங்கள் என் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளன.

சமூக நிலை சார்ந்தும், தனி மனித இடர்பாடுகள் சார்ந்தும் எழுச்சியுறும் இயல்பான வார்த்தைகளின் கோர்ப்பு நயம் பெற்று கவி வடிவம் கொண்டு அர்த்தங்களைக் கற்பிக்கின்றன. ஆழமான கருத்தூன்றல்களைப் பிரதி பலிக்கின்றன.

அந்த வகையிலே தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் எழுதிய 'ரஞ்சன மஞ்சரி' படைப்புகளின் தொகுப்பு நூல் நோக்குதற்குரியது. இந்த நூலுருவின் வெளியீட்டு நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றிருந்தன.

பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) சு.முரளிதரனும், சிறப்பு விருந்தின்ர்களாக கிளிநொச்சி மாவட்ட ஓய்வுநிலை மேலதிக அரச அதிபரும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவருமான செ.சிறிநிவாசன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். நூலின் முதற்பிரதியை மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் பெற்றுக் கொண்டார். நூல் நயப்புரையினை பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் கா.சிவகரன், யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் த.அகிலன் நெடுந்தீவு பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் சங்கானைப் பிரதேச செயலர் செல்வி பி.சபாரத்தினம், கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன், பூநகரி பிரதேச செயலர் ச.கி;ருஷ்ணேந்திரன், சங்கானை உதவிப் பிரதேச செயலர் திருமதி கி.செந்தூரன், தெல்லிப்பளை உதவிப் பிரதேச செயலர் பா.ஜெயகரன், மறவன்புலவு க.சச்சிதானந்தன், கவிஞர் நற்றமிழ்வேந்தன், த.நாகேஸ்வரன் போன்றோரும் கலந்து கொண்டனர்.

நூலாசிரியர் அவ்வப்போது எழுதிய கவிதைகளையும், கட்டுரைகளையும் ஒன்றாகத் தொகுத்து இந்த நூலுருவை முழுமையான படைப்பாகத் தந்துள்ளார். மாணவப் பருவம் முதல் தற்போது கடமையாற்றும் பொறுப்புள்ள அரச பணி வரையான கால நகர்வின் இடையே தனது எண்ணப் பிரதிபலிப்பின் வெளிப்பாடாக்கிக் கொண்ட எழுத்துக்களை குறிப்பாக, பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் வெளிவந்த படைப்புகளை எதுவித மாற்றமும் செய்துவிடாது நூலுருவாக மாற்றிய கடப்பாடுகள் பாரட்டத்தக்கன. இவருடைய படைப்பாக்கத் திறனை வெளிக்கொண்டுவருவதில் தென்மராட்சி கலாசாரப் பேரவையினர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. இந்த முயற்சியானது இனிவரும் காலத்திலும் பிரதேசம் சார்ந்த பல படைப்பாளிகளை உருவாக்க வழி சமைக்கும் என்பதில் ஐயமில்லை.

சங்க காலம் தொடக்கம் ஔவையார் போன்ற பெண் புலமையாளர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது வரலாறு. ஆனாலும் தற்கால தொழில்நுட்பத்தின் வளர்ச்சிப்போக்கும், பழமை போற்றுதலின் அழிவும் சமூக நிலை களிடையே பிறழ்வினை கொண்டுவந்துள்ளன. நேரமின்மைகளையும், குடும்பங்களிடையே சச்சரவுகளையும் அதிகம் தந்துள்ளன. இந்த நிலையிலே அறிவு சார் படைப் பார்ந்து செயலாற்றுவதற்கான வெளிகள் குறைவடைந்து செல்கின்றன. இருந்த போதும் பெண்கள் இத்துறை சார்ந்து முன்நகர்வது அறிவார்ந்த சமூகக் கட்டமைப்பில் இறுக்கமான பிடிமானங்களைத் தந்துள்ளன. எம் மத்தியில் பெண்கள் படைப்பாளிகளாக பலர் வெளிப்பட்டுள்ளனர். தங்களுடைய ஆக்கபூர்வமான படைப்புகளை வெளியிட்டுள்ளனர். அவை மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளன. தவிர பெண்களின் எழுத்து ஆற்றலை ஊக்குவிக்க பல ஆண்கள் பெண்களின் பெயர் கொண்டும் படைப்புகளை உருவாக்கி வெளியிட்டும் வந்துள்ளனர், வருகின்றனர். அந்த வகையில் தென்மராட்சி பிரதேசத்தில் புதிய பெண் படைப்பாளியொருவர் நூலுருக்கொண்டு அறிமுகம் தந்திருப்பது மகிழ்தலுக்குரியது. தாய்மொழியின் பண்பியல்பு கொண்டு மனதில் தோன்றியவைகளை எழுத்தாக்கியுள்ளார். வாழ்வியலில் ஏற்பட்ட அனுபவங்களை கவிதையாகவும், கட்டுரையாகவும் கட்டமைத்து அதற்குரித்தான அர்த்த வடிவங்களை சிறப்புறத் தந்துள்ளார். பெண்கள் சமூக விளைவுகளின் நேரடி எதிர்நோக்குநர்கள் என்பதை மிகத் துல்லியமாக எடுத்தியம்பும் கவிதைகளும் கட்டுரைகளும் காணப்படுகின்றன. படைப்பாளி தன்னையொரு பாத்திரமாக மாற்றிக்கொண்டு எழுத்துக்களுக்கு உயிர்வடிவம் கொடுத்துள்ளதை உணர்ந்துகொள்ள முடிகிறது. நூலுருவில் அமைவு பெற்றுள்ள அத்தனை வடிவங்களும் சமூகத்துக்கான கருத்தூட்டங்களை அறிவூட்டமாகத் தந்துள்ளன.

# தென்மராட்சிக் கல்வி வலய மாணவர் நாடாளுமன்றம்

மாணவர் நாடாளுமன்றம் பாடசாலை, வலயம், மாகாணம் தேசியம் என நான்கு வகை மட்ட அடைவுகளில் தெரிவு செய்யப்படல் வேண்டும். பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களிடையே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையின் மாணவர் நாடாளுமன்றமானது ஆண்டின் முதலாம் தவணைக்குள் அமைத்துக் கொள்ளல் கட்டாயம். மாணவர் தொகைக்கேற்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அமைய வேண்டும். சபாநாயகர், தலைமை அமைச்சர், சபை முதல்வர், பிரதிச் சபாநாயகர், பிரதிச் செயற்குழுத் தலைவர், 10 அமைச்சர்கள், 10 பிரதி அமைச்சர்கள், 10 ஆலோசனைச் செயற்குழு உறுப்பினர்கள் என ஒவ்வோர் பதவி நிலை சார்ந்தும் மாணவர்கள் தெரிவு செய்யப்படல்வேண்டும்.

ஒவ்வொரு வலயத்திலும் வருடாந்தம் 10 பாடசாலைகளில் மாணவர் நாடாளுமன்றம் உருவாக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டதையடுத்து தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த 2015ஆம் 2016ஆம் ஆண்டுகளிலும் நடப்பாண்டிலும் தெரிவு செய்யப்பட்ட 25 பாடசாலைகளின் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே வலய மாணவர் நாடாளுமன்றத்துக்கான தெரிவுகள் சாவகச்சேரி மகளிர் [illegible] அண்மையில் இடம்பெற்றன.

வலய மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கென ஒவ்வொரு பாடசாலை மாணவர் நாடாளுமன்றத்திலிருந்து தலா 5 உறுப்பினர்கள் வீதம் அழைக்கப்பட்டிருந்தனர். அங்கு வாக்களிப்பு மூலம் சபாநாயகர், தலைமை அமைச்சர், பிரதிச் சபாநாயகர் 10 அமைச்சர்கள், பத்து பிரதி அமைச்சர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட வலய மாணவர் நாடாளுமன்றின் கன்னி அமர்வு அண்மையில் சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] நடைபெற்ற வலய மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வுக்கு விருந்தினர்களாக நடுவண் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராய்ச்சி, கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் வை.ஏ.என்.டி.யாப்பா, மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், கல்வி அமைச்சின் வழிகாட்டலும் ஆலோசனையும் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர். பத்மசாந்த. வேள்ட் விஷன் லங்கா நிறுவனப் பிரதிநிகளான ஜெ. ரமேஸ்குமார், ஜெ.ஜெயராஜா ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

> "25 பாடசாலைகளின் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே வலய மாணவர் நாடாளுமன்றத்துக் கான தெரிவுகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபர்

## வணபிதா க.ஜேம்ஸ் சிங்கராயர் அவர்களின்

# குருத்துவப் பணியில் வெள்ளிவிழா

## (1992 - 2017)

Congratulations



### Sacerdotal Silver Jubilee Message from His Lordship



I am, indeed, delighted to send my warm wishes and prayers to Revd. Fr. James Singarayar as he celebrates his Sacerdotal Silver Jubilee on the 28th of July 2017. My prayers are that the Good Lord who guided him up to now may journey with him till the end of his eathly life.

I warmly congratulate Fr. James Singarayar for chalking 25 years of service in the Lord's vineyard. We are thankful to him for his dedicated service to the College and wish him many more years of priestly ministry in the coming years. May God go with you, Fr. James.

The Right Revd.
Dr. Justin B Gnanapragasam
Bishop of Jaffna.

### இறைபணியும் கல்விப்பணியும் மேலும் சிறந்தோங்க வாழ்த்துக்கள்:



இறைபணியுடன் கல்விப்பணியையும் மிகச்சிறப்பாககடந்த 25 ஆண்டுகளாக இதயசுத்தியுடன் மேற்கொண்டுவரும். ஊர்காவற்றுறை-புனித அந்தோனியார் கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை வணக்கத்திற்குரிய க.ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளாரின் குருத்துவ சேவையை நினைவு கூரும் வகையில் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களை பாடசாலைச் சமூகம் முன்னெடுத்து வருவது பாராட்டத்தக்கது.

இன்று புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபராக இருந்து நற்பணியாற்றிவரும் அருட்தந்தை க.ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று நீண்ட காலம் நலமே வாழ்ந்து மனிதகுலத்திற்கு அளப்பரிய சேவைகளையாற்றும் வலிமையையும். உளமேம்பாட்டையும் இறைவன் வழங்க-வேண்டும். அடிகளாரின் பணிசிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி க. சர்வேஸ்வரன்,**
**கௌரவகல்வி அமைச்சு,**
**வடமாகாணம்.**

### ஆசிச் செய்தி



கல்விசார் பெருந்தகையீர்!

புனிதஅந்தோனியார் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றும் அருட்தந்தை க. ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் 25 வருட குருத்துவ வாழ்க்கையை நினைவு கொண்டு விழா எடுத்திருப்பது மிக மன-மகிழ்ச்சியை தருகின்றது. கல்வி வளர்ச்சியிலும் சமூக சமயவளர்ச்சியிலும் இலங்கையில் பலபாடசாலைகளில் பணியாற்றி நன்மாணாக்கர்களை உருவாக்கி தனக்கென ஒரு இடத்தை வகுத்து இன்று அனை வரதும் நன்ம-திப்பைப் பெற்றுவாழ்ந்து கொண்டிருக்கும் ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளாரை வாழ்த்துவதில் மனமகிழ்ச்சியடைகிறோம். போதகராகவும் சாதகராகவும் வாழ்வது மிகவும் கடினமானது. கற்களும் புற்களும் நிறைந்த இப்பாதையில் நற்பணி யாற்றுவது மிகவும் கடினமானது. இப்பாதையை இலகு வாக்கி 25 ஆண்டுகள் கடந்து வந்த அனுபவம் வாழத்துடிக்கும் இளைஞர்களுக்கு பாதையாக அமைகின்றது. அடிக-ளாரைப் பாராட்டும் நலன்புரிச் சங்கத்தினரைப் பாராட்டுகின்றோம். வணபிதா க.ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் பல்லாண்டு காலம் நிறைவாகவாழ இறை ஆசியை வேண்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்பஅன்பு"

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய குருக்கள்**

### ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



2017.08.02 ஆம் திகதி தனது குருத்துவ அபிஷேகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவினைப் பூர்த்தி செய்யும் வெள்ளி விழா நாயகன். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட் பணி க. ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளாரை வாழ்த்துவ-தில் பெருமகிழ்வடைகின்றேன். அழைத்தல் வாழ்வு என்பது முள்ளின் மேல் படுக்கை போன்றது. சிலரின் பாராட்டுக்களையும் பலரின் விமர்சனங்களையும் கொண் டது. கடந்த 25 ஆண்டுகளில் அழைத்தல் வாழ்வின் அனை த்து சவால்களையும் வெற்றி கொண்டு ஆண்டவனின் அன்புக் குரு-வாய் மிளிர்ந்த இவர் தனதுகல்விவாழ்விலும் பலபட்டங்கள் பெற்று உயர்ந்து நிற்கின்றார். நல்லாயனாகக் கிறிஸ்துவின் வழி நின்று தம் பணிவாழ்வை மேற்கொள்ளும் இந்நாளிலும் இனிவரும் நாள்களிலும் வளமும் நலமும் பெற்றிட. இவரால் கல்விச் சமூகமும் பங்குச் சமூகமும் வளம் பெற்று உயர்ந்திட. தீர்க்காயுளுடன் இறை ஆசிபெற்று வாழ்ந்திட மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு இ. இளங்கோவன்.**
**ஆளுநரின் செயளாலர். ஆளுநர் செயலகம்.**
**வடமாகாணம்.**

### அரசாங்கஅதிபரின் வாழ்த்துச் செய்தி



சென் அன்ரனிஸ் கல்லூரி முதல்வர் வணபிதா க. ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளாரின் குருத்துவ வெள்ளி விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வெள்ளிவிழா நாயகனை வாழ்த்தி பெருமைப்படுத்தும் வகையில் சென் அன்ரனிஸ் கல்லூரி ஆசிரிய கழகத்தினால் வெள்ளிவிழா செய்யப் படுவது சிறப்புக்குரியது. வணபிதா க. ஜேம்ஸ் சிங்கராயர் புகழ் பரப்பும் வெள்ளிவிழாவுக்கு என் நல்வாழ்த்துக் களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**திரு.நா. வேதநாயகன்**
**அரசாங்க அதிபர்,**
**யாழ் மாவட்டம்.**

### மறைப்பணிகள் மற்றும் கல்விப்பணிகள்

**மறைப்பணிகள்**

1992 - 1993 உதவிப்பங்குத்தந்தை பருத்தித்துறை
1993 - 1995 உதவிப்பங்குத்தந்தை மானிப்பாய்
1996 - 2000 உதவிப்பங்குத்தந்தை இளவாலை
2003 - 2008 விடுதிக்காப்பாளர். புனித சூசையப்பர் விடுதிச்சாலை. இளவாலை
2012 - 2017 விடுதிக்காப்பாளர். கிறிஸ்து இல்லம். ஊர்காவற்றுறை

**கல்விப்பணிகள்**

1993 ஆவணியில் இளவாலை புனித் ஹென்றியரசர் கல்லூரியில் ஆசிரியராக இணைவு
1994 உப அதிபர். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி
1996.03.18 பட்டதாரி ஆசிரியராக நியமனம்
2003.01.01 அதிபர். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி
2009.02.10 அதிபர். ஊற்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி
2009.11.13 இலங்கை அதிபர் சேவை தரம் 2 நியமனம்.

### வடமாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரஅமைச்சுசெயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/ புனிதஅந்தோனியார் கல்லூரியில் அதிபராக கடமையாற்றும் வணபிதா க. ஜேம்ஸ் சிங்கராயர் அவர்களின் குருத்துவ அர்ப்பணத்தின் 25 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவர் குருப்பட்டம் பெற்றகாலம் முதல் இன்று வரை கல்விப்பணிகளில் மட்டுமல்லாது மறைப்பணிக-ளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டுவருகின்றமை பாராட்டத் தக்கதாகும். இவரது பணிகள் மேலும் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு இ. இரவீந்திரன்.**
**செயலாளர், வடமாகாணக்கல்வி. பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார**
**அமைச்சு, வடமாகாணம்.**

### மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/புனித அந்தோனியார் கல்லூரி முதல்வர் வணபிதா க.ஜேம்ஸ் சிங்கராயர் அவர்களது குருத்துவ வெள்ளிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கல்விப்பணியோடு இவர் ஆற்றியமறை பணிகள் பல. பருத்தித்துறை, மானிப்பாய். இளவாலை போன்ற பிரதேசங்களில் உதவிப்பங்குத் தந்தையாக பணியாற்றி. மக்களது ஆன்மீகத்துடன் கூடிய நல்வாழ்வுக்கு வழிகாட்டினார்.

வணபிதா க. ஜேம்ஸ் சிங்கராயர் அவர்களது குருத்துவ வெள்ளிவிழாவில் அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு செ. உதயகுமார்,**
**மாகாணக் கல்விப்பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்.**

### குருத்துவ வாழ்வில் இருபத்தைந்தாண்டில்........

வெள்ளிவிழாஆண்டில் யாவும்
வெற்றிபெறவாழ்த்துகின்றோம்
அருட்தந்தை க. ஜேம்ஸ் சிங்கராயர் அவர்களை.....
மானுடவிடுதலைஉரைத்தயேசுவின்
மகத்துவஒளியைமண்ணில் பரப்பும்
காணிடம் எங்கணும் கடமைவீரனாய்
கண்ணீர் உறவுகள் கவலைதீர்க்கவும்
பேணுடைப் பெருமனம் இலங்கிட இயங்கிடும்
பெரியவர் மதகுருஆற்றவர் எனப்பல
தூண்நிகர் நிமிர்வெனத்துலங்கிடும் தூதர்
தூய ஜேம்ஸ் சிங்கராயஅருட்பிதாவாழ்க!

ஒப்புக் கொடுத்திடும் திருப்பலியாவையும்
உவப்பக் கொடுத்துமேஉயர்வுகள் பேணி
எப்பவும் எங்கணும் எவரையும் புரிந்து
இனிமைபேசிடும் இறைமகன் ஆகி
செப்பும் மொழியிலேசெவ்வம் கொஞ்சிட
செல்பவர் மனங்களில் அன்பில் மூழ்கிட
ஒப்புநிகரிலாஉயரியபிதாமகர்
ஆற்றவர் ஜேம்ஸ் சிங்கராயர் வாழ்கவே!!

யேசுஒளியாய்
பேசும் மொழியாய்
ஆசிஅருளும் தந்துதந்து
இறைவாழ்வில் நிறைசேவையாற்ற
வாழ்த்திமகிழ்கின்றோம்.....

### அதிகாரிகள் முகம் சுழிப்பார்கள் என்பதற்கு மாறாக கடமையினை மேற்கொள்ளும் முதல்வர்



நான் அறிந்த நல்ல உள்ளங்களில் வணபிதா ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளாரும் ஒருவர் ஆவார். வணபிதா இருபத்தைந்து வருடங்கள் தனது குருத்துவ வாழ்வில் சாதித்த சாதனைகளுக்கு இன்று கல்லூரிச் சமூகம் வெள்ளிவிழா கொண்டாடி கௌரவப்படுத்தும் இந்நாளில் எனது ஆசிச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடை-கின்றேன். நான் பிதாவை இன்று நேற்று அல்ல வலிகாம வலயத்தில் கல்விப் பணிப்பாளராக இருந்தகாலத்தில் இருந்தே அறிவேன். ஆகவே வணபிதாவை பற்றி பல நேர்கணிய தொடர்புகளை வெளிப்படுத்தும் இச் செய்தியில் அவர் உடல். உள ஆரோக்கியம் நிறைந்தவராக வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

**திருசு.சுந்தரசிவம்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்.**
**தீவக வலயக்கல்வி அலுவலகம், வேலணை**

### பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



பணிக்குருத்துவ வாழ்வின் இருபத்தைந்து ஆண்டுகளை-பூர்த்தி செய்து வெள்ளி விழாவினை கொண்டாடும் ஊர்காவற்றுறை புனிதஅந்தோனியார் கல்லூரியின் அதிபரான அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளாருக்கு வாழ்த்துச் செய்திவழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

அவரது பணி சிறக்க பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி எ. அன்ரன் யோகநாயகம்**
**பிரதேச செயலர்,**
**ஊர்காவற்றுறை.**

### எமது தீவகவலயத்திற்கு பெருமை சேர்ப்பிக்கும் பாடசாலையை வழிப்படுத்தும் முதல்வரின் பணிசிறக்க எனது வாழ்த்துக்கள



வணபிதா ஜேம்ஸ் சிங்கராயர் அவர்களை நான் அதிபராக இருந்த காலம் தொட்டு நன்கு அறிவேன். அவரின் தனிச் சிறப்புக் களாக. முன் கூட்டியே வேலைகளை செய்து முடிப்பது பாடசாலை கணக்குகளை சிறப்பாகபேணுதல் அனைவரையும் அன்புடன் வரவேற்கும் பண்பு போன்றனவற்றைக் குறிப்பிடலாம். மேற்கூறப் பட்டகுணங்கள் படைத்த புனிதஅந்தோனியார் கல்லூரி முதல்வர் வணபிதாவின் குருத்துவ வெள்ளிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி-வழங்குவதில் கிடைத்த சந்தர்ப்பத்தினை பெரும் பாக்கியமாகவே கொள்கிறேன்.

ஆகவே முதல்வர் தன்னுடைய காலத்தில் மகிழ்வாக இருக்க இயேசுபிரானை இறைஞ்சுகின்றேன்.

**M.சத்தியசீலன், கோட்டக் கல்விப் பணிப்பாளர்.**
**கோட்டக் கல்விஅலுவலகம், ஊர்காவற்றுறை.**

### பிரதி அதிபர் அவர்களின் வாழ்த்து



குருத்துவபணிவாழ்வில் வெள்ளிவிழாகாணும் எமதுகல்லூரியின் அதிபர் வணபிதா க. ஜேம்ஸ் சிங்கராஜர் அடிகளை இந்நாளில் உளமார வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். பணிக்குருத்துவத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து நிற்கின்ற எம் அதிபர் அவர்கள் இறைபணியில் மட்டுமன்றி கல்விப்பணியிலும் தன்னை-அடையாளப்படுத்தி சிறந்த எடுத்துக்காட்டானஅதிபர்கள் வரிசையிலும் இடம்பிடித்துள்ளார். அவர் தீவகத்தின் முன்னணிப் பாடசாலையாக திகழும் ஊர்காவற்றுறைபுனிதஅந்தோனியார் கல்லூரி அதிபராக பணிபுரிந்து வருகின்றார். அருட்தந்தையின் பணிக்காலங்கள் எமதுகல்லூரியின் பொற்காலங்கள் என்றால் மிகையாகாது.

**திரு அ. துஷ்யந்தன், பிரதிஅதிபர்**
[illegible]

Congratulations

**ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் மாணவர்கள்.**
**யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம் 02.08.2017



1968-பிலிப்பைன்ஸ் அவுறோரா நிலநடுக்கத்தில் 270 பேர் உயிரிழந்ததுடன் 261 பேர் காய மடைந்தனர்.

1274-ஒன்பதாவது குருசேட் போர்க் களத்திலிருந்து திரும்பிய பிரிட்டனின் முதலாவது எட்வேட் 7 நாள்களின் பின்னர் அரசராக முடிசூடினார்.

1776-ஐக்கிய அமெரிக்காவின் சுதந்திர அறிவிப்பு ஒப்ப மிடப்பட்டது.

1790-அமெரிக்காவின் முத லாவது சனத்தொகைக் கணக்கெடுப்பு இடம் பெற்றது.

1870-லண்டனில், உலகின் முதலாது நிலக்கீழ் சுரங்க ரயில் பாதை அமைக்கப்பட்டது.

1923-அமெரிக்க அரசதலை வர் வோரன் ஹார் டிங்ஸ் உயிரிழந்ததை அடுத்து துணை அரசதலை வராக இருந்த. கல்வின் கூலிஜ் அமெரிக்க அரசத லைவர் ஆனார்.

1934-ஜேர்மனிய அரசத லைவர் போல் வொன் ஹைடின்போர்க் உயிரிழந் ததை அடுத்து அடல்ப் ஹிட் லர் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

1968-பிலிப்பைன்ஸ் அவு றோரா நிலநடுக்கத்தில் 270 பேர் உயிரிழந்தது டன் 261 பேர் காயமடைந் தனர்.

1980-இத்தாலியில் ரயில் நிலையத்தில் குண்டு வெடித்ததில் 85 பேர் உயி ரிழந்ததுடன் 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந் தனர்.

1989-இலங்கையில் இந் திய அமைதிகாக்கும் படை களால் 64 இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1990-குவைத்தை ஈராக் ஆக்கிரமித்ததையடுத்து வளைகுடாப் போர் தொடங்கியது.

1987-இலங்கையின் மூன்றிலொரு பகுதியில் தமிழருக்கு தனி மாகாணம் அமையுமென இந்திய இலங்கை ஒப் பந்தம் குறித்து ராஜீவ் தெரிவிப்பு.

1987-இந்திராவின் கனவை ராஜீவ் நன வாக்கினார் என்று எம்ஜிஆர் இலங்கை இந்திய ஒப்பந்தம் குறித்துப் பெருமிதம்.

1987-வடக்கு கிழக்கு அப்பாவி மக்க ளுக்குப் பாதுகாப்பு வழங்கவே இந்திய இராணுவப் படையென உலங்குவா னூர்தியில் இருந்து விழுந்த துண்ட றிக்கையில் குறிப்பு.

## நாளை

**03.08.2017**

வியாழக்கிழமை

**ஆடி - 18**

திதி: ஏகாதசி மா.06.08 வரை
நட்சத்திரம்: கேட்டை மு.இ: 08.19 வரை
சுபநேரம்: 07.34—09.04 வரை
ராகுகாலம்: 01.34—03.04 வரை

ஏகாதசி விரதம்

## எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் சிறப்பு உரை எதிர்வரும் ஞாயிறன்று



தமிழ் நாட்டின் பிரபல எழுத் தாளர் எஸ்.இராமகிருஷ்ண னின் 'சமகால நவீன தமிழ் இலக்கியச் சிந்தனைகள்' எனும் தலைப்பில் சிறப்புரை யொன்று. கொழும்புத் தமிழ்ச் சங்க நவரத்தினசிங்கம் மண் டபத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ம)





சாகித்திய ரத்னா தெணியானின் பவளவிழாவும், ஜீவநதி தெணியான் பவளவிழாச் சிறப்பிதழ், தெணியானின் குறுநாவல் வெளியீட்டில் ஜீவநதி ஆசிரியர் க. பரணிதரன், தலைமையுரை ஆற்றுவதையும் உரையாளர்கள் த.ஜெயசீலன், சூரன்ரவிவர்மா, வே. சிவராஜலிங்கம், மருத்துவர் த.கலாமணி, மருத்துவர் பா.தன பாலன், இ.சு. முரளிதரன் ஆகியோர் உரையாற்றுவதையும் நூல் வெளியீடுவதையும் காணலாம்.

# மரண அறிவித்தல்

## திருமதி பர்வதம் சங்கரப்பிள்ளை



பிறப்பு
15.04.1933

இறப்பு
29.07.2017

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரம் இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம். ஓட்டுமடம் செழியன்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புத் தாயார் திருமதி பர்வதம் சங்கரப்பிள்ளை (சங்கரப்பிள்ளை மாமி) 29.07.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஈசன் (யாழ்ப்பாணம்), லதா(கொலண்ட்), ராசன் (கனடா), கலா (கனடா), சுதா (பிரான்ஸ்), விஜயன் (ஆஸ்திரேலியா), சுவி (யாழ்ப்பாணம்), இந்து (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரா(லண்டன்), ராஜன்(கொலண்ட்), சுபா(கனடா), குமார் (சுவிஸ்), நந்தன் (பிரான்ஸ்), மாயா (ஆஸ்திரேலியா), குமார் (யாழ்ப்பாணம்), சுமன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நல்லையா, தம்பிப்பிள்ளை, கமலாதேவி மற்றும் செல்லத்துரை, செல் லம்மா , கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்கையற்கரசி, நாகேஸ்வரி காலஞ்சென்ற கோகுலநாதன் மற்றும் யோகம்மா, சிவலிங்கம் காலஞ்சென்றவர்களான ராசம்மா, ஆச்சிப்பிள்ளை, சிவக்கொழுந்து, பஞ்சரெத்தினம், அருணாச்சலம், தம்பிராசா, தில்லையம்பலம் மற்றும் குழந்தைவேல் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிந்தன், சபிலா, ரஞ்சித், கோஜனா, விதுஷா, மது, நிஷா, கார்த்தி, கவின், பிரிதா, துஷாரா, மாதுரி, லக்ஷி, லக்ஷன், பிரியன், பிறின்சி, கன்சி ஆகியோரின் பேர்த்தியும் அஸ்வினின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2017) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**செழியன் வீதி,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# உருவாகவுள்ளது தமிழ்படம் - 2

சி.எஸ்.அமுதன் இயக்கத்தில் சிவா நடிப்பில் வெளியான 'தமிழ்படம்' படத்தின் இரண்டாவது பாகம் விரைவில் உருவாகவுள்ளது என்ற அறிவிப்பு தற்போது வெளிவந்துள்ளது. தமிழ் சினிமாவில் காலங்காலமாக நடந்து வரும் மிகைப்படுத்தல் காட்சிகளை கிண்டல் செய்து 'தமிழ்படம்' உருவாக்கப்பட்டது. பல தமிழ்ப் படங்களை கிண்டல் செய்து உருவாகியதால் பல்வேறு போராட்டங்களுக்கு இடையே படம் திரைக்குவந்து ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது தமிழ்படம் படத்தின் இரண்டாவது பாகம் தயாரிக்கப்படவுள்ளது என்ற தகவல் வந்துள்ளது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** செயல்களில் கவனச் சிதறல் ஏற்படலாம். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நன்மை அளிக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**இடபம்:** பேச்சில் அன்பும், பண்பும் மிகுந்திருக்கும். உறவினர்கள் உங்களை மதிப்புடன் நடத்துவர். தொழில், வியாபார வளர்ச்சிக்காக முயற்சியுடன் பாடுபடுவீர்கள்.

**மிதுனம்:** பேச்சு, செயலில் விவேகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். வருமானம் உயரும். குடும்பத்தில், சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** உங்களை சிலர் குறை சொல்ல காத்திருப்பர். சுறுசுறுப்புடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். ஆடம்பரச் செலவு செய்வீர்கள்.

**சிங்கம்:** சிலர் உங்களின் நற்செயலை பரிகாசம் செய்யலாம். அவர்களிடம் விலகியிருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணியில் தாமதம் உண்டாகும்.

**கன்னி:** உங்களிடம் உதவி பெற்றவர் நன்றி பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும்.

**துலாம்:** குடும்ப சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாக்கவும். வருமானம் சுமாரான அளவில் இருக்கும்.

**விருச்சிகம்:** நல்லோரின் நட்பால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். இலாபம் படிப்படியாக உயரும். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**தனுசு:** உங்களுக்கு இடையூறு செய்பவரை அறிந்து விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிடும். இலாபம் சுமாராக இருக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** பேச்சு, செயலில் தைரியம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். இலாபம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**கும்பம்:** கடந்த காலத்தில் திகைப்பு தந்த பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். பெண்களுக்கு நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மீனம்:** திட்டமிட்ட பணிகள் நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

WhatsApp

மியூசிக் சானலில் நடந்த உரையாடல்:
வர்ணனையாளர்: நீங்க எங்க இருந்து பேசறிங்க?
அழைத்தவர்: தி நகர்
வர்ணனையாளர்:நானும் தி நகர்தான், நீங்க எந்த ஏரியா?
அழைத்தவர்:சாய் அபார்ட்மெண்ட்
வர்ணனையாளர்:அட நானும் அதே அபார்ட்மெண்ட் தான், நீங்க எந்த பிளாட்?
அழைத்தவர்:பிளாட் நம்பர் 13
வர்ணனையாளர்:கிண்டல் பண்ணாதிங்க, அது என் வீடு..
அழைத்தவர்: நான் உன் புருஷன்டி, வீட்டு சாவி எங்கடி வச்சிருக்க?

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 5 | | 4 | | | 3 | |
| | | | | | 2 | 5 | 1 | 4 |
| | | 3 | 5 | | | | 8 | |
| | | | | | 5 | 8 | | 9 |
| | 5 | | | | | | 4 | |
| 9 | | 8 | 1 | | | | | |
| | | | | | 7 | 6 | | |
| 1 | 3 | 2 | 8 | | | | | |
| | 6 | | | 2 | | | | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 3 | 8 | 6 | 2 | 7 | 9 | 4 |
| 2 | 8 | 4 | 9 | 7 | 5 | 6 | 3 | 1 |
| 9 | 7 | 6 | 1 | 3 | 4 | 8 | 2 | 5 |
| 7 | 6 | 8 | 5 | 9 | 3 | 1 | 4 | 2 |
| 3 | 4 | 9 | 2 | 1 | 6 | 5 | 7 | 8 |
| 5 | 2 | 1 | 7 | 4 | 8 | 9 | 6 | 3 |
| 6 | 1 | 2 | 3 | 5 | 7 | 4 | 8 | 9 |
| 4 | 3 | 5 | 6 | 8 | 9 | 2 | 1 | 7 |
| 8 | 9 | 7 | 4 | 2 | 1 | 3 | 5 | 6 |

டோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே ருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், ரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் டாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சால். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நி[illegible] அறிமுகப்படுத்தி [illegible] பிரபலமாகியது. 2005இல் இது லக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி கோடியாய் பணம் தருகிறோம் என்று நாசா கூறிய போதும்



தன் தாய் [illegible]ட்டுக்கு மட்டுமே உழைப்பேன் [illegible]ன்று கூறிய தமிழன்

பேஸ்பு[illegible] மட்டும்தான் அடுத்தவனுக்கு அறிவுரை [illegible]சொன்னா லைக், கொமென்ட் விழும்...




நேர்ல சொன்னா சப்புன்னு அறைதான் விழும்...

ஆண்டவா எனக்கென்டு நான் எதையுமே கேக்கல...



என்னோட அம்மாவுக்கு சூப்பர் பிகரா ஒரு மருமகள்தானே கேட்டேன்!

நானும் ஸ்டேட்டஸ் போடமாட்டேன், யார் போட்டாலும் லைக்கும் பண்ண மாட்டேன் நானும் செயார் பண்ண மாட்டேன், யார் செயார் பண்ணுனாலும் கண்டுக்கமாட்டேன்



பேஸ்புக்கில் இப்படியும் சில எருமை மாடுகள்



பாரதி 7 வயசில கல்யாணம் பண்ணினாரு. காந்தி 13 வயசில கல்யாணம் பண்ணினாரு. நேரு 14 வயசில கல்யாணம் பண்ணினாரு. இப்போ தெரியுது நாம ஏன் வரலாற்றில இடம்பிடிக்கல என்று.

## முடியின் முனையில் ஏற்படும்

# வெடிப்பைத் தடுக்க சில வழிமுறைகள்

சிலருக்கு முடியின் நுனியைப் பார்த்தால் இரண்டாக பிளந்திருக்கும். அப்படி முடியானது இரண்டாக பிளந்திருந்தால், முடி வளராது. இப்படி முடி பிளப்பதற்கு அதிகப்படியான அளவில் இரசாயனம் கலந்த பொருள்களை பயன்படுத்துவது ஒரு முக்கிய காரணம். அதுமட்டுமின்றி, முடி வெடிப்பு ஏற்படுவதற்கு ஒருசில பழக்க வழக்கங்களும் காரணமாகும். அந்தப் பழக்கங்களை மாற்றிக் கொண்டால், முடி வெடிப்பு ஏற்படுவதைத் தடுக்கலாம்.

**தினமும் தலைக்கு குளிக்காதீர்கள்**

தினமும் தலைக்கு குளிக்காமல், வாரத்திற்கு 2அல்லது 3 முறை தலைக்கு குளிக்கும் பழக்கத்தைக் கொள்ள வேண்டும். அள வுக்கு அதிகமாகத் தலையை அலசினால், தலையில் உள்ள இயற்கை எண்ணெய் முற்றி லும் நீங்கி, அதனால் முடியின் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

**சம்புவின் லேபிளை கவனிக்கவும்**

சம்பு வாங்கும் போது, அதன் லேபிளை கவனிக்க வேண்டியது அவசியம். அப்படி கவனிக்கும் போது, அதில் சோடியம் சல்பேட் இருந்தால், அவற்றை வாங்க வேண்டாம். ஏனெனில் அவை முடியின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். எனவே சோடியம் சல்பேட் இல்லாத சம்புவைப் பார்த்து வாங்கி பயன்படுத்துங்கள்.

**கண்டிஷனர் பயன்படுத்துங்கள்**


எப்போதும் தலைக்கு குளிக்கும் போது முடிக்கு கண்டிஷனர் பயன்படுத்துவதை மறக்க வேண்டாம். ஏனெனில் இவை முடியை மென்மையாக வைக்க உதவுவதோடு, முடி வெடிப்பு ஏற்படுவதையும் தடுக்கும்.

**மின்சாதன உதவியில் தலை உலர்த்துவதைத் தவிர்க்கவும்**

தலை நுனியில் அளவுக்கு அதிக மான வெப்பம்

(24ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் அஞ்சலி




### வேலாயுதம் குமாரசாமி

(ஓய்வு பெற்ற தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர், அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பழைய மாணவர் மன்றம்,**
**யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி.**

## மரண அறிவித்தல்



### வேலாயுதம் குமாரசாமி

(ஓய்வு பெற்ற தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர், அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

140 (50), சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் குமாரசாமி கடந்த (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - நாகம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற சிவஞானமணியின் அன்புக்கணவரும் சிவகுமார் (பெல்ஜியம்), ஜெயக்குமார் (கனடா), இந்திரகுமார் (நிலைய பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர் - பருத்தித்துறை நீதி நிர்வாகப்பிரிவு), தேவ்குமார் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவானி (பெல்ஜியம்), குணரஞ்சினி (கனடா), ரஞ்சினி (சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் - மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), மாலினி (நோர்வே) ஆகியோரின் அன்புமாமனாரும் காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி, பராசக்தி மற்றும் கந்தசாமி, கதிர்காமநாதன் (ஜேர்மனி), ராணி, லோகேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் காலஞ்சென்றவர்களான மகேந்திரன், குணரத்தினம் மற்றும் இராமநாதன் (நாதன் உணவகம் நல்லூர்), சரோஜினி, மகாதேவன், யோகம், தவமணி (குப்பிழான்) ஆகியோரின் அன்புமைத்துனரும் காலஞ்சென்ற க. சொக்கலிங்கம் (ஆசிரியர், குப்பிழான்) அவர்களின் அன்புச்சகலனும் சிந்துஜா, திவ்யா, சஞ்ஜீவகன், சிவரூபி, அஞ்சுகா, வினு, அரன், வைஷ்ணவி, சுவாதிஷ் ஆகியோரின் அன்புப்பேரனும் கைலாஷ், கார்த்திகா, கிருத்திஷ், ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**140, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.**
**கு. இந்திரகுமார்**
**077 612 0364, 021 222 6158**

**SUMITOMO**

**பாதுகாப்பானவை நம்பகரமானவை**

உலகில் மிகப்பெரிய உற்பத்தி நிறுவனங்களின் ஒன்றான சுமிடோமோ ரப்பர் இன்டஸ்ரீஸினால் சுமிடோமோ டயர் உற்பத்தி செய்யப்படுகின்றது.



• அதிஉயர்தரம் • அதிகூடிய தூரம் • உயர் தொழில்நுட்பம் • ஸ்திரத்தன்மை • நவீன வடிவமைப்புகள்

யாழ் நகரில் உங்கள் தேவைக்கு

**பொபியூலர் மோட்டர் ஸ்டோர்ஸ்**

270, ஸ்டேன்லி ரோட், யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021-222 3535, 021-222 2403 பெக்ஸ்: 021-2223535

**V.R. VADIVETKARASAN ENTERPRISES**
271, Sea Street, Colombo - 11.
Tel: 0112 434 800, 2 435 732 Fax: 2 435 731

**பணியாளர் தேவை**

யாழ்ப்பாணம் பிரபல கிறீன் கிறாஸ் ஹோட்டலுக்கு கீழ்வரும் பணியாளர் தேவை. தகுதியுடையவர்கள் கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரில் வருகை தரவும்.

1. வரவேற்பாளர் (Receptionist) 2. காசாளர் (Cashier)
3. உணவு பரிமாறுபவர் 4. உணவு தயாரிப்பாளர்
5. சமையல் உதவியாளர்

T. P - 021 222 4385, 021 222 1686
33, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Email - greengrassjaffna@gmail.com

**வேலைவாய்ப்பு**

உலகளாவிய ரீதியில் விஸ்தரித்துள்ள எமதுTeam Work நிறுவ்ன மானது தனது புதியகிளைகளை யாழ்ப் பாணம், முல்லைத்தீவு,மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் 10 புதிய கிளைகளிற்கு 20 மேற்பட்ட பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

குறிப்பு :- தங்குமிட வசதி,உணவு வசதியுண்டு.
தொடர்பு :- 077 298 6763, 077 062 1631
077 499 3943

சீட்டிழுப்பு வார: 587
சீட்டிழுப்பு திகதி: 01.08.2017
11 36 41 43 S 14 46 49 57
ரூ. 31,539,563/-

சீட்டிழுப்பு வார: 170
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 96,483,164/-
சீட்டிழுப்பு திகதி: 01.08.2017
Z 15 36 52 80 06 57 72 78

ராசி
திகதி 01.08.2017 | வெற்றி வாரம் 2166 | வர்ணம் நீலம்
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 03 29 36 55
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 23 00 808 /=
35 37 44 53
04.08.2017 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

## வடமாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு வாடகை கட்டடத்தினை பெறுவதற்கான கோரிக்கை

பின்வரும் வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வாடகைக்கு கட்டடத்தினை வழங்க விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. வதிவிட அளவு குறைந்தது 3500 சதுர அடிகளைக் கொண்டதாகவும், அண்ணளவாக ஆறு அறைகளுடன் பெரியளவிலான விறாந்தையைக் (Hall) கொண்டதாகவும், ஆகக் குறைந்தது மூன்று வாகனத்தரிப்பிட வசதி கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
2. பிரதான வீதிகளுக்கு அண்மையிலும், வடக்கு மாகாண ஐந்து மாவட்டத்திலிருந்து மக்கள் சென்று வரக்கூடியதாகவும் இருப்பதும் விரும்பத்தக்கது.
3. முற்பணம் வழங்கப்பட மாட்டாது.
4. மதிப்பீட்டுத் திணைக்கத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் மாதாந்த வாடகை வழங்கப்படும்.
5. மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதான விண்ணப்பத்தில் வீட்டு உரிமையாளரின் முழுப்பெயர், தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கம், எதிர்பார்க்கும் மாதாந்த வாடகைத் தொகை ஆகிய விவரங்களுடன் ஏனைய தகவல்களையும் உள்ளடக்கி தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில், "மாகாண காணி ஆணையாளர் திணைக்கள வாடகைக் கட்டடம்" என எழுதப்பட்ட கடித உறையினுள் மாகாண காணி ஆணையாளர், மாகாண காணி ஆணையாளர் திணைக்களம், இல. 80, கண்டிவீதி, சுண்டுக்குழி என்னும் முகவரிக்கு 08.08.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவகையில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பொ.குகநாதன்**
**மாகாணக் காணி ஆணையாளர், வடக்கு மாகாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
26
–
09
–
1936



உதிர்வு
31
–
07
–
2017

## வெற்றிவேலு செல்லையா குணரத்தினம்


கோப்பாய் தெற்கு, இருபாலை, கும்பப்பிள்ளையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி (பேர்லின்) யை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வெற்றிவேலு செல்லையா குணரத்தினம் அவர்கள் 31.07.2017 திங்கட்கிழமை ஜேர்மனியில் இறைபதம் எய்தினார் என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

தகவல் : குடும்பத்தினர்

**தொ.பே : 0771967368 (கொழும்பு)**
**0766221193 (இருபாலை)**
**00493085727059 (ஜேர்மனி)**

# மரண அறிவித்தல்



## முத்துக்குமாரு ஆனந்தன்

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு ஆனந்தன் 31.07.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - பொற்கொடி தம்பதியரின் பாசமிகு மருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் குமாரரூபன் (மாகாண கல்வித் திணைக்களம்), ரூபராஜ் (முகாமைத்துவ உதவியாளர் - மேல்நீதிமன்றம், மன்னார்), ராஜாராம் (கயிற்றர் - வியாபாரம்), ஜீவரஜனி (முகாமைத்துவ உதவியாளர் - மேல்நீதிமன்றம், வவுனியா), குகராஜ் (சாரதி - தனியார் பேருந்து சேவை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுமங்கலி (ஆசிரியை - அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை), சுதர்சினி (ஆசிரியை - பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை), வேணுகா, மயூரதாசன் (பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் - வவுனியா), ராதாலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமனும் டக்சன், வைகன், விசாகன், திவ்வியன், டக்சிகா, அக்சயா, வைஸ்ணவி, சங்கவி, உமேஸ், சாயிஸ், ஐங்கரனி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சுப்பிரமணியம், கனகரத்தினம், கந்தசாமி மற்றும் நடேசு ஆகியோரின் சகோதரனும் ராஜ்குமார் (ஓய்வுபெற்ற அதிபர்), சூரியகுமார் (ஓய்வுபெற்ற பொலிஸ் சாஜன்), சிறிக்குமார், நந்தகுமார் (சாஜன்- பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம்), விஜயலட்சுமி, தனலட்சுமி, செல்வலட்சுமி, கமலநாதன் (ஓய்வுபெற்ற பொலிஸ் சாஜன்) ஆகியோரின் மைத்துனரும் சரவணபவன், சக்திவேல்பவன், கணேசசக்தி ஆகியோரின் சித்தப்பாவும் ஜெயகௌரி, ஜெயசங்கர் (லண்டன்); ஜெகதீஸ்வரி (ஜேர்மன்), ஜெயபவானி (டென்மார்க்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2017) புதன் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள்**

# முடியின் முனையில் ஏற்படும் ...

**(23ஆம் பக்கத் தொடர்ச்சி)**
படும் போது, அவை முடியின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். எனவே தலைக்கு குளித்த பின், ஹேர் ட்ரையர் பயன்படுத்தி முடியை உலர வைக்காமல், இயற்கையாக உலர வைத்துப் பழகுங்கள். இதன் மூலம் முடி வெடிப்பைத் தவிர்க்கலாம்.



**ஈரமான முடியை சீவ வேண்டாம்**

முடி ஈரமாக இருக்கும் போது சீவுவதைத் தவிர்க்க வேண்டும். இதனால் முடி உதிர்வது அதிகரிப்பதோடு, முடி வெடிப்பும் அதிகரிக்கும். எப்போதுமே முடி நன்கு உலர்ந்த பின் தான் சீப்பை பயன்படுத்த வேண்டும்.

**அவ்வப்போது முடியை வெட்டவும்**

இரண்டு மாதத்திற்கு ஒரு முறை முடியை வெட்டிக் கொள்ளவேண்டும். இதனால் முடி வெடிப்பினால் முடியின் வளர்ச்சி தடுக்கப்படுவதைத் தவிர்க்கலாம்.

**கலரிங்கை தவிர்க்கவும்**

தற்போது கலரிங் செய்வோர் அதிகம் உள்ளனர். அப்படி செய்யப்படும் கலரிங்கில் அம்மோனியா மற்றும் பெராக்ஸைடு போன்ற இரசாயனங்கள் இருப்பதால், அவை முடியின் புரோட்டினை பாதித்து, முடி வெடிப்பு, வறட்சி போன்றவை ஏற்படக் கூடும். ஆகவே இதனை தவிர்க்க வும்.


**தேங்காய் எண்ணெய் மசாஜ்**

வாரம் ஒருமுறை தேங்காய் எண்ணெயை வெதுவெதுப்பாக சூடேற்றி, அதனை தலையில் தடவி நன்கு மசாஜ் செய்து, ஊற வைத்து குளித்து வர வேண்டும். இதன் மூலம் முடியின் மென்மை அதிகரிக்கும்.

# மரண அறிவித்தல்கள்

## கலாபூசணம் செல்லப்பா நடராசா

*(அகலவத்தை நடராசா - ஆசிரியரும் பிரபல எழுத்தாளரும்)*



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை, ஐயனார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் அகலவத்தை, அளவெட்டி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல எழுத்தாளர் செல்லப்பா நடராசா நேற்று (01.08. 2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா பாக்கியம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற புஸ்பலீலாவதியின் கணவரும் ஆனந்தியின் (ஓய்வுபெற்ற அதிபர், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி) தந்தையும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் (ஓய்வுபெற்ற முகாமையாளர் இலங்கை வங்கி) மாமனும் காலஞ்சென்ற வர்களான சின்னத்துரை, அப்புத்துரை, கனகாம்பிகை ஆகியோரின் சகோதரனும் தவமணிதேவி, ஆலாலசுந்தரம், காலஞ்சென்றவர்களான மங்களம், கனகமணி, பத்மாவதி, குலசிங்கம், புனர்பூசணி ஆகியோரின் மைத்துனரும் ஆரூரன் (கணினி மென்பொறியியலாளர் UK), நிலானி ஆகியோரின் பேரனும் அக்ஷயனின் பூட்டனும் ஆவார். சங்கரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணிக்கு பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அளவெட்டி வடக்கு, அளவெட்டி.** தகவல்: சி.ஆனந்தி (மகள்)

## செல்லையா செல்வராசா (அப்பு)



பிறப்பு 15.12.1955 இறப்பு 01.08.2017

யாழ். பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், சிட்னி (Australia)வை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்வராசா (அப்பு) நேற்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விஷவைத்தியர் சின்னப்பு செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புப்புதல்வனும் நடராசா - சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகனும் பிறேமாவின் அன்புக் கணவரும் தர்சினி, திலிக்சிரம் (ரமணா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சின்னம்மா காலஞ்சென்ற தங்கரத்தினம், சிவயோகம், தவச்செல்வம், செல்வராணி, தேவராணி ஆகி யோரின் சகோதரரும் நடராசா காலஞ்சென்ற அம்பலவாணர் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை, ஆனந்த செல்வகுமார், தவேந்திரலிங்கம் புஸ்பலதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2017) வியாழக்கிழமை ஆஸ்திரேலியா (சிட்னி) இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தவச்செல்வம் - +61 411 894194**
**ரமணா - +61 1425235051**
**[illegible] - +61 [illegible]39)**
**தேவராணி - [illegible]**

**தகவல்: குடும்பத்தினர்.**

## பணியாளர் தேவை

01) களஞ்சியக் காப்பாளர் - ஆண், பெண்
02) மில்வேலை தெரிந்தவர்கள்

தொடர்பு - 077 772 2215

## வாடகைக்கு

TATA பிக்கப் வாகனம் முழுவதுமாக அலுமினிய பெட்டி அடித்த மாதிரி (பாதுகாப்பு) சாரதியுடன் வாடகைக்கு விடப்படும்.

**077 443 6676**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

குப்பிளான் அயட்டயபுலம் 15 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

**076 641 3104/ 077 414 5824**

## காணி தேவை

உரும்பிராயிற்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பலாலி வீதியிலும் கொடிகாமத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் A9 வீதியிலும் 2 பரப்புக் காணி தேவை.

**077 159 7483**

## காணியும் வீடும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வளன்புரம் என்னும் இடத்தில் உள்ள 1½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**077 247 8630**

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சுத்தம் செய்யப்பட்டது 1kg- 450/= மட்டும்.
கூடுதல் கொள்வனவுக்கு - 430/= மட்டும்.

**U.S.A பாம்**
**குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை.**
**077 8689 500**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தருக்கு...

வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24ஆம் திகதி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடிதம் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தில், ஜூன் மாதம் 23ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தபோது கேப்பாபிலவில் விடுவிக்கப்படும் என்று உறுதியளித்த காணிகளை அவர் விடுவிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார். இதற்கான பதில் 28ஆம் திகதியிடப்பட்டு அரச தலைவரின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவால் அனுப்பப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாதுகாப்புச் செயலருடனும், தரைப்படைத் தலைமைக் கட்டளை அதிகாரியுடனும் நான் கலந்துரையாடினேன். தங்கள் கோரிக்கை தொடர்பாக அவர்களும் இணக் கம் தெரிவித்தனர். எனினும், தங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் காலவரையறையை முடிவு செய்வதில் அவர்களுக்குச் சில மட்டுப்படுத்தல்கள் இருக்கின் றன. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பி வரவேண்டிய தேவையையும், நல்லிணக்கச் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு காலவரையறை தொடர்பில் விட்டுக்கொடுத்து ஒத்துழைக்கும்படி நான் அவர்களைக் கோரியுள்ளேன்" என்று அரச தலைவரின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (உ-5)

## வறட்சியை...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்தார் என்று அவரது அலுவலகச் செய்திக் குறிப்புக் கூறுகின்றது.

அரச தலைவர் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற சிறப்புக் கலந்துரையாடலிலேயே அவர் மேற்படி ஆலோசனையை வழங்கினார்.

"தற்போது கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனில் கவனம் செலுத்த வேண்டும். அந்த மக்கள் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். அவை தொடர்பில் ஆராய்ந்து பார்த்து அவர்களுக்கு உதவ வேண்டியது அனைவரினதும் பொறுப்பு. இந்தச் செயற்பாடுகளை ஆராய்வதற்கு பிரதேச செயலக ரீதியில் இராணுவ அலுவலர்கள் நியமியுங்கள்" என்று அரச தலைவர் கூறினார் என்கிறது அந்தச் செய்திக் குறிப்பு.

"மக்களின் குடிதண்ணீர் உள்ளிட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்கான நிதி உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்தச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய வேண்டும். வறட்சிப் பாதிப்புக்கு உள்ளாகிய மக்களுக்கு உலருணவு வழங்கத் தீர்மானித்துள்ளேன். அதற்கான முன்மொழிவு இன்று (நேற்று) அமைச்சரவையில் முன்வைக்கப்படும். உயர்தரமான உணவுப் பொருள்கள் அந்த மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். மேற்பார்வைக் குழுக்களை நியமித்து அந்தச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய வேண்டும்" என்றும் அரச தலைவர் தெரிவித்துள்ளார்.

(உ-5)

## மைத்திரி...

பேசப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது திடீரென "பல இடங்களில் போதைப் பொருள் கைப்பற்றப்படுவதாக அறிகின்றேன். அதனை நீங்கள் என்ன செய்கின்றீர்கள்?" என்றார் பாதுகாப்பு அமைச்சரை நோக்கி.

திடீரென எழுப்பப்பட்ட அந்தக் கேள்வியால் திக்குமுக்காடிப் போனார் அமைச்சர். அவரது பதிலில் திருப்தியடையாத அரச தலைவர், இது தொடர்பான ஒழுங்குமுறையை தனக்கு உடன் அறியத்தருமாறு அறிவுறுத்தினார்.

போதைப் பொருள் கட்டுப்படுத்தல் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்த அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, விஜயதாச ராஜபக்ச, சாகல ரத்நாயக்கா ஆகியோரை உள்ளடக்கிய குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

(உ-5)

## யாழ்ப்பாணத்தில்...

இந்த அறிவிப்பு மக்கள் மத்தியில் மீண்டும் போர்ப் பீதியை ஏற்படுத்தியது. கெடுபிடிகளும் கொடுமைகளும் அரங்கேறப் போகின்றன என்ற அச்சம் மக்களைப் பீடித்தது. இந்த நிலையில் பாதுகாப்பு என்ற பெயரில் முப்படையினரையும் மீண்டும் களமிறக்கும் செயலை ஏற்கமுடியாது என்று கண்டித்துள்ளார் மாவை.

"அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் சிறந்த நிர்வாகத்தையும், நேர்மைப் பண்புகளையும் கொண்ட பொலிஸாரை வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நிறுத்தி போதைப் பொருள் கடத்தல், வாள்வெட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு முன்வரவேண்டும். பொலிஸார் நேர்மையாகச் செயற்பட்டால் வாள்வெட்டு குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தலாம். பொலிஸார் நேர்மையாகச் செயற்பட்டால், பொதுமக்களும் தங்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்குவார்கள். வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்த பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்" -என்றார். (உ-5)

## புளொட்டின்...

தெரிவித்திருந்தார். அதனையும் மீறி ஜெயசேகரம் இன்று பதவியேற்கிறார்.

இந்த ஆசனத்தை முறைகேடாக வழங்கும் தமிழ் அரசுக் கட்சியின் நடவடிக்கையை உடன் தடுத்து நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த நிலையிலும், ஆர்.ஜெயசேகரன் இன்றைய தினம் பதவியேற்கவுள்ளார்.

வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த இரண்டு நியமன ஆசனங்களில், ஓர் ஆசனம் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் பலருக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

இறுதி ஆண்டுக்குரிய ஆசனத்தை தமது கட்சிக்கு வழங்குமாறு புளொட் கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால் அந்த இடத்துக்கு ஜெயசேகரனை தமிழ் அரசுக் கட்சி நியமித்தது. இது அந்தக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாடு, என்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.வுக்கு இரண்டாவது தடவையாகவும் வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் முறையிட்டிருந்தார். இந்த விடயத்தில் உடன் தலையிட்டு ஜெயசேகரனின் நியமனத்தை இடைநிறுத்துமாறும் கேட்டிருந்தார்.

ஆனால் ஆர்.ஜெயசேகரன் இன்று மாலை 4 மணிக்கு, சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில், யாழ்ப்பாணம் வணிகர் கழத்தில் வைத்துப் பதவியேற்கவுள்ளார்.

(உ-5-8-101)

## மைத்திரி...

திருமதி விஜயகலா மகேஸ்வரன் நேற்று வாங்கு வாங்கு என்று வாங்கினார். கடுமையாகச் சாடினார்.

கொந்தளிப்பான அவரது பேச்சால், அதிகாரிகள் ஆடிப்போனார்கள். குழம்பிப் போனார்கள்.

மருதங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், இணைத் தலைவர்களான திருமதி விஜயகலா மகேஸ்வரன், அங்கஜன் இராமநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. கூட்டத்தின் ஆரம்பத்தில் உரையாற்றிய திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்ததாவது:

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெறாமையினால் பாதிக்கப்படுவது நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அதிகாரிகளோ அல்லர். மக்கள்தான். கூட்டங்கள் ஒழுங்காக நடக்காததால் ஒதுக்கப்படுகின்ற நிதி திரும்பிச் செல்கின்றது. எங்களது நிதி தென்பகுதிக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

14 மாதங்களுக்குப் பின்னர் மருதங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறுகின்றது. போகிற போக்கில் இந்தக் கூட்டத்தையும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வந்துதான் நடத்த வேண்டிய கட்டாயம் வரும்.

அரச தலைவர் மைத்திரிபாலவின் செயலகம் மாறுபாடான கருத்துக்களை வெளிப்படுத்தி வருவதே இதற்குக் காரணம். அரச தலைவரின் செயலகம் முரண்பாடான கருத்துக்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றது. அதனை அரச தலைவர் அனுப்புகின்றாரா, தலைமை அமைச்சர் அனுப்புகின்றாரா, அங்கு இருக்கின்ற அதிகாரிகள் அனுப்புகின்றனரா? நான் நினைக்கின்றேன், அங்கிருக்கின்ற அதிகாரிகள் மதுபான விருந்துகளுக்குச் சென்றுவிட்டு அலைபேசி மூலமாக மாறுபாடான தகவல்களை வழங்குகின்றார்கள் என்று.

இந்தப் பகுதி மக்கள் போரால் பாதிக்கப்பட்டார்கள். கடந்த அரசால் பாதிக்கப்பட்டார்கள். தற்போது கூட்டு அரசாலும் பாதிக்கப்படுகின்றனர். *(அந்த அரசில்தான் இவரும் அமைச்சராக இருக்கிறார்)*

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொலனறுவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பைச் சேர்ந்தவர். ஆனால் இந்தப் பகுதி அபிவிருத்தியை அவர்கள்தான் தீர்மானிக்கிறார்கள். யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தேசியப் பட்டியல் ஊடாகவும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களது கருத்துக்களைக் கட்டாயம் கேட்கவேண்டும். அரச தலைவரும், தலைமை அமைச்சரும் தங்கள் மாவட்டங்களை, மாகாணங்களை அபிவிருத்தி செய்துகொண்டு எங்களைக் கூலி ஆள்கள் போன்று, அவர்களுக்கு வேலை செய்பவர்கள் போன்று பயன்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனிப்பட்ட ரீதியில் சர்வாதிகாரம் செலுத்துவார் என்றால், நாங்கள் இதிலிருந்து விலகுகின்றோம். சர்வாதிகார ஆட்சி முறைக்கு நீங்கள் யாரும் துணை போகக் கூடாது.

**வித்தியா விவகாரம்**

சமூக வலைத்தளங்களினால் நான் பாதிக்கப்பட்டிருக்கின்றேன். நான் பிழை செய்யவில்லை. புங்குடுதீவு மாணவியின் படுகொலை நடந்த பின்னர், சந்தேகநபர் கட்டி வைக்கப்பட்ட இடத்துக்கு நான்தான் சென்றிருக்கின்றேன். அங்கு மூன்று மணித்தியாலம் காத்துக் கொண்டிருந்தும், பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒரு பொலிஸாரையும் அனுப்பவில்லை. மாணவி படுகொலைக்கு காரணமானவர்களின் பெயர்ப் பட்டியலை நான்தான் கொடுத்தேன் - என்றார்.

(உ-5-109)

## அரச...

சபை உறுப்பினர் சி.அகிலதாஸுக்குப் பதிலாக, நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அங்கஜன் மீளவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்த நியமனம் தொடர்பான சர்ச்சை குழப்பத்தினால் மாவட்டத்தின் 4 பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் உரிய திகதியில் நடத்துவதில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களுள் ஒருவராக, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். அரச தலைவர் செயலகத்தினால் அதில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ், ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டார். இதன் பின்பு கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழு ஒரு தடவை மாத்திரமே கூடியிருந்தது.

தற்போது, நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அங்கஜன் மீளவும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான அறிவித்தல் கடிதம் அரச தலைவர் செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தில் மாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் நீக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. இதனால் தானும் இணைத் தலைவராகத் தொடர்ந்தும் உள்ளதாக சி.அகிலதாஸ் கூறியுள்ளார்.

இதனையடுத்து யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால், அரச தலைவர் செயலகத்திடம் விளக்கம் கேட்கப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ், இணைத்தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார் என்று பதில் வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி, ஊர்காவற்றுறை, கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதில் இதன் காரணமாக இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

(5)

## இருவர்...

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் இரண்டு பொலிஸாரை கடந்த ஞாயிற்றுக் கிழமை, மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் வாளால் வெட்டியும், கைக்கோடாரியால் கொத்தியும் காயப்படுத்தியது.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில், மானிப்பாயைச் சேர்ந்த ஜீவராஜ் (வயது-23), கல்வியங்காட்டைச் சேர்ந்த மதுசன் (வயது-21) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாயில் தனு ரொக் குழுவினர் தன் மீது தாக்குதல் மேற்கொண்டனர் எனத் தெரிவித்து ஜீவராஜ் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். காயங்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமையே சேர்க்கப்பட்டார். அவர் சிகிச்சைபெற்று நேற்றுக் காலை வைத்தியசாலையிலிருந்து வெளியேறும்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த மதுசனை அவரது வீட்டுக்கு நேற்றுக் காலை சென்ற பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் இருவரும் முன்னாள் போராளிகள் அல்லர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் மீது வாள்வெட்டு நடத்திய முதன்மைச் சந்தே நபர் முன்னாள் போராளி என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5-8)

## ஆஸி...

உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீதான கொலை முயற்சியின் முக்கிய சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படும் ஆஸ்திரேலிய வாசியை நாடு கடத்துவதற்காக, விசாரணைக் குழுவினர் இந்த வாரம் அந்த நாட்டுக்குச் செல்லவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்ய முயற்சித்தமை, உயிராபத்தை ஏற்படுத்தும் வெடிபொருள்கள் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் முன்னாள் போராளிகள் சிலர் ஜனவரி மாதம் 15ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். இவர்கள் கிளிநொச்சி, வடமராட்சி மற்றும் மன்னாரைச் சேர்ந்தவர்கள்.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், கொலை முயற்சியின் முக்கிய சந்தேக நபர் ஆஸ்திரேலிய வாசி என்று கண்டறியப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸார் அதனைத் தெரியப்படுத்தியிருந்தனர்.

அந்த நாட்டு அரசின் மூலம் அவரை நாடு கடத்துவதற்கான முயற்சி தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவரை ஏன் நாடு கடத்த வேண்டும் என்ற ஆவணங்களுடன், இலங்கையிலிருந்து விசாரணைக் குழுவினர் இந்த வாரம் ஆஸ்திரேலியா செல்லவுள்ளனர். அந்த நாட்டு அரசிடம் ஆவணங்கள் கையளிக்கப்படும். ஆஸ்திரேலிய அரசு திருப்தியடைந்தால் சந்தேகநபர் நாடுகடத்தப்படுவார்.

(உ-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 2

**திக்கம் மத்தியின் கால்பந்தாட்டம்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கைதடி தெற்கு ச.ச.நி. கரப்பந்தாட்டம்**

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# சென். அன்ரனிஸ் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஓக. 2

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலினைப் பதிவு செய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளும் சமநிலை கண்டதால் நாணயச் சுழற்சியின் மூலம் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இருதயநாதர் அணி வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஓக. 2

மன்னார் மாவட்ட மட்ட ரீதியில் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடர் ஒன்றில் பனங்கட்டுக்கொட்டு இருதயநாதர் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

'ஏஏ' விளையாட்டுப் பொருள்கள் விற்பனை நிலையத்தால் நடத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதியாட்டம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு இருதயநாதர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் பனங்கட்டுக்கொட்டு இருதயநாதர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

சிறந்த வீரராக ஜோசவாஸ்நகர் ஐக்கிய அணியின் ஜோண்சனும், சிறந்த கோல்காப்பளராக பனங்கட்டுக்கொட்டு இருதயநாதர் விளையாட்டுக் கழக அணியின் கோல்காப்பாளர் ஜோர்ஜ், தொடராட்ட நாயகனாக ஜோச வாஸ் நகர் ஐக்கியத்தின் அஜித் ஆகியோர் தெரிவானார்கள். (ம-23)




# மட்டக்களப்பு பிறிலியன் அணி சம்பியன்



யாழ்ப்பாணம், ஓக. 2

வடக்கு, கிழக்கு மாகாண சிறப்புத் தேவையுடையவர்களுக்கான சத்தப் பந்து துடுப்பாட்டத்தில் மட்டக்களப்பு பிறிலியன் அணி சம்பியனானது.

ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற இறுதியாட்டத்தில், மட்டக்களப்பு பிறிலியன் துடுப்பாட்ட அணியை எதிர்த்து வன்னி விழிப்புலன் அற்றோர் துடுப்பாட்ட அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மட்டக்களப்பு பிறிலியன் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வன்னி விழிப்புலன் அற்றோர் துடுப்பாட்ட அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. மகிந்தன் 27 ஓட்டங்களையும், சுதர்சன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அமல் 3 இலக்குகளையும், மகேஸ்வரன், யோகராசா, நிசாந்தன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

104 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு பிறிலியன் அணி 14 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குக்ளையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மோகன்ராஜ் 28 ஓட்டங்களையும், தினேஸ் 15 ஓட்டங்களையும், நிசாந்தன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)

# தேசியமட்ட அஞ்சலோட்டம்

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான அஞ்சலோட்ட நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இதில் 12 வயதுப் பிரிவினருக்கு 4 நபர்கள் பங்குபற்றும் 50 மீற்றர் 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டங்களும், 14 வயது மற்றும் 16 வயதுப் பிரிவினருக்கு 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 200 மீற்றர் மற்றும் 4 நபர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டங்களும், 18 வயது மற்றும் 20 வயதுப் பிரிவினருக்கு 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 200 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் மற்றும் 4 நபர்கள் பங்குபற்றும் 800 மீற்றர் அஞ்சல் ஓட்டங்களும் இடம்பெறவுள்ளன. கலப்பு அஞ்சலோட்டமும் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற வரும் வெளிமாவட்டப் பாடசாலைகளின் மாணவர்கள் தங்குவதற்காக ஆண்களுக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகியனவும் பெண்களுக்கு வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மற்றும் கனகரத்தினம் ம.வி. ஆகியனவும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. (ம-108)



# திக்கம் இளைஞர் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 2

உதயதாரகையின் கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.


இரண்டாம் பாதியிலும் அதே நிலைமைதான்.

சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் திக்கம் இளைஞர் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. திக்கம் இளைஞரின் உமேஸ் ஆட்டநாயகனானார். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலிய வீரர்களுக்கு ஒப்பந்தங்கள் தராதது ஏன்?

சிமித் முழக்கம்



ஊதிய ஒப்பந்தம் தொடர்பில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையில் கருத்து மோதல்கள் நீடித்துவரும் நிலையில் இந்த விவகாரம் தொடர்பில் சில காரசாரமான கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளார் ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கும் அந்த நாட்டு கிரிக்கெட் சபைக்கும் இடையிலான ஒப்பந்தம், கடந்த மாதம் முதலாம் திகதியுடன் நிறைவடைந்துள்ள நிலையில், புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடும் வரையில், கிரிக்கெட் தொடர்களில் பங்குபற்றப் போவதில்லை என வீரர்கள் அறிவித்திருந்தனர். இதனால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையில் மிகப் பெரும் குழப்பநிலை நிலவியது. தற்போதும் அந்தக் குழப்பநிலைகள் அப்படியேதான் உள்ளன என்று குறிப்பிடுகிறார் சிமித்.

"உலகின் ஆகச் சிறந்த கிரிக்கெட் அணிகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்று. ஒவ்வொரு வீரர் மற்றும் வீராங்கனைகளின் விடாமுயற்சி, உழைப்பு என்பன இதில் உள்ளன. ஆனால் எமக்கான ஒப்பந்தத்தை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை வழங்காது பின்னடிப்பது ஏமாற்றம் தருகிறது. ஆஸ்திரேலியாவில் உள்ளூர் கிரிக்கெட்டை வளர்ப்பதற்காக குறிப்பிட்ட தொகைப் பணத்தை எமது ஒப்பந்தங்களில் இருந்து எடுத்துக்கொள்வது என்று திட்டமிடப்பட்டது. நாம் குறிப்பிட்ட தொகையை விட்டுக் கொடுக்க முன்வந்த போதிலும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை எமது கருத்துக்களை ஏற்கத்தயாராகவில்லை. பெருந்தொகைப் பணத்தை எம்மிடம் இருந்து எடுத்துக்கொள்ள எத்தனிக்கிறது. கருத்து முரண்பாடுகள் ஒருபுறம் இருந்தாலும் மறுபுறத்தில் பயிற்சிகள் தொடர்ந்துகொண்டேதான் உள்ளன" என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)




# 2028 ஒலிம்பிக் அமெரிக்காவில்

நடத்துகிறது லொஸ்ஏஞ்சல்ஸ்

2028ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் தொடரை நடத்தும் உரிமத்தைப் பெற்றது அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ்.

ஒலிம்பிக் தொடரை நடத்தும் உரிமத்தைக் கைப்பற்றுவதற்கான போட்டி உலக நாடுகளிடையே மிகக் கடுமையாக நடைபெறும். கடந்த ஒலிம்பிக் தொடரை பிரேசில் நடத்தியது. அந்த நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் இந்தத் தொடர் நடைபெற்றது. அடுத்த ஒலிம்பிக் தொடரை நடத்தும் உரிமத்தை ஜப்பான் கொண்டுள்ளது. டோக்கியோ நகரில் இந்தத் தொடர் நடத்தப்படவுள்ளது. இந்த வரிசையில் எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் தொடரை பிரான்ஸ் நடத்தவுள்ளது. அந்த நாட்டின் தலைநகர் பரிஸில் தொடர் நடைபெறவுள்ளது. இந்த வரிசையில் எதிர்வரும் 2028ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரை எந்த நாடு நடத்தும் என்ற போட்டியில் அமெரிக்கா வெற்றி பெற்றுள்ளது. இதன்படி லொஸ்ஏஞ்சல்ஸ் நகரம் தொடரை நடத்தவுள்ளது. (ம)

# ஹங்கேரி பந்தயம் வென்றார் வெட்டல்

உலக கார்பந்தயத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஹங்கேரி சுற்றில் ஜேர்மனிய வீரரான வெட்டல் வெற்றிபெற்றார்.

இரண்டாம் இடத்தை பிரிட்டன் வீரர் கமில்டன் பெற்றார். மூன்றாம் இடத்தை பின்லாந்து ஓட்டுநரான போத்தாஸ் தனதாக்கினார்.

ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் வெட்டல் 202 புள்ளிகளுடனும், கமில்டன் 188 புள்ளிகளுடனும், போத்தாஸ் 169 புள்ளிகளுடனும் முதல் மூன்று இடங்களில் உள்ளனர். (ம)



# பூநகரி சிறி விக்னேஸ்வரா வித்தியாலயம் பளுதூக்கல் போட்டியில் வரலாற்று அடைவு

கிளிநொச்சி, ஓக. 2

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் தொடரில், பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு இம்முறை கணிசமான அளவு பதக்கங்கள் கிடைத்தன.

யாழ். இந்துக் கல்லூரியில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 18வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 45 கிலோ எடைப்பிரிவில் பூநகரி சிறி விக்னேஸ்வரா வித்தியைப் பிரதிநிதித்துவம் செய்தசி.கதிரவன்63கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கத்தை வென்றார். இதே வயதுப் பிரிவில் இ.தமிழரசன் 60 கிலோ பளுவைத்தூக்கி வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். 18 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் ச.ஜனுசா 58 கிலோ எடைப்பிரிவில் 48 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும், கே.நிறோஜினி 63 கிலோ எடைப்பிரிவில் 51 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)



# கேரத், சந்திமல் தொடர்பில் இன்று இறுதி முடிவு



இந்தியாவுக்கு எதிராக நாளை நடைபெறவுள்ள டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணியின் தலைவர் சந்திமல், பொறுப்புத் தலைவர் கேரத் இருவரும் விளையாடுவது குறித்து இன்று இறுதி முடிவு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காலியில் முதலாவது டெஸ்ட் ஆட்டம் நடைபெற்றது. காய்ச்சல் காரணமாக சந்திமல் அணியில் இருந்து விலகியிருந்தார். இதனால் பொறுப்புத் தலைவராக கேரத் செயற்பட்டார். இந்த ஆட்டத்தின் மூன்றாம் நாளின் மூன்றாவது செசனில் களத்தடுப்பில் ஈடுபட்டபோது கேரத்தின் கையில் காயம் ஏற்பட்டது. [illegible] அவர் அந்த ஆட்டத்தின் பாதியில் விலகினார். இலங்கை அணிக்காக இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட கேரத் வரவில்லை. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டம் கொழும்பில் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான இலங்கை அணி வீரர்களின் உடல்தகுதிகாண் பரிசோதனை இன்று நடைபெறுகிறது. எனவே சந்திமல், கேரத் தொடர்பில் உறுதியான முடிவுகள் இன்றே தெரியவரும்.

அசல குணரட்ன காயம் காரணமாக விலகியுள்ளதால், திரிமன்ன அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். கேரத் விலகச் சந்தர்ப்பம் உள்ளதால் சண்டகன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றென்னிஸ் தரப்படுத்தல்; அன்டி முர்ரே முதலிடம்



பன்னாட்டு றென்னிஸ் தரப்படுத்தல் நேற்றுப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பிரிட்டன் வீரர் முர்ரே தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார். சேர்பிய வீரர் ஜோகோவிக் பின்னடைவைச் சந்தித்து தற்போது 5ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற ஒலிம்பிக் தொடர் வரை ஜோகோவிக் முதலிடத்தில் இருந்து வந்தார். பின்னர் அவர் பின்னடைவைச் சந்தித்தார். அதேநேரம் முர்ரே தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து முதலிடம் பிடித்தார். முர்ரே முதலிடம் பிடிப்பதற்கு நட்சத்திர வீரர்களான நடால் மற்றும் பெடரர் இருவரும் காயம் காரணமாக கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் விலகியிருந்தமையும் முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது.

எனினும் தனது முதலிட அந்தஸ்தை சுமார் ஒரு வருடங்களாக தொடர்ந்தும் தக்கவைத்து வருகிறார் முர்ரே.

நேற்று வெளியான புதிய தரப்படுத்தலின்படி, 7ஆயிரத்து 750 புள்ளிகளுடன் அவர் தற்போது முதலிடத்தில் உள்ளார். ஸ்பெய்ன் வீரர் நடால் 7 ஆயிரத்து 465 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், சுவிற்சர்லாந்து வீரர் பெடரர் 6ஆயிரத்து 545 புள்ளிக ளுடன் மூன்றாவது இடத்திலும், சுவிற்சர்லாந்து வீரர் வாவ்ரிங்கா 5 ஆயிரத்து 780 புள்ளிகளுன் நான்காவது இடத்திலும், சேர்பிய வீரர் ஜோகோவிக் 5 ஆயிரத்து 325 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (ம)

# டோனியின் பாதையில் செல்கிறாராம் கோக்லி

## ரவிசாஸ்திரி கண்டுபிடிப்பு

டோனி அமைதியான குணம் கொண்டவர், கோக்லி ஆக்ரோசமானவர் இதுவே கிரிக்கெட் விமர்சகர்கள், ரசிகர்கள், பன்னாட்டு ஊடகங்கள் ஆகிய தரப்புக்களின் பொதுமைப்படுத்தப்பட்ட கருத்தாக இருந்துவரும் நிலையில், டோனியின் பாதையில் கோக்லி செல்கிறார் என்றவாறாக குறிப்பிட்டுள்ளார் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு எழுதிய கட்டுரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'டோனியின் தலைமையில் இந்திய அணி அத்தனை கிண்ணாங்களையும் வென்றுள்ளது. ஓர் பயிற்சியாளராக அவரை நினைத்துப் பெருமைப் படுகிறேன். ஆனால் அவர் பதவி விலகியதை அடுத்து கோக்லி, டோனியின் பணிகளைச் செவ்வனே செய்து வருகிறார். அனைத்து வகையிலும் டோனியின் பாதையில் கோக்லி செல்கிறார்' என ரவி சாஸ்திரி மேலும் குறிப்பிட்டார். (ம)



போர்த்துக்கல் கால்பந்து அணியின் தலைவர் றொனால்டோ தற்போது ஓய்வில் உள்ளனர் உலகின் பல்வேறு நாடுகளுக்கு தற்போது சுற்றுப்பயணம் செய்கிறார். கடந்த வாரம் அவர் சீனாவுக்குச் சுற்றுப்பயணம் செய்திருந்தார். பீஜிங் நகரில் அவருக்கு மகத்தான வரவேற்பு கொடுக்கப்பட்டது. (ம)

# 6 பந்துகளில் 6 சிக்சர்கள்

## பாண்டியாவின் கனவு

"6 பந்துகளில் 6 சிக்சர்கள் விளாசுவது என்பது எனது கனவுகளில் ஒன்று" இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் அதிரடி வீரர் பாண்டியா.

காலி டெஸ்ட் ஆட்டம் தொடர்பாக வழங்கிய செவ்வி ஒன்றிலேயே பாண்டியா இவ்வாறு குறிப்பிட்டார். "டெஸ்ட் ஆட்டங்களில் களமிறங்கினாலும் ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் அடித்தாடவே மனம் எத்தனிக்கிறது. 6 பந்துகளில் 6 சிக்சர்களை விளாச வேண்டும் என்பது எனது கனவுகளில் ஒன்று. இதுவரை நான் தொடர்ச்சியாக மூன்று சிக்சர்களை அடித்துள்ளேன். விரைவில் 6 சிக்சர்கள் அடிப்பேன்" என பாண்டியா மேலும் தெரிவித்தார். (ம)

# ஆஷஸ் தொடரை ஆஸி. கைப்பற்றும்

## கிளார்க் நம்பிக்கை



நடப்பு வருட ஆஷஸ் தொடரில் ஓர் ஆட்டதிலேனும் தோல்வியடையாமல் 5:0 என்ற அடிப்படையில் ஆஸ்திரேலியா கிண்ணம் வெல்லும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார் அந்த அணியின் முன்னாள் தலைவர் கிளார்க்.

ஆஸ்திரேலிய ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தக் கருத்தை முன்வைத்தார்.

"ஆஸ்திரேலிய அணி மிகவும் பலமான நிலையில் உள்ளது. இங்கிலாந்துடன் ஒப்பிடுகையில் அந்த அணி தற்போது மிகவும் பலமாக உள்ளது என்பது அப்பட்டமான உண்மை. நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணி சிறந்த வெற்றியைப் பெறவேண்டும். அணியாக இணைந்து சிறப்பாக விளையாடினால் இந்த வெற்றி சாத்தியமே. 5:0 என்ற வெற்றியையே ஆஸ்திரேலிய வீரர்கள் இலக்கு வைக்க வேண்டும்" என கிளார்க் மேலும் தெரிவித்தார். (ம)


**முகாமைத்துவ உதவியாளர் தேவை**

வெளிநாட்டு மொழி கற்பிக்கும் நிறுவனத்துக்கு A/L 3 பாடங்கள் சித்தியுடன் 6KM இற்குள் வசிக்கும் பெண்கள் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளோர் நாளை (03.08.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு CV யுடன் நேரில் வரவும்.

No.40, Palaly Road, ஆரியகுளம்.
077 978 9456

**KBK ACCOUNTING CENTRE**
(பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கான நிலையம்)

| புதிய பிரிவு ஆரம்பம் | கொழும்புத்துறை 05/08/2017 - Sat | கந்தர்மடச்சந்தி 08/08/2017 - Tue |
| --- | --- | --- |
| A/L 2018 | Sat Sun } 4 - 6p.m | Tue Fri } 3 - 5p.m |
| A/L 2019 | Sat Sun } 2 - 4p.m | Tue Fri } 5 - 6p.m |
| தரம்10,11 | வணிகக்கல்வியும் கணக்கீடும் Sat & Sun -12 - 2pm | Paper Class |

Accounting Teacher
Mr. BALAKAJEN
உங்கள் தொடர்புகளுக்கு: 076 565 5956
வகுப்புக்கள் சிறப்பாக ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

**காரியாலய உதவியாளர் தேவை**

நெல்லியடியில் இயங்கும் உதயன் நிறுவனத்தின் கிளைக் காரியாலயத்துக்கு காரியாலய உதவியாளர் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் **06.08.2017 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நெல்லியடி கிளைக் காரியாலயத்துக்கு நேரில் சமுகம் தரவும்.**
உதயன் நெல்லியடிக்கிளை, இல. 55 பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**FRENCH LANGUAGE CENTRE**

பிரெஞ்சு வகுப்புக்கள்
France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளரிடம் இலகுவான முறையில் French கற்றுக் கொள்ளுங்கள். (ஆங்கில அறிவு அவசியமில்லை)
2006 முதல் இன்றுவரை 1291 மாணவர்கள்.
DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
பலாலி வீதி, ஆரியகுளம் ஆரம்பம்:05.08.17சனி 8am 0779 789 456 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி ஆரம்பம்:14.08.17 திங்.4pm 021 320 2973
IELTS Life SkillsA1,B1 வகுப்புக்களும்.....
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்[illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

TVS

TVS wego 110

BEYOND BOUNDARIES

5 WARRANTY LEADER



BODY BALANCE | DIGITAL SPEEDOMETER | SYNC | EXTERNAL FUEL FILL | FULL METAL BODY | USB CHARGER

Rs. 238,900/- முதல்

BEST CLASS MILEAGE 62 CVTi TECHNOLOGY

தொடர்பு
இந்திக - 0774 636 345 - கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டம்
ரங்கநாத - 0777 283 095 - காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி மாவட்டம்
ஹர்ஷ - 0773 497 641 - கம்பஹா | கேகாலை | கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டம்
ஜனக - 0771 507 552 - குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டம்
ரவீந்திர - 0777 215 746 - அநுராதபுரம் | பொலன்னறுவை மற்றும் மாத்தளை மாவட்டம்
ஜீவன் - 0772 057 660 - பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டம்
நீல்காந்த் - 0773 748 155 - அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டம்
றொஹான் - 0777 782 739 - யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டம்
கனேஷ் - 0777 419 411 - திருகோணமலை மாவட்டம்
றினோஷான் - 0773 358 305 - மன்னார் மற்றும் வவுனியா மாவட்டம்

www.tvslanka.lk www.facebook.com/TVSLanka.lk



"The Best Brand of The Year 2016"

* நிபந்தனை உள்ளது

TVS 0114 600 500



Mahindra Rise.

MAHINDRA TWO WHEELERS

## மஹிந்த்ரா மோட்டார் சைக்கிள் விற்பனை மற்றும் சேவை முகவர்கள்

மோட்டார் வாகன (விற்பனை, சேவை மற்றும் மேலதிக பாகங்கள்) பிரதான, போக்குவரத்து, மின் பிறப்பாக்கி உட்பட பல்வேறு துறைகளில் விசுவாச நாமத்தை வென்ற **IDEAL** வணிக குழுமத்தினர் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர் குழாமினை கொண்டிருப்பதோடு, விற்பனை வருமானம் 20 பில்லியன் ரூபாவை எட்டும் உள் நாட்டின் பிரதான வணிக குழுவாகும்.

மஹிந்த்ரா மோட்டார் வாகனத்தின் வெற்றிப் பாதையில் மஹிந்த்ரா மோட்டார் சைக்கிள் விற்பனை, சேவை மற்றும் மேலதிக பாகங்களை வழங்குவதில் மோட்டார் சைக்கிள் துறையினை புதிய வழிக்குள் இட்டுச் செல்வதே **IDEAL** வணிக குழுமத்தின் அடுத்த பிரதான இலக்காகவுள்ளது.

இப்பணியில் நீங்களும் எங்களோடு இணைந்து கொள்ள முடியும்.

எம்மிடமிருந்து
- குறைவான ஆரம்ப கட்டணத்தின் கீழ் மோட்டார் வாகனத்தை விற்பனை செய்யும் பிரதான வசதி
- கொள்வனவாளர்கள் பாவிக்கும் மோட்டார் வாகனத்தை பெற்றுக் கொண்டு புதிய வாகனத்தை விற்பனை செய்யும் வசதி
- வியாபாரத்தின் முன்னேற்றம் கருதி கவர்ச்சிகரமான விற்பனை முன்னெடுத்தல் செயற்பாடுகள்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்ப பயிற்சிகள்

உங்களிடமிருந்து
- பிரதான பாதைக்கு கிட்டியதான டைல் பதிக்கப்பட்ட காட்சியறை
- வங்கி பிணை
- பயிற்சி பெற்ற / பயிற்சி பெறாத ஊழியர்கள்







விற்பனை, சேவை மற்றும் மேலதிக பாகங்கள் எனும் முப்பெரும் சேவைகளை மற்றும் பிரதான வசதிகளை வழங்கத்தக்க விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



இவ்விடயத்தில் உங்களுக்கு உதவி செய்ய நாம் ஆயத்தமாக உள்ளோம்....... அழையுங்கள்,

மாவட்டம்
- யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு - தர்ஷன் மயில்வாகனம் - 077 9877118

Mahindra Rockstar 110cc | Mahindra GUSTO | Rodeo UZO 125

துரித அழைப்பு முகவர் வலையமைப்பு 0774 500 956

IDEAL Mahindra SERVICE 0777 20 70 70

Ideal Motors (Pvt) Ltd.
No. 60, Maligawatta Road, Ratmalana.
Tel: 0117 855 600
Fax: 0117 855 601
IDEAL Motors


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Softlogic Finance தங்க கடன்

**அவசர பணத்தேவைக்கு உங்கள் தங்கப் பவுணுக்கு அதிகூடிய முற்பணம்**

- முன்கூட்டிய அறிவித்தலின்றி தங்கநகைகளை துரிதமாக மீட்கும் வசதி
- தங்க நகைகளுக்கு பூரண பாதுகாப்பு
- செயற்றிறன் மிக்க சினேகபூர்வமான ஊழியர்கள்
- பகுதிக் கொடுப்பனவுகள் செய்யும் வசதி
- தெரிவுசெய்வதற்கு முற்பண கொடுப்பனவு முறைமைகள் பல



24 கரட் ரூ. **45,500/-**

22 கரட் ரூ. **38,000/-**

சுன்னாகம் - 0722 527664, 0212 242775
யாழ்ப்பாணம் - 0722 334596, 0212 219444

*நிந்தனைகளுக்குட்பட்டது

விஜயம் செய்திடுங்கள்

## சர்வதேச பிளாஸ்டிக் கண்காட்சி

பிளாஸ்டிக் தொழிற்துறை... எவராலும்
எந்நேரத்திலும் | எவ்விடத்திலும் | எவ்வளவிலும்
இலகுவாய் ஆரம்பித்திடலாம்

4th கட்டம்

## COMPLAST
முழுமையான பிளாஸ்டிக் கண்காட்சி
இ ல ங் கை

3 - 5 ஆகஸ்ட் 2017
BMICH கொழும்பு
நேரம்: மு.ப 10.00 - பி.ப 6.00

CEO FORUM 17
ஆகஸ்ட்3, 2017 | நேரம்: மு.ப 11

கருத்தரங்கு
APPLICATION OF MASTERBATCHES
ஆகஸ்ட்4, 2017 | நேரம்: மு.ப 10

முற்பதிவுகளை மேற்கொள்வோர் மட்டுமே பங்கேற்கலாம்

130 கண்காட்சியாளர்கள்
10 நாடுகள்
இயந்திரங்களின் நேரடி செயற்பாட்டு காட்சிகள்

அழைப்பிதழ் / வணிக அட்டையுடன்
நுழைவு இலவசம்.
மற்றவர்களுக்கு ரூ.100/-

ஏற்பாடு: ENTERPRISING FAIRS | INDIA
இணை ஏற்பாடு: The Plastics & Rubber Institute of Sri Lanka
ஆதரவு: NSIC ISO 9001 : 2008

PLATINUM SPONSOR
GOLD SPONSORS
hilda
PLASTIBLENDS Merging Ideas

Hero

# சாமர்த்தியமான சிந்தனையின்
# ஆற்றல்

**வழங்குகிறோம். புதுப்பொலிவுடன் புதிய 110CC ஸ்பிளெண்டர் ஐ ஸ்மார்ட் மோட்டார் சைக்கிளை,**

i3s technology இருப்பதனால் idel நிலையில் தானியக்கமாக என்ஜின் அணைந்து கணிசமான அளவு எரிபொருளை சேமிக்கிறது. அதேபோல் Smart Power மற்றும் Torque-on-Demand சிறப்பம்சம் மூலம் என்ஜின் அதிர்வின்றி சீரான மற்றும் சொகுசான ஓட்டத்தை தருகிறது. மேலும்(AHO)ஒன்லைட் தொழில்நுட்பம் முழுமையான பாதுகாப்பை உறுதிசெய்கிறது.

உண்மையில் இது உங்கள் நம்பகமான தோழனாக இருக்கும். அதுவே சாமர்த்தியமான சிந்தனையின் ஆற்றலாகும்.

splendor iSmart 110
It's Smart Thinking



SMART i3S TECHNOLOGY
TORQUE ON DEMAND ENGINE
5 WARRANTY

ரூ. 235,000/-

☎:011 5 777 000
R.G. டிரேடர்ஸ் - 0777 340056
அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற ஹீரோ முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org